YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
ஜன 14 - 20
ஓசை : 01 | நாதம் : 11 | வெள்ளிக்கிழமை 14.01.2011 | வார இதழ் | விலை : ரூபா 15.00

# தவறான பிரசாரத்தில் தமிழ் ஊடகங்கள்

யாழ்ஓசை வாசகர்களுக்கு...




## இனக்குரோதத்தை ஏற்படுத்தக்கூடாது -ஜனாதிபதி

நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்த நிலையில் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் இன நல்லுறவும் புரிந்துணர்வும் ஏற்பட்டுள்ளது. நீண்டகாலமாக இருந்த இனக்குரோதம், முடிவுக்கு வந்து இன நல்லுறவு நிலவுகின்றது. எனவே, மீண்டும் இனக்குரோதத்தை ஏற்படுத்த எவரும் முயலக்கூடாது. உடலில் ஏற்பட்ட புண்ணை ( 6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகத்துக்கிடமாக நடமாடிய 4 இளைஞர்கள் மடக்கிப்பிடிப்பு

சங்கானை,

சங்கானை-பாரதி வீதியில் இரவு 9.00 மணிக்கு மேல் நடமாடிய நான்கு இளைஞர்கள் அப்பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். குறிப்பிட்ட வீதியில் அங்கும் இங்குமாக நடந்துதிரிந்த நால்வரை பொதுமக்கள் பிடித்து விசாரித்துள்ளனர். அவர்களிடம் இருந்து ( 6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் நடைபெற்ற குற்றச்செயல்களுக்கு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் காரணமல்ல

### யாழ். மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்

சங்கானை,

யாழ். குடாநாட்டில் கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் பொலிஸாராகிய நாங்கள் உள்ளோம். இதேவேளை, யாழ். குடாநாட்டில் அண்மையில் நடைபெற்ற குற்றச் செயல்களுக்கு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் காரணமல்ல என யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அபயசிங்க பண்டார தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட பொது மக்கள் - பொலிஸார் கலந்துரையாடல் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி புதன்கிழமை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. ( 6 ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் படுகொலை தொடர்பில் பிரதமர் உடன் தலையிட வேண்டும்

## முதல்வர் கருணாநிதி அவரச கடிதம்



சென்னை, தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவம் தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் கருணாநிதி அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தச் சம்பவத்தால் தமிழகம் கொந்தளிப்படைந்துள்ளதாகவும் தமிழர்கள் அனைவரும் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடத் தயாராகிவரும் நிலையில் தரங்கம்பாடியைச் சேர்ந்த பாண்டியன் என்பவர் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய மீனவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பில் உடனடியாக இந்திய அரசு இலங்கை அரசுடன் பேசவேண்டும். இலங்கை கடற்படையின் அட்டகாசம் அளவுக்கு மீறி போய்க்கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

முன்னதாக நேற்று சட்டசபையில் இந்த விவகாரத்தை அ.தி.மு.க. எழுப்பியது. அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகையில், தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கைப் படையினரின் செயல்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக பெருமளவில் அதிகரித்துள்ளன.

ஆனால், மாநில அரசும் சரி மத்திய அரசும் சரி, எந்த நடவடிக்கையை எடுக்காமல் உள்ளது கண்டிக்கத்தக்கது. வெறுமனே மத்திய அரசுக்கு கடிதம் எழுதிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு உரிய நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தரங்கம்பாடியைச் சேர்ந்த பாண்டியன் என்ற மீனவரே கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தின்போது அதிஷ்டவசமாக உயிர்தப்பிய பாண்டியனுடன் இருந்த மீனவர் மணிவேல் கூறுகையில் நேற்றுமுன்தினம் காலை 7 மணிக்கு நாங்கள் கடலுக்குள் சென்றோம். அப்போது மாலை 5 மணியளவில் இலங்கைப் படையினர் அங்கு வந்தனர். வந்த வேகத்தில் எங்களது படகை நோக்கி சரமாரியச் சுட ஆரம்பித்தனர்.

இதில் பாண்டியன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார். அதன் பின்னர் படையினர் அங்கிருந்து போய்விட்டனர். நாங்கள் பாண்டியனின் உடலுடன் கரைக்கு விரைந்தோம் என்றார்.

# பஸ்ஸும் வேனும் மோதி விபத்து 6 பேர் உயிரிழப்பு; 8 பேர் படுகாயம்

(எம். நேசமணி)

அவிசாவளை-கொஸ்கம பொலிஸ் பிரிவில் தனியார் பஸ்ஸும் வேனும் மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் பலியானதுடன் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர். நேற்று அதிகாலை 3.55 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வலஸ்முல்லையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும் ஹங்வெல்லையிலிருந்து குருவிட்ட பகுதியை நோக்கி பயணித்த வேனுமே ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

ஹங்வெல்ல பகுதியில் இடம்பெற்ற மரணச்சடங்கொன்றுக்குச் சென்றுவிட்டு வேனில் திரும்பிக்கொண்டிருந்தவர்களே இவ்வாறு பலியாகியுள்ளனர். சம்பவத்தின்போது 5 பேர் ஸ்தலத்தில் பலியானதாகவும் மற்றொருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயங்களுக்குள்ளான எட்டுப் பேரில் ஏழு பேர் அவிசாவளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதுடன் மற்றொருவர் அவசர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியாசலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# சுட்டுக்கொல்லப்பட்ட மீனவர் குடும்பத்துக்கு ரூ. 5 இலட்சம் நிதியுதவி; சகோதரிக்கு அரச வேலை

## துணை முதல்வர் ஸ்டாலின்

சென்னை, கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட தரங்கம்பாடி மீனவர் பாண்டியன் குடும்பத்திற்கு ரூ. 5 இலட்சம் நிவாரண உதவி அளிக்கப்படும். அவரது சகோதரிக்கு அரசு வேலை அளிக்கப்படும் என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மீனவர் பாண்டியன் கொடூரமாக கொல்லப்பட்ட விவகாரம் நேற்று சட்டசபையில் எழுப்பப்பட்டது.

அ.தி.மு.க., இடதுசாரிகள், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க. மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இது குறித்துப் பேசினர். இதற்குப் பதில் அளித்து ஸ்டாலின் கூறியதாவது:- நாகை மாவட்டம் தரங்கம்பாடியை அடுத்த சின்னங்குடியைச் சேர்ந்த மீனவர் பாண்டியன் என்பவர் ஜெகதாப்பட்டினம் அருகே மீன் பிடிக்கச் சென்றிருந்த போது அவரை இலங்கை கடற்படையினர் சுட்டதால் உயிரிழந்திருக்கிறார்.

இதனால், அந்த பகுதி மீனவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக் கூடிய கொந்தளிப்பு குறித்து இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் இங்கே தங்களுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அந்த கருத்துக்களோடு அரசின் சார்பில் எங்களுடைய உணர்வு நிச்சயமாக இருக்கிறது என்று இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும் என்று நம்புகிறேன். ஆகவே அந்த வகையிலே அரசின் சார்பிலே ஒரு விளக்கத்தை இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

12.1.2011 காலை 6 மணி அளவில் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன்பிடித் தளத்திலிருந்து காரைக்கால்-கிளிஞ்சல் மேட்டைச் சேர்ந்த ஆனந்தராஜ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகு ஒன்றில் பாண்டியன் உள்ளிட்ட நான்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். மாலை 5 மணி அளவில் ஜெகதாப்பட்டினத்திற்கு கிழக்கே சுமார் 15 கடல் மைல்தூரத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இதில் பாண்டியன் குண்டடிபட்டு காயம் அடைந்திருக்கிறார். உடன் இருந்த மீனவர்கள் காயமடைந்த பாண்டியனை கரைக்கு அழைத்துவந்து மணல்மேல்குடி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றிருக்கிறார்கள்.

இதனையடுத்து மீனவர் சுமார் 100 பேர் பாண்டியனின் பிரேதத்தை ஜெகதாப்பட்டினம் கிழக்கு கடற்கரை சாலையிலே வைத்து நடவடிக்கை எடுக்கக் கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர்.

மாவட்ட நிர்வாகத்தினர் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியும், இறந்து போன பாண்டியன் குடும்பத்தாருக்கு ரூ.5 இலட்சம் நிவாரண தொகை வழங்கப்படும். மேலும் அவரது சகோதரி ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு அளிப்பதாகவும் உறுதியளித்ததின்பேரில் சாலை மறியலை கைவிட்டனர்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு உதவிசெய்ய அனைவரும் முன்வர வேண்டும்

## சிறீதரன் எம்.பி.

பெரும் வெள்ளப்பெருக்கால் மரணத்தின் விளிம்பில் இருக்கும் கிழக்கு மாகாண மக்களுக்கு உதவிசெய்ய வடக்கு மாகாண மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு முன்வர வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பல்விதமான துன்ப நிலைக்குத் தள்ளப்பட்டு வாடுகின்ற மக்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் ஒரு தொகை நிதியினை யாழ்ப்பாணம் , கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பாக வழங்கிவைத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் இயற்கையின் சீற்றத்தால் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் பெரும் துன்பங்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். போக்கவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்டு மக்கள் உணவின்றி மரண விளிம்பில் இருக்கின்றார்கள். இந்த நிலையில் அவர்களின் துன்பங்களைப் போக்குவதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தினர் யாழ்.குடாநாட்டு மக்களிடம் உதவி கோரியிருக்கின்றனர். உதவியினை செய்யவிரும்பும் உறவுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யமுடியும் - என்றார்.

# கோத்தபாயவுக்கு நோட்டீஸ்

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகின்ற வெள்ளைக்கொடி விவகார வழங்கில் சாட்சியமளிப்பதற்கு வருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி டிலான் ரத்னாயக்க நீதிமன்றத்திடம் நேற்று வியாழக்கிழமை கோரிநின்றார்.

வடக்கில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக்கொடியுடன் சரணடைவதற்கு வருகைதந்த விடுதலைப்புலிகள் அமைப்பைச்சேர்ந்த முக்கியஸ்தர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் சுட்டுக்கொல்லப்பட்டதாக முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா கூறியதாக சண்டே லீடர் பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகின்றது.

மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர தலைமையிலான எச்.என்.பி.பி வராவெவ, சர்பிக் ரஷீன் ஆகிய நீதிபதிகள் குழு முன்னிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ட்ரயல் அட்பார் முறையில் நடைபெற்றுவருகின்ற வெள்ளைக்கொடி விவகார வழக்கின் விசாரணையின் போதே அரச சட்டதரணி மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார். அத்துடன் வழக்கு விசாரணையையும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் மூழ்கியது பிரிஸ்பேன்: 24 பேர் உயிரிழப்பு 95 பேர் காணாமல் போயுள்ளனர்




அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் ஆற்றின் கரை உடைந்ததால் நேற்று முன் தினம், பிரிஸ்பேன் நகரம் வெள்ளத்தில் மூழ்கியது. நூறாண்டுகளுக்குப் பின் நடந்த இந்த பேரழிவில், 30 ஆயிரம் வீடுகள் நீரில் மூழ்கின. ஒரு லட்சம் வீடுகள் மற்றும் பல்வேறு இடங்களில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு, நகரின் ஒரு பகுதி இருளில் மூழ்கியது. இந்த வெள்ளத்தில் சிக்கி, 24 பேர் உயிரிழந்துள்ளனர். 95 பேர் காணாமல் போயுள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாண தலைநகர் பிரிஸ்பேனில் 20 லட்சம் பேர் வசிக்கின்றனர். இந்நகரின் அருகில் ஓடும் பிரிஸ்பேன் ஆற்றில், கனமழை காரணமாக நேற்று முன்தினம் நீர்மட்டம் அதிகரித்தது. இது குறித்த எச்சரிக்கை கடந்த இரு நாட்களுக்கு முன்பே அறிவிக்கப் பட்டிருந்தது. இதற்கிடையில், நேற்று முன்தினம் திடீரென ஆற்றின் கரை உடைந்தது. வெள்ளம் நகருக்குள் புகுந்தது. 1893ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்திற்குப் பின், இப்போது தான் மிகப் பெரிய அளவில் பிரிஸ்பேன் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

பல வீடுகள், உணவு விடுதிகள், கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஐம்பதுக்கும் மேற்பட்ட புறநகர் பகுதிகள் மற்றும் 2,100 சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தொடர்ந்து பெய்து வரும் கனமழையால், நீர்மட்டம் 16.6 மீற்றர் உயரம் வரை அதிகரிக்கக் கூடும் என்று வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# சீனாவின் 258 நகரங்களில் அமில மழை



உலகமே பார்த்து வியக்கும் சீன நாட்டில் தொழில் வளர்ச்சியின் வேகம் அனைவரையும் பிரமிக்க வைக்கிறது. அதற்கு அந்த நாடு கொடுக்கும் விலையை, நினைத்தாலே அச்சமாக இருக்கிறது.

ஆண்டுக்கு 300 கோடி தொன் நிலக்கரியை எரித்து மின்சாரம் தயாரித்து தன்னுடைய ஆலைகளுக்கு இடைவிடாமல் அளித்துக் கொண்டிருக்கும் சீனாவுக்குப் பரிசாக கிடைப்பது அமில மழைதான். 'சீனா டெய்லி' என்ற அரசு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சுற்றுச்சூழல் கண்காணிப்புப் பிரிவு தலைமைப் பொறியாளர் வாங் மஷான் இதைக் கவலையுடன் தெரிவித்துள்ளார்.


இந்த அமில மழையால் மக்களுக்கு தோல் வியாதி,சுவாசக் கோளாறு, இதயம், நுரையீரல்களில் பாதிப்பு, ஒவ்வாமை போன்றவை ஏற்படுகின்றன. அத்துடன் மக்களுடைய சாப்பாடு, தூக்கம், ஓய்வு, மன அமைதி ஆகியவையும் ஏதோ ஒரு விதத்தில் பாதிப்படைந்து வருகிறது.

இந்த அமில மழையால் சீனத்தின் பழம்பெரும் புராதனச் சின்னங்களும் சுற்றுலாத்தலங்களும் பொலிவிழந்து வருகின்றன. அந்த நாள் கட்டடங்கள் நிறம் மங்கி பழுப்பேறி வலுவிழந்து வருகின்றன. பயிர், பச்சைகளும் இதனால் பாதிப்பு அடைந்து வருகிறது.

நிலக்கரியை எரிப்பதால் வெளியாகும் ஒட்சைட்டுகள் கந்தக வாயுவாகவும் நைட்ரிக் வாயுவாகவும் பிரிந்து நீர்த்துளிகளுடன் சேர்ந்து பிறகு அமில மழையாகப் பெய்கிறது. மழையில் நனைந்தால் உடலில் நமைச்சல், எரிச்சல் ஏற்படுவதிலிருந்து இதை மக்கள் தெரிந்து கொள்கின்றனர். புதிதாகக் கட்டிய கட்டடங்களும், பழைய கட்டடங்களும் வண்ணம் மங்கி பழுப்பேறி வேறு நிறத்துக்கு மாறத் தொடங்கியுள்ளன.

# விஷம் கக்கும் தங்க தவளை கண்டுபிடிப்பு

நீரிலும், நிலத்திலும் வாழும் திறன் பெற்ற தவளைகள் மிகவும் சாதுவானவை, ஆபத்தில்லாதவை என்று தான் நாம் நினைத்துக் கொண்டிருக்



கிறோம். ஆனால், பசிபிக் கடலோரங்களில் வசிக்கும் ஒரு வகை தவளை, கொடிய விஷம் கொண்டது. ஒரே கடியில், மனிதனை பரலோகத்திற்கு அனுப்பும் அளவிற்கு இத்தவளையின் விஷம் ஆபத்தானது. பூமியில் உள்ள உயிரினங்களில் அதிக விஷம் கொண்டது இந்த தவளையினம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தாவும் தங்கத் தவளை என்று அழைக்கப்படும் இந்த, கோல்டன் டோர்ட் பிரொக் கொலம்பியா கடலோரத்தில் உள்ள அடர்ந்த மழைக் காடுகளில் அதிகமாக வாழ் கின்றன. அக்கால கொலம்பிய மக்கள், இத்தவளையின் விஷத்தை பிரித்தெடுத்து, அதை ஈட்டி, அம்பு முனைகளில் தடவி வேட்டைக்கு பயன்படுத்தியுள்ளனர். எவ்வளவு பெரிய விலங்காக இருந்தாலும், தவளை விஷம் தடவப்பட்ட அம்பு தாக்கியவுடன் மயங்கி விழுந்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் விஷத்தன்மை கொண்ட தவளைகள் 100 வகை உள்ளன.

இவற்றில், கோல்டன் டோர்ட் பிராக் வகை தவளைகள் தான் பெரியவை. கொலம்பியா காடுகளில் உள்ள குறிப்பிட்ட சில தாவரங்கள், ஈக்கள், வண்டுகள், எறும்புகள், கறையான்கள் ஆகியவையே இவற்றின் முக்கிய உணவு. இத்தவளைகள் வேகமாக அழிந்து வருகின்றன. இதற்கு, மனிதர்களால் தொடர்ந்து மழைக்காடுகள் அழிக்கப்படுவதே காரணம். இன்றைய நிலையில் இந்த தவளை இனம், வேகமாக அழிந்து வரும் விலங்குகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

இதன் விஷத் தன்மை குறித்து ஒரு சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில், அத்தவளைகளின் இயற்கையான வசிப்பிடங்களில் இருந்து மாற்றி, வழக்கமான உணவிற்கு பதில் வேறு உணவுகளை கொடுத்தனர்.

குறிப்பிட்ட சில நாட்களுக்கு பின் சோதனை செய்ததில், அந்த தவளைகள் விஷத்தன்மை மிகவும் குறைந்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, அடர்ந்த காடுகளில் காணப்படும் விஷத்தன்மை கொண்ட தாவரங்கள் மற்றும் சிறு பூச்சிகளை உட்கொள்வதால் மட்டுமே இத்தவளைகள் கொடிய விஷத்தை பெறுகின்றன என்று நம்பப்படுகிறது. தற்போது, இத்தவளைகளின் விஷத்தை கொண்டு சக்தி மிக்க வலி நிவாரண மருந்தை கண்டுபிடித்துள்ளனர்.

# பெண் எம்.பி., சுடப்பட்டதால் 'நாசா' திட்டத்திற்கு பாதிப்பு

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில், இளைஞன் ஒருவனின் துப்பாக்கி பிரயோகத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும், ஜனநாயகக் கட்சி எம்.பி., கப்ரியல் கிப்போர்டின் உடல் நிலை தேறி வருகிறது. இந்நிலையில், அவரது கணவர் தலைமையிலான 'நாசா'வின் சர்வதேச விண்வெளி நிலைய பயணத் திட்டம் பாதிக்கப்படக் கூடும் என்று தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் சமீபத்தில், ஜனநாயகக் கட்சி எம்.பி., கேப்ரியல் கிப்போர்டு மீது ஜோர்டு லீ லானர் (22) என்ற இளைஞன் கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில், அவரது தலையில் குண்டு பாய்ந்து, தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். அவரை பரிசோதித்த டாக்டர் பீட்டர் ரீ, 'அவர் உயிர் வாழ்வதற்கு 100 சதவீதம் வாய்ப்புள்ளது. அவர் இறக்க மாட்டார்' என்றார். அவர் சிறிது சிறிதாக தேறி வருவதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான 'நாசா'வில் விண்வெளி வீரராக பணியாற்றும் அவரது கணவர் மார்க் கெல்லியின் விண்வெளிப் பயணத்திட்டம் பாதிக்கப்படலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி, கெல்லி தலைமையிலான ஒரு விண்வெளிக் குழு, சர்வதேச விண்வெளி நிலையத்துக்குத் தேவையான கருவிகள், உதிரிபாகங்களை எடுத்துக் கொண்டு, 'எண்டேவர்' விமானத்தில் புறப்படுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கிப்போர்டின் உடல் நிலை தேறி அவர் மீண்டு வந்தாலும், முழுமையாக குணமடைவதற்கு மாதக் கணக்காகும் என்பதால், இந்த பணியில் இருந்து கெல்லி விடுவிக்கப்படுவார் என தகவல்கள் கூறுகின்றன. எனினும், 'நாசா' அதிகாரிகள், அவரது பெயர் தற்போது பட்டியலில் இருந்து நீக்கப்படவில்லை என்று கூறியுள்ளனர்.



வியட்நாமின் தேசிய பாராளுமன்ற கூட்டம் தலைநகர் ஹெனின் நகரில் கூடியது. அதிபர் நெஹுயான் மின்ட் டிரயட் (வலது) கூட்டத்தில் கலந்து கொண்டு சபை விவாதத்தினை கவனிப்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ் ஓசை
Yaal Osai
2011 ஜனவரி 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# யாழ்.மண்ணின் கல்வி, கலாசார பாரம்பரியத்தை பாதுகாப்போம்

ஒரு சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் கல்வியில்தான் தங்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. அந்தக் கல்வியின் பலனாகத் தான் யாழ்ப்பாண சமூகம் உலகம் முழுவதிலும் இன்றுவரை தலைநிமிர்ந்து வாழ்ந்து வருகின்றது.

மூன்று தசாப்த காலப் போரினால் யாழ்ப்பாண மக்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட போதிலும் கல்வியின் மூலம் அவர்கள் பெற்றுக் கொண்ட தகுதியும் தராதரமும் தான் இன்று அவர்களை உலகின் எந்தவொரு மூலையிலேனும் நல்ல நிலையில் வாழவைத்துக் கொண்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் கல்வி எழுச்சியில் முன்மாதிரியாக யாழ்ப்பாணமே திகழ்ந்தது. சகல போட்டிப்பரீட்சைகளிலும் யாழ்ப்பாண மக்களே ஏனைய மாகாணத்தவரை பின்தள்ளி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்தனர். மட்டுமன்றி, வேலைவாய்ப்பில் கூட அவர்கள்தான் முன்னணியில் திகழ்ந்தனர். ஒரு காலத்தில் இலங்கையின் நிர்வாக சேவையில் யாழ் கல்விமான்களே கொடிகட்டிப் பறந்தனர். இதற்குக் காரணம் அவர்களிடம் காணப்பட்ட சிறந்த கல்வியும் ஒழுக்கத்துடன் கூடிய கலாசாரமுமேயாகும்.

ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. துரதிஷ்டவசமாக இன்று யாழ்ப்பாணத்தின் கல்விநிலையானது மிகவும் பின்தங்கிய நிலைக்குச் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. பெரும்பாலான இளைஞர் யுவதிகள் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குவதை விடுத்து வீண் கேளிக்கைகளிலும் கலாசாரச் சீர்கேடுகளிலுமே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். அதிகமானோர் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியைப் புறந்தள்ளிவிட்டு வெளிநாட்டு மோகத்தில் அலைந்து திரிகின்றனர்.

ஒரு காலத்தில் தமிழ்க் கலாசாரத்தின் கேந்திரமையமாகக் காணப்பட்ட யாழ்ப்பாணம் இன்று மேற்கத்திய கலாசாரத்திற்குள் சிக்குண்டு தனது தனித்துவத்தை இழந்துவருவதை அவதானிக்க முடிகிறது. இதற்குக் காரணம் இளைஞர், யுவதிகளின் கவனம் கல்வியில் அன்றி வேறு திசைகளில் சிதறடிக்கப்பட்டமையே ஆகும்.

பெரும்பாலான இளைஞர்கள் மதுவுக்கு அடிமையாகியிருப்பதன் காரணமாக தினமும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விரும்பத்தகாத செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியிருப்பதுடன் தேவையற்ற காதல் விவகாரங்களில் சிக்கித் தவிப்பதாகவும் ஊடகங்களில் தொடர்ச்சியாக செய்திகள் வெளிவந்த வண்ணமேயிருக்கின்றன.

இந்நிலை தொடருமாகவிருந்தால் போரினால் பின்னடைவைச் சந்தித்துள்ள யாழ்.மண் மிக விரைவிலேயே இன்னுமொரு பாரிய பின்னடைவை நோக்கித் தள்ளப்படும் அபாயத்தை யாராலுமே தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

இந் நிலையில்தான் யாழ்ப்பாணத்தின் கல்வியையும் கலாசாரத்தையும் மீளவும் தூக்கிநிறுத்த வேண்டியதன் அவசியம் வெகுவாக உணரப்படுகின்றது. இளைஞர், யுவதிகளுக்கு கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன், அவர்களை சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்டவர்களாக வளர்த்தெடுக்கவும் ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

இது விடயத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகத்தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் மூலமாக பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுப்பதுடன் அதன்பால் அவர்களை ஈர்க்கச் செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அவ்வாறான ஒரு திட்டமிட்ட செயற்பாட்டின் மூலமே எமது எதிர்கால சமூகத்தை தலைநிமிர்ந்து வாழச்செய்ய முடியுமாயிருப்பதுடன், யாழ்.மண்ணின் கல்வி மற்றும் கலாசார பாரம்பரியத்தையும் தூக்கிநிறுத்தக் கூடியதாகவிருக்கும் என்பதை இவ்விடத்தில் வலியுறுத்த விரும்புகிறோம். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்துவார்கள் என்றும் நம்புகிறோம்.

# தமிழர் அரசியலை முன்னெடுக்க முட்டுக்கட்டையாக இருக்கும் தடைகள்

இலங்கைத் தீவில், ஈழத்தமிழர்களுடைய அரசியல் உரிமைக்கான போராட்டம் துளிர்விட்டது தொடக்கம் இன்றுவரை மிக முக்கியமான, நேரடியான அனைத்துலக தலையீடுகளை international intervention குறைந்தது மூன்று சக்திகள் மேற்கொண்டிருக்கின்றன.

**01.வேவ்வேறு காலகட்டங்களிலான இந்தியாவின் நேரடியானதும் மறைமுகமானதுமான தலையீடு.**

**02. நோர்வேயை மத்தியஸ்தராக முதன்மைப்படுத்தி பின்னிருந்து செயற்பட்ட மேற்குலகின் வகிபாகம்.**

**03. நான்காம் கட்ட ஈழப்போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இடம் பெறும் இலங்கைத் தீவுடன் தொடர்பு பட்ட பூகோள அரசியல் நகர்வுகள்.**

இதில், இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் செயற்பாடுகள் அதிக கவனத்திற்குரியனவாகக் காணப்படுகின்றன.

மேற்கூறிய மூன்று நிகழ்வுகளும், வெவ்வேறு காலப்பகுதிகளில், வெவ்வேறு தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், இவையனைத்திற்கும் இடையில் ஒரு பொதுவான அம்சம் காணப்படுகிறது.

அது யாதெனில், குறித்த நகர்வுகள் ஊடாக பெரும்பாலான இலங்கைத் தமிழ் மக்களிடத்தில் ஒரு மாயைநிலை தோற்றுவிக்கப்பட்டது. அல்லது, இலங்கைத் தமிழ் மக்கள் ஒரு மாயைக்குள் அகப்பட்டு அதற்கமைவாக சிந்திக்கவும், வாழவும் தள்ளப்பட்டார்கள்.

மாயைகளை உருவாக்குவதனூடாக ஈழத்தமிழர்களுடைய அரசியல் உரிமைப் போராட்டத்தினை அதன் பிரதான இலக்கிலிருந்து திசைதிருப்புவது மீண்டும் மீண்டும் தொடர்ந்துவருகிறது.

இது, போராட்டத்தை முன்னெடுப்பதற்கான முட்டுக்கட்டையாகவும், உத்வேகத்தை சிதைப்பதற்கான ஒரு கருவியாகவும் கையாளப்பட்டு வருகிறது.

மாயைநிலைகள், தமிழ்மக்கள் யதார்த்த ரீதியாக சிந்திப்பதற்கும்; நடைமுறை ரீதியாக செயற்படுவதற்கும் தடைக்கற்களாக விளங்கின. அதுவே, முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னரும் தொடர்கிறது.

இந்தநிலையைக் கருத்திற்கொண்டு, 'இலங்கைத்தமிழர் அரசியலை முன் நகர்த்துவதற்காக மாயைகளை களைதல் அல்லது தடைகளை அகற்றல்' என்ற இப்பந்தி கடந்த காலத்தின் மிக முக்கியமான கட்டுடைப்புக்கு உட்படுத்த வேண்டிய மாயைகளையும், சமகால மெய்நிலையையும் வெளிப்படுத்த முனைகிறது.

இந்தியா 1971 இல் வங்காள தேசத்தின் விடுதலைக்கு உதவியது போன்று இலங்கைத் தமிழர்களினதும் சுதந்திரத்திற்கு உதவும் என்று கருத்து 1970 களின் ஆரம்பத்திலே தமிழ்மக்களிடம் காணப்பட்டது. இதுவும், தமிழர்களுடைய ஆயுதப் போராட்டம் வீச்சுப்பெறுவதற்கான காரணங்களில் ஒன்று.

பின்னர், 1983 இல் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாதத்தால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட இந்தியாவின் பல்வேறு வழிகளிலான தலையீடு, இந்தியா இலங்கைத்தமிழர்களின் சுதந்திரத்திற்கு உதவும் என்ற நம்பிக்கையை மென்மேலும் அதிகரித்தது.

அந்த நம்பிக்கைகளை வளர்க்கக் கூடிய வகையிலேயே, இந்தியாவின் வெளிப்படையான அணுகுமுறைகள் காணப்பட்டன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 1987 இல் இந்தியா இலங்கைத் தீவில் கால்பதித்த போதும் கணிசமான தமிழ்மக்கள் மாற்றமடையாத நம்பிக்கையுடனேயே காத்திருந்தனர்.

காலப்போக்கில், அவை நம்பிக்கைகள் அல்ல, இரகசிய நிகழ்ச்சிநிரல்களுடன் இராஜதந்திரமும், அதற்குள் விழுந்த தமிழ்த் தரப்பினரும் கட்டியெழுப்பிய மாயைகள் என்பது மெதுமெதுவாகத் தெரியவந்தது.

இதுபோன்றதொரு நிலையே, 2002 இல் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து காணப்பட்டது. போர்நிறுத்தம் தமிழ் மக்களுக்கு சார்பானதென்றும், நோர்வே தமிழ்மக்களுடைய சுதந்திரத்திற்குப் பேருதவி செய்யப்போகிறது என்பது போன்ற கருத்துருவாக்கங்கள் பெருமளவில் கட்டியெழுப்பப்பட்டன. இதில், சிங்கள அடிப்படைவாதக் கட்சிகளின் பங்கும் கணிசமானது.

**நிர்மானுசன் பாலசுந்தரம்**

தாம் மீளமுடியாத பொறிக்கு சிக்குண்டுள்ளோம் என்பதைப் புரிந்துகொண்டவர்கள் கூட ஆக்கபூர்வமாக எதனையும் செய்யமுடியாதவர்களாகவே காணப்பட்டனர். தமிழ் மக்களோ, மீண்டும் கனவுக்கும் மாயைக்கும் மீண்டும் பலியானார்கள். விளைவு, பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தனர். மற்றும் வெவ்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டார்கள். இருப்பினும், இப்போதும் நாம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவதிலிலும் பார்க்க, மாயைகளுடனும் எதிர்பார்ப்புகளுடனுமே காத்திருக்கிறோம்.


பூகோள அரசியல்போக்கில் மிக முக்கியமான விடயமாக இராஜதந்திர நகர்வுகள் காணப்படுகிறன. இராஜதந்திரம் குறித்த நாடுகளின் தேசியநலனை மையப்படுத்தியே கையாளப்படும். அதற்கு சார்பான காரணிகளை இராஜதந்திரம் மிகக்கெட்டித்தனமான அடையாளம் கண்டு தேடிப் பெற்றுக்கொள்ளும்.

தேடிப்பெற்றுக்கொண்ட காரணிகளை தமது அடைவிலக்குகளுக்கான கருவிகளாகவும், காரணிகளாகவும் மிகச்சாதுரியமாக இராஜதந்திரம் பயன்படுத்தும்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - பாகிஸ்தான் இடையிலான முரண்பாடுகள் விரைவில் மறையும்; பிரணாப் முகர்ஜி நம்பிக்கை



புதுடில்லி :

பிரிந்த ஜெர்மனி நாடுகள் ஒன்றிணைந்ததை போல, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான முரண்பாடுகள் ஒருநாள் மறைந்து போகும் என மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

பிரபல எழுத்தாளர் எழுதிய, 'கடந்த கால மற்றும் எதிர்கால பாகிஸ்தான்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடல் கடந்த ஒரு நாட்டை நாம் நண்பராக்கி கொள்ள முடியும். ஆனால், அண்டை நாட்டை நாம் நிர்ணயிக்க முடியாது. எப்படியிருந்தாலும் அந்த நாட்டுடன் தான் நாம் காலம் தள்ளியாக வேண்டும். அந்த காலம் போல, பிடிக்காத நாட்டை போர் மூலம் அகற்றி விட முடியாது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மலையளவுக்கு பிரச்சினைகள் உள்ளன. அதற்காக காலம் முழுக்க அந்நாட்டுடன் முரண்பட்டு காலம் தள்ள வேண்டுமா? அமைதியாக வாழ வேண்டுமா என்பதை, கொள்கையை வகுப்பவர்கள் திட்டமிட வேண்டும்.

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு பிரிந்து கிடந்த நாடுகள் சோவியத் யூனியனாக உருவாயின. ஆனால், ஒன்றிணைந்த நாடுகள் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் உடைந்து மீண்டும் தனி நாடுகளாகி விட்டன. முரண்பட்டு கிடந்த ஜெர்மனி நாடுகள் மீண்டும் ஒன்றிணைந்துள்ளன.

ஒன்றிணைந்த ஜெர்மனி போல, இந்திய - பாகிஸ்தானுக்கு இடையே உள்ள முரண்பாடுகள், ஒரு கால கட்டத்தில் மறைந்து போகலாம். அண்டை நாட்டின் பலம், வளம் ஆகியவற்றை விரும்பும் நாடாக இந்தியா உள்ளது. எனவே, முரண்பாட்டால் எந்த பலனும் இல்லை என்றார்.

# ஏழை இந்தியர்களுக்காக வீடுகள் கட்டித் தர இளவரசர் சார்ள்ஸ் திட்டம்



டில்லி:

பெங்களூர் அல்லது கல்கத்தாவுக்கு அருகே ஏழை இந்தியர்களுக்காக பிரத்யேகமான ஒரு நகரத்தை அமைக்க இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்படி பாலைவனத்தில் ஆங்காங்கே இருக்கும் சோலைவனம் போல, இந்தத் திட்டம் இருக்கும் என்கிறது சார்ள்ஸின் நல அறக்கட்டளை.

இங்கிலாந்தில் டோர்சர் மாடல் கிராமம் என்ற பெயரில் சார்ள்ஸ் ஒரு நகரியத்தை அமைத்துள்ளார். ஏழைகளுக்கான கிராமம் இது.

அதேபோல இந்தியாவில் குடிசைகளில் வசிக்கும் ஏழைகளுக்காக ஒரு திட்டத்தை அவர் யோசித்து வருகிறாராம்.

பெங்களூர் அல்லது கல்கத்தா அருகே இது அமையுமாம். இங்கு 15,000 பேர் வரை தங்கக் கூடிய வகையில் வீடுகள் கட்டித் தரப்படும். சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் இந்த வீடுகள் உள்ளிட்டவை கட்டப்படும். இந்த இடத்தில் பள்ளிக்கூடங்கள், கடைகள், 3000 வீடுகள் இடம் பெறுமாம்.

14 கால்பந்து மைதானங்களின் மொத்த அளவில் இந்த மாடல் கிராமம் இருக்குமாம். ஸ்லம்டாக் மில்லியனர் படத்தைப் பார்த்து விட்டு இந்தியாவின் ஏழைச் சமுதாயம் மீது கவலை பிறந்துள்ளதாம் சார்ள்ஸுக்கு. இதனால்தான் இந்தத் திட்டத்தை அவர் வகுத்துள்ளாராம். இந்த செய்தியை டெய்லி மெயில் வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக மும்பையில் விரைவில், சார்ள்ஸின் அறக்கட்டளை கிளை அலுவலகம் ஒன்றைத் திறக்கவுள்ளதாம்.

# தி.மு.க.விடமிருந்து 'சமிக்ஞை' எதுவும் வரவில்லை: ராமதாஸ்



திண்டிவனம்:

தி.மு.க. தரப்பிலிருந்து 'சமிக்ஞை' எதுவும் வரவில்லை என பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் கூறினார்.

இது குறித்து நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தினால், விவசாய பணிகளுக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. எனவே விவசாயப் பணிகளுக்கும், ஊரக வேலை வாய்ப்பு திட்டம் நீட்டிக்கப்பட வேண்டுமென்று பா.ம.க. வலியுறுத்தி வந்துள்ளது. தற்போது இதை மத்திய அரசுக்கு, துணை முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தி, சட்ட சபையில் பேசியுள்ளார். இதை பா.ம.க. வரவேற்கிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு, ஆண்டுக்கு ஒரு முறை, 25 ஆயிரம் ரூபாய் அரசு வழங்க வேண்டும். வாக்குரிமையை 16 வயதாக குறைக்க அரசுக்கு, தேர்தல் ஆணையகம் பரிந்துரைத்துள்ளது. உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு முதிர்ச்சியிருக்காது. எனவே வாக்குரிமை 18 வயது என்ற அளவிலேயே இருக்க வேண்டும். தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வர வேண்டுமென்பதை விட, யார் ஆட்சிக்கு வரக் கூடாது என்பதற்கு பா.ம.க. முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த அடிப்படையில் பா.ம.க.வின் தேர்தல் கூட்டணி அமையும் என்றார்.

இதனைத்தொடர்ந்து நிருபர்களின் கேள்விக்கு ராமதாஸ் கூறிய பதில்கள் வருமாறு,

கே- பா.ம.க. தரப்பிலிருந்து 'சமிக்ஞை' வந்துள்ளது. நாங்களும், 'சமிக்ஞை' அனுப்பியுள்ளோம் என கருணாநிதி கூறியுள்ளாரே?

ப- தி.மு.க. தரப்பிலிருந்து, 'சமிக்ஞை' எதுவும் வரவில்லை. கட்சியில் பேசி பொங்கலுக்கு பிறகு கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படும்.

கே- கூட்டணியில் எத்தனை தொகுதிகள் கேட்பீர்கள்?

ப- மொத்தம் 50 தொகுதிகள் கேட்போம். தென் மாவட்டங்களிலும் ஆசனம் கேட்போம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆசனம் இருக்குமாறு கேட்டு பெறுவோம் என்றார்.

# பிரதமர் மன்மோகன் சிங்கின் நேர்மை வித்தியாசமானது: அருண் ஜெட்லி

புதுடில்லி :

ஊழல்கள் மலிந்த அரசை வழிநடத்தி செல்லும் பிரதமர் மன்மோகன் சிங்கின் நேர்மை மிகவும் வித்தியாசமானது என பா.ஜ. மூத்த தலைவர் அருண் ஜெட்லி கூறியுள்ளார்.

டில்லியில் பா.ஜ. தலைமை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசின் அனைத்து அமைப்புக்களிலும் இப்போது ஊழல் மலிந்து விட்டது. பிரதமர் மன்மோகன் சிங் நேர்மையானவர் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால், சுதந்திர இந்தியாவில், ஊழல்கள் நிறைந்த அரசை வழிநடத்தி செல்லும் அவரது நேர்மை மிகவும் வித்தியாசமானது.

விலைவாசி உயர்வு, நச்சலைட்டுகள் விவகாரம், காஷ்மீர் நிலைவரம் உள்ளிட்டவற்றை தவறாக கையாள்வாதால், இது ஒரு விசித்திரமான அரசு. ஆருஷி தல்வாரின் கொலை வழக்கில், சி.பி.ஐ.யால் குற்றவாளிகளை கைது செய்ய முடியவில்லை. ஆனால், அரசியல் எதிரிகளை பழிவாங்குவதற்காக சி.பி.ஐ. பயன்படுத்தப்படுகிறது.

'2ஜி' ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் முன்னாள் தொலைத் தொடர்பு துறை அமைச்சர் ராஜா, தனக்கு வேண்டியவர்களுக்கு, விதிகளை மீறி '2ஜி' ஸ்பெக்ட்ரம் உரிமங்களை ஒதுக்கியுள்ளார். ஆனால், பிரதமர் இதுகுறித்து வாய்திறக்காமல் மௌனம் காத்து வருகிறார். மொத்தத்தில் 2010ஆம் ஆண்டு ஊழல்களின் ஆண்டாகவும், 2011ஆம் ஆண்டு அதை மூடி மறைக்கும் ஆண்டாகவும் விளங்குகிறது என்றார்.

# சங்கு ஊதியவாறு சட்டசபைக்கு வந்த எம்.எல்.ஏ.க்களால் பரபரப்பு



பெங்களூர் :

சங்கு ஊதியவாறு சூட்கேஸ்களுடன் சட்டசபைக்கு வந்த மதசார்பற்ற ஜனதா தள எம்.எல்.ஏ.க்களினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கர்நாடக சட்ட சபை கூட்டத்துக்கு, ம.ஜ.த. சட்டசபை தலைவர் ரேவண்ணாவும், அவரது கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்களும், நேற்றுமுன்தினம் இரு பெரிய சூட்கேஸ்களுடன் சங்கை ஊதியவாரு வந்தனர்.

அப்போது அவர்களை சபை காவலர்கள் தடுத்து நிறுத்தினர். எனினும் அவர்களை அனுமதிக்கும் படி சபாநாயகர் உத்தரவிட அனைவரும் சபைக்குள் நுழைந்தனர்.

சூட்கேஸ்கள், கன்னட தட்டி, பதாகைகளுடன் உள்ளே வந்த அவர்கள் பலத்த கோஷம் எழுப்பியதுடன் தாங்கள் கொண்டு வந்த சூட்கேஸ்களில் பா.ஜ. அரசுக்கு எதிரான, ஒரு இலட்சம் கோடி ரூபாய் ஊழல்களுக்கான ஆதாரங்கள் உள்ளன என்றும் கூறினர்.

இதனையடுத்து அவர்கள் கொண்டு வந்திருந்த பொருட்களை அப்புறப்படுத்தும் படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து ம.ஜ.த.வினரின் சூட்கேஸ்களை காவலர்கள் வெளியே எடுத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேக... (முதலாம் பக்க தொடர்ச்சி)

முரணான தகவல்கள் கிடைத்ததையடுத்து சங்கானை பாதுகாப்புப் படையினருக்கு அறிவித்துள்ளனர். அங்கு வந்த படையினர் அவர்களை விசாரணை செய்த போது இருவர் கொழும்பைச் சேர்ந்தவர்களாகவும் நன்றாகச் சிங்களம் பேசுபவர்களாகவும் இருந்தனர். மற்றைய இருவரில் ஒருவர் பாரதி வீதியைச் சேர்ந்தவர் எனவும் மற்றயவர் சங்கானை கப்பண்டா வீதியைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டனர்.இவர்களிடம் இருந்த கைப்பையை சோதனையிட்ட போது அதற்குள் கறுப்புத்துணி, ஸ்பிறேயர் போத்தல்கள், காற்சட்டை முதலியன கண்டுபிடிகப்பட்டன. இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு படையினர் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். உடன் விரைந்து வந்த மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைக்காக இவர்களைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

இதேவேளை, கொழும்பு மோதரையைச் சேர்ந்த இருவரும் சம்பவ தினத்திற்கு முதல் நாள் சங்காதை பழைய தபாற்கந்தோர் வீதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடியதை அவதானித்த இவ் வீதியில் வசிக்கும் பொது மகன் ஒருவரால் பாதுகாப்பு படையினருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் அங்கு வந்து இவர்கள் இருவரையும் விசாரித்து எச்சரிக்கை செய்துள்ளனர். இவர்கள் இருவரும் கொழும்பிலிருந்து இங்கு வந்து சில நாட்கள் தங்கி நிற்பதோடு அடிக்கடி இங்குவந்து செல்பவர்கள் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சுட்டுக்கொல்லப்பட்ட... (2 ஆம் பக்க தொடர்ச்சி)

தற்போது பாண்டியனின் உடல் அரசு மருத்துவமனையில் பரிசோதனைக்காக உள்ளது. பிரேத பரிசோதனைக்கு பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட இருக்கிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை தயாராக வைத்துள்ளார். மாவட்ட ஆட்சித்தலைவரிடம் காலையிலேயே தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசப்பட்டிருக்கிறது. அங்கே எந்தவிதமான சட்ட-ஒழுங்கு பிரச்சினையும் இல்லை என்று மாவட்ட ஆட்சித்தலைவர் கூறுகிறார். இந்த சம்பவம் குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து முறையாக நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தமிழக மீனவர்கள் இவ்வாறு தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து மத்திய அரசிடம் நாம் தொடர்ந்து பலமுறை கோரிக்கை வைத்து அவர்களும் இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கூறியும் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஆங்காங்கே நடந்தே வருகின்றன.

இந்த சம்பவம் குறித்தும் மத்திய அரசுக்கு இன்றைய தினமே முதல்-அமைச்சர் உடனடியாக இதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு தந்தி ஒன்றும் அனுப்பியிருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

## தவறான... (முதலாம் பக்க தொடர்ச்சி)

ஆற்றுவதற்கு முயலவேண்டுமே தவிர அதனை ஆழப்படுத்தக்கூடாது. குறிப்பாக தமிழ் பத்திரிகைகள் இனவாதத்தை தூண்டாது செயற்படவேண்டும். இன்றேல் இந்தப் பகைமை உணர்வை ஒருபோதும் முடிவுக்கு கொண்டு வரமுடியாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த நாட்டை பிரிப்பதற்கு பிரபாகரன் முயற்சித்தார். அந்த எண்ணம் கைகூடவில்லை. இந்தநாட்டை எவரும் கூறுபோட நான் அனுமதிக்க மாட்டேன். இன்று வட-கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும், சில தமிழ் ஊடகங்கள், இணைய தளங்கள் என்பன தவறான பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றன. இது அப்பட்டமான பொய்யாகும். கிளிநொச்சியைப் பொறுத்தமட்டில் 27 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. அங்கு இரண்டரை பில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. களுத்துறையிலும், அம்பாந்தோட்டையிலும், நான் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கூறுகிறார்கள். ஆனால் கிளிநொச்சிக்கே இந்தளவு பெரும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஊடக நிறுவனப் பணிப்பாளர்கள், தேசியப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், இலத்திரனியல் ஊடக முக்கியஸ்தர்கள் ஆகியோரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை அலரிமாளிகையில் சந்தித்து உரையாடினார். நாட்டின் நடப்புக்கள், அரசியல் நிலைவரங்கள், உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் விலையேற்றங்கள் தொடர்பில் இங்கு பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

பத்திரிகை ஆசிரியர் ஒருவர், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச குழுவினருக்குமிடையில் அண்மையில் பேச்சுக்கள் இடம் பெற்றன. இது எந்தளவு தூரம் வெற்றிகரமாக அமைந்தது? என ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி நாங்கள் இது தொடர்பில் குழுவொன்றை அமைத்துள்ளோம். பேச்சுக்கள் சுமுகமான அடிப்படையில் இடம் பெற்றன. இது முதலாவது சந்திப்பு. மீள்குடியேற்றம், புனர்வாழ்வு என்பவை தொடர்பான விடயங்கள் பேசப்பட்டன என்றார்.

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி கொலை, கொள்ளைகள் போன்ற சம்பவங்கள் இடம் பெறுவதாகவும், 6 மணிக்குப் பின்னர் மக்களை வீதியில் காணமுடியவில்லையெனவும் கூறப்படுகின்றதே அது குறித்து உங்கள் கருத்து என்ன என ஜனாதிபதியிடம் வினவப்பட்டது. அது குறித்து ஜனாதிபதி கூறுகையில்;

தமிழ் பத்திரிகைகளில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு சட்டவிரோத சம்பவங்கள் இடம் பெறுவதாக அடிக்கடி பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கொழும்பில் கூட அவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதுண்டு. கொழும்பில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். புஞ்சி பொரளையில் வயோதிப பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் பலபகுதிகளிலும், இடம் பெற்று வருகின்றன. அவற்றை ஒடுக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதனை யார் செய்கிறார்கள்? எதற்காக செய்கின்றார்கள், என்பது குறித்து பொலிஸார் கண்டறியவேண்டும். இத்தகைய சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இடம் பெறுவதில்லை. நாட்டின் பல பகுதிகளிலும், இடம் பெற்றே வருகின்றன. அது மாத்திரமன்றி ஆறு மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் சன நடமாட்டம் இல்லையென்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அங்கு சென்ற பலர் இதை என்னிடம் கூறியுள்ளனர். மக்கள் தங்கள் கடமைகளை சர்வசாதாரணமாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே யாழ். மக்கள் அச்சத்தில் உறைந்து போய் இருக்கின்றார்கள் என்று கூறுவது தவறானதாகும். ஊடகங்களும் இணையத்தளங்களுமே இவ்வாறான தவறான செய்திகளை பிரசுரித்து வருகின்றன என்றார்.

இதேவேளை நாட்டில் வன்முறைகள், அதிகரித்தும், வாழ்க்கைச் செலவு உயர்ந்தும் அமைதியீனங்கள் தலை தூக்கியும் உள்ளன. இதற்கு சீரான முகாமைத்துவம் இல்லாமையே காரணம் என கருத முடியுமா? என ஜனாதிபதியிடம் வினவியதற்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது:-

நாட்டை தோல்வி அடைந்த இராஜ்ஜியமாக காட்ட சிலர் முனைகிறார்கள். நான் அவ்வாறு ஒருபோதும் நினைக்கவில்லை. நாம் எம்மால் முயன்ற அனைத்தையும் செய்து நாட்டை சிறந்த வகையில் கட்டியெழுப்ப முனைகின்றோம். எமது பொலிஸார் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தம்மாலான முயற்சிகளை செய்து வருகின்றனர். போதைப் பொருள் விற்பனை, கொலை என்பன இலங்கையில் மாத்திரமல்ல அமெரிக்கா உட்பட உலகின் பல்வேறு பகுதிகளிலும், இடம் பெற்று வருகின்றன. பட்டப்பகலில் அமெரிக்காவில் படுகொலைகள், இடம் பெறுகின்றன. அமெரிக்காவில் பாடசாலைக்குள் புகுந்து படுகொலையில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அது குறித்து நீங்கள் பேசுவதோ எழுதுவதோ கிடையாது. முன்னர் இலங்கையில் புலிகள் கண்மூடித்தனமாக பலரைச் சுட்டுக்கொன்றார்கள். குறிப்பாக தமிழ் அரசியல் பிரமுகர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆனால் அது குறித்து தமிழ் பத்திரிகைகள் எதுவும் கண்டிக்கவோ, விமர்சிக்கவோ இல்லை. தற்போது எமது அரசாங்கத்தை குற்றம் சுமத்துகின்றீர்கள். உங்களுக்கு அதற்கான உரிமை உண்டு. அதை நான் இல்லை என்று கூற வரவில்லை. ஆனால் அநாவசியமாக அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை வைப்பதை விடுத்து அனைவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள முன்வரவேண்டும் என்றார்.

இணையத்தளங்களில் இலங்கை தொடர்பில் தவறான தகவல்கள் வெளிவருகின்றனவே, அது தொடர்பில் என்ன கூற விரும்புகின்றீர்கள்? என்ற கேள்விக்கு ஜனாதிபதி பதிலளிக்கையில்;

இணையதளங்கள் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. அது தொடர்பில் நாம் ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் நீங்கள் உங்கள் பத்திரிகைகளில் அது தொடர்பில் எம்மை விமர்சித்து எழுதுவதுடன் பத்திரிகை சுதந்திரம் ஒடுக்கப்பட்டதாக குரல் எழுப்புவீர்கள், அது மாத்திரமன்றி அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இது குறித்து முறையிடுவீர்கள். ஜி.எஸ். பி. பிளஸை நிறுத்துமாறு கோருவீர்கள், எம்மீது யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்துமாறு கூறுவீர்கள், உலகில் ஒரு இடமும் இல்லாதவாறு இலங்கையிலேயே இவ்வாறு சம்பவங்கள் இடம் பெறுவது போல இவை சித்திரிக்கப்படுகின்றன. அதிகமாக தமிழ் பத்திரிகைகள், இணையங்கள், தவறான தகவல்களை பிரசுரித்து வருவதாக நான் அறிகிறேன். நான் கூறுவது தவறாகக் கூட இருக்கலாம். எனக்கு மொழி பெயர்த்து கூறுபவர்கள் அவ்வாறுதான் கூறுகிறார்கள். அதையே நானும் கூறுகிறேன். எனவே நான் இரண்டு தடவை அதனை சரிபார்க்க வேண்டிய நிலை உள்ளது. அல்லது நான் நேரடியாகவே தமிழ் கற்றே இதனை அறிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தை விமர்சிப்பதை , தாக்கி எழுதுவதை நான் குறைகூறவில்லை. அவ்வாறு செய்வது தவறுமல்ல. எனினும் உலகிற்கு தவறான தகவல்களை பிரசுரித்து நாட்டையும் மக்களையும் காட்டிக் கொடுக்கவோ நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவோ எவரும் முயலக்கூடாது. பத்திரிகைகள், ஊடகங்கள் சரியான தகவல்களை, உண்மையான தகவல்களை பொறுப்புணர்வுடன் முன்வைக்க முன்வரவேண்டும் .

யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருட காலத்தில் அதிக எண்ணிக்கையான முன்னாள் புலிகளுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்துள்ளோம். 1977 ஆம் ஆண்டு இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞர்கள், மூன்று வருடங்களுக்குப் பின்னரே புனர்வாழ்வு அளிக்கப்பட்டனர். அதுமாத்திரமன்றி தங்காலை தொடக்கம் அம்பாந்தோட்டை வரை இளைஞர்கள், டயர் போட்டு எரிக்கப்பட்டார்கள். ஆனால், அவ்வாறான காரியங்கள் எமது ஆட்சியில் ஒரு போதும் இடம் பெறவில்லை என்றார்.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள், தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா என ஜனாதிபதியிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ; மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வெள்ள நிலைமை காணப்படுகின்றது. விரைவில் காலநிலை சீரடைந்து விடும். எனினும் இதுவரை உள்ளூராட்சித் தேர்தலை பின்போடும் நோக்கம் இல்லை என்று தெரிவித்தார்.

## யாழ்.... (முதலாம் பக்க தொடர்ச்சி)

அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல வருட காலமாக எத்தனையோ இன்னல்களை இம் மாவட்ட மக்கள் சந்தித்துள்ளார்கள். அவற்றிலிருந்து மீண்டு அமைதி வாழ்க்கையை வாழ முற்படும்போது இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதை நாம் அவதானிக்கின்றோம். சிலகுறிப்பிட்ட விஷமிகளால் இவ்வாறான குற்றச் செயல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக மானிப்பாய், சுன்னாகம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் அநேகமான சம்பவங்கள் அண்மைக் காலத்தில் இடம் பெற்றுள்ளன. சங்கானையில் இடம் பெற்ற இந்துக் குருக்கள் கொலையில் சந்தேகப்பட்ட நபர்களையும் அதற்குப் பாவித்த துப்பாக்கிகளையும் நாம் கைப்பற்றியுள்ளோம். விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உங்களது உடைமைகளையும் உயிர்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு. இருந்தும் 50 ஆயிரம் பேரைக் கொண்டுள்ள இப் பிரிவிற்கு 50 பொலிஸாரே மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்றார்கள். இதனால் ஒவ்வொரு பொலிஸாரும் கிட்டத்தட்ட ஆயிரம் பேரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கவேண்டிய நிலை உள்ளது.தற்போது பொலிஸாருடன் இணைந்து பாதுகாப்புப் படையினரும் விசேட அதிரடிப் பொலிஸாரும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தும் பொது மக்களின் ஒத்துழைப்பு இன்றி இவ்வாறான குற்றச் செயல்களை நாம் தடுத்து நிறுத்த முடியாது மேலும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரும் முன்னர் கிராம அலுவ' ரின் உதவியுடன் சந்தேகத்திற்கிடமானவர்களை இனங்கண்டு அவரிடம் ஒப்படைப்பது மக்களாகிய உங்களது கடமை எனவும் தெரிவித்தார்.

பொது மக்களுக்கும் எமக்கும் பொதுப் பிரச்சினையாக மொழிப் பிரச்சினை உள்ளதை நாம் அறிந்துள்ளோம். இதனை நீக்குவதற்கு 260 தமிழ்ப் பொலிஸார் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றவுள்ளனர். இதனால் ஓரளவிற்கு இம் மொழிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். சில சம்பவங்கள் ஒவ்வொருவரின் சொந்தப் பிரச்சினைகளால் ஏற்பட்டுள்ளதென்பதையும் அறிந்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.இக் கலந்துரையாடல் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது மக்களுக்காக இங்கு ஏற்பாடாகி இருந்தது. இந் நிகழ்வில் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்கம் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்ப்பால் கொடுப்பதே தாய்மைக்கு அழகு

நம் நாட்டில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பிறக்கின்றன. அதில் பல குழந்தைகள் ஒரு வயது நிறைவடையும் முன்னரே இறந்துவிடுகின்றன. பல குழந்தைகள் ஐந்து வயதை தொடும் முன்னர் இறக்கின்றனர். நாட்டில் பச்சிளம் குழந்தைகளும் இறப்பதாக புள்ளிவிவரம் கூறுகிறது.

தமிழ்நாட்டில் பிறக்கும் 1,000 குழந்தைகளில் 22 குழந்தைகள் இறந்து போகின்றன. மேற்கூறிய அனைத்துக்கும், குழந்தைகளுக்கு தேவையான அளவு தாய்ப்பால் கிடைக்காததே காரணம்.

**சீம்பால் அவசியம்:** எல்லா குழந்தைகளுக்கும் பிறந்து அரை மணி நேரத்துக்குள் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். குழந்தை பிறந்தவுடன் தாயின் சீம்பாலை அவசியம் கொடுக்க வேண்டும். தவறான வழிகாட்டுதலால், பெரும்பாலானோர் அதனை தவிர்த்து விடுகின்றனர்.

நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுக் கொள்ள இந்த சீம்பால் உதவும். 6 மாதங்கள் முடியும் வரை தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். தொடர்ந்து 2 வயது வரை அல்லது அதற்கு மேலும் தாய்ப்பால் கொடுக்கலாம்.

**என்ன நன்மை?** தாய்ப்பால் ஊட்டுவதால் தாயுக்கும் சேயுக்குமான நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு சரியான அளவு ஊட்டச்சத்து கிடைக்கும். தாய்ப்பால் பெற்ற குழந்தைகள் அதிக அறிவுத்திறனுடனும், நல்ல உடல் வளர்ச்சியும் பெறுகின்றனர். சர்க்கரை நோய், காது சம்பந்தப்பட்ட நோய்கள், ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு, மூளைக்காய்ச்சல், குழந்தை பருவத்தில் வரும் புற்றுநோய், மூட்டுவாதம், கண் குறைபாடு உள்ளிட்ட பல்வேறு நோய்கள் வரும் வாய்ப்பு மிக மிகக் குறைவு.

**தாய்க்கும் நன்மை:** தாய்ப்பால் ஊட்டுவது, பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது. தாயின் விரிவடைந்த கருப்பை விரைவில் சுருங்கி பழைய நிலையை அடைகிறது. வேலைக்குச் செல்லும் தாய்மார்களுக்கு அடிக்கடி நோய் வராமல் காக்கிறது. தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் மனதளவில் எப்போதும் மகிழ்ச்சியாகவும், புத்துணர்ச்சியாகவும் இருக்க முடியும் என்கின்றனர் நிபுணர்கள்.



எப்போதெல்லாம்? குழந்தை பிறந்தவுடன் சுறுசுறுப்பாக, பால் குடிப்பதற்கு ஆவலாக இருக்கும். இந் நேரத்தில் தாய்ப்பால் கொடுப்பது எளிது. பிறந்தவுடன் கொடுக்கவில்லை என்றால், சிறிது நேரத்தில் குழந்தை தூங்கிவிடும். அதன்பின் சிரமம் ஏற்படும். குழந்தைக்கு எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். 24 மணி நேரத்தில் குறைந்தது 8 முறை கொடுக்க வேண்டும். குழந்தை நோய்வாய் பட்டிருந்தாலும் தொடர்ந்து தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

ஆகஸ்ட் 1 முதல் 7-ஆம் திகதி வரை உலக தாய்ப்பால் வாரமாக கடைபிடிக்கப்படுகிறது. தாய்மார்களே!

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுங்கள். அது உங்களையும் ஆரோக்கியமாக வைக்கும்.



# கோழி இறைச்சிப் பாற்பொரியல்

**தேவையான பொருட்கள்**

கோழி இறைச்சி (தசை மாத்திரம்) 250கிராம், சின்ன வெங்காயம் 50கிராம், வெள்ளைப்பூடு 6பல்லு, பச்சைமிளகாய் 3, கறிவேப்பிலை, நம்பை, மிளகாய்த் தூள் 1 1/2மேசைக்கரண்டி, மஞ்சள் தூள் 1/4 தேக்க ரண்டி, பெருஞ்சீரகம் 1தேக்கரண்டி, மிளகு 1/4 தேக்க ரண்டி, வெந்தயம் 1/4 தேக்கரண்டி, எலுமிச்சம் புளி 2 தேக்கரண்டி, தேங்காய்ப்பால் 1 1/2 தம்ளர் (இறுக்கமா னது), உப்பு அளவாக

**செய்முறை**

இறைச்சியைச் சுத்தம் செய்து சிறிது சிறிதாக வெட் டிக் கொள்ளவும்.

வெங்காயம்,பூடு இவற்றைச் சுத்தம் செய்து வட்ட மாக வெட்டவும்.மிளகாயைப் பிளந்து கொள்ளவும்.

தேங்காய்ப்பாலுடன் மஞ்சள்தூளைக் கலந்து சூடாக்கி அதனுடன் வெங்காயம்,மிளகாய்,வெந்தயம் இவற்றைக் கலந்து கொதிக்க வைக்கவும்.

சிறிது நேரத்தின் பின் இறைச்சியை அதனுள் இட் டுக் கலந்து மிளகாய்த்தூள், உப்பு, நம்பை, இவற்றைச் சேர்த்து மெல்லிய நெருப்பிலே மூடி வைக்கவும்.

பெருஞ்சீரகம், மிளகு அளவான கறிவேப்பிலை இவற்றை வாசனை வரக்கூடியதாக வறுத்தெடுத்து அரைத்துக் கொள்ளவும்.

தேங்காய்ப்பாலில் இருந்து பிறந்த எண்ணெயில் இறைச்சியைப் புரட்டி புரட்டிப் பொரிய வைத்து வறள விடவும்.

பாற்பொரியல் வறளும் பருவத்தில் பெருஞ்சீரகத் தூளைச் சேர்த்து நன்கு கலந்து இறக்கிக் கொள்ளவும்.

ஆறிய பின் எலுமிச்சம் புளியைச் சேர்த்துக் கொள்ள வும்.

**குறிப்பு**

விரும்பின் ஏலம், கறுவா, கராம்பு இவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.



# வெண்சாதம்

**தேவையான பொருட்கள்**

1சுண்டு அரிசி (தவிடு நீக்கிய சிவப்பு வெள்ளைப்பச்சை அரிசி)

பாசிப்பயற்றம் பருப்பு 1/4 சுண்டு (வறுத்துக் குற்றியது)

தேங்காய்ப்பால் 1கப் (தடிப்பானது)

தண்ணீர் 4 கப்

உப்பு அளவாக

**செய்முறை**

தண்ணீரைக் கொதிக்க வைத்து அரிசி பருப்பு இவற்றை இட்டு வேகவிடவும்.

அரிசி நன்கு வெந்ததும் பால் உப்பு இவற்றைச் சேர்த்து இறுகியதும் இறக்கி கொள்ளவும்.

இளஞ் சூட்டுடன் தளிசைகளும் செய்து கொள்ளலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா மையமாகும் நிலாவரை

## வற்றா நீர் நிலையும் நவசைலேஸ்வரமும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நிலாவரை வற்றா நீர் நிலை மற்றும் நவசைலேஸ்வரம் தொடர்பாக இராமயணத்துடன் தொடர்புபடுத்தியும் கர்ண பரம்பரையாகவும் பல்வேறு கதைகள் சம்பவங்கள் கூறப்பட்ட போதிலும் நிலாவரை வற்றாநீர் நிலைக்கு புவியியல் ரீதியிலான விஞ்ஞான விளக்கமும் நவசைலேஸ்வரத்துக்கு பூர்வீக வரலாற்றோடும் சிவன் வழிபாட்டோடும் தொடர்பான வரலாறும் உண்டு. இது உண்மைதான் என்பது சில சான்றுகள் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

நல்லூர் இராசதானிக் கால ஆலயங்கள் பற்றிக் கூறும் போது தக்ஷிணைகைலாய புராணத்தின் நவசைப்படலத்தில் புத்தூரில் இருந்த சிவன் கோயில் பற்றியும் அதன் கேணி பற்றியும் நந்நவனம் பற்றியும் கூறப்படுவதோடு குறித்த ஆலயத்தை வழிபட்ட அடியார்கள் பெற்ற நன்மைகள் பேறுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்படும் சிவன் கோயில் நவசைலேஸ்வரம் சிவன் கோயில் தான் என்று ஒரு சாரார் கூறும் அதே வேளையில் சிலர் இதில் கூறப்படும் சிவன் கோயில் புத்தூர் சிவன் கோயில் எனக் கூறுவதும் உண்டு.

நவசைலேஸ்வரம் புராதனமானதும் தல மகிமை கொண்டதும் பூர்வீகமான தும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. இந்த ஆலயம் ஈழத்தில் சிறப்பு பொருந்திய ஆறு ஈஸ்வரங்களில் ஒன்று அதன் பூர்வீகம் போர்த்துக்கீசர் காலத்தில் இடிந்து அழிக்கப்பட்டது. ஆலயத்தின் பூர்வீக விக்கிரகங்கள் முன்னோரால் அயலில் உள்ள கிணற்றில் இடப்பட்டு மறைக்கப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இறையருளால் மீட்டெடுக்கப்பட்டு தற்போதைய ஆலயம் கட்டப்பட்டு அதில் பிரதிஷ்டை செய்யப்பட்டது எனக் கூறப்படுகின்றது. போர்த்துக்கீசரால் முற்றாக இடித்து அழிக்கப்பட்ட பூர்வீக ஆலயத்தின் அடித்தளமும் சுற்றுப்பிரகாரமும் தற்போதைய ஆலயத்தக்கு அருகில் மண்ணுள் மறைபட்டுள்ளது. சில இடிபாடுகள் மண்ணுக்கு மேல் இப்பொழுதும் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.



நவசைலேஸ்வரத்தில் தற்போது காணப்படும் ஆலயம் 1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எதிர்பாராத விதமாக மீட்டெடுக்கப்பட்டு கட்டப்பட்டது. ஆலயத்தின் முக்கிய விக்கிரகங்கள் மற்றும் மூல மூர்த்தியாகிய சிவ லிங்கமும் ஆலயத்துக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டன.

தற்போதைய ஆலயத்தை நிர்மாணித்து பரம்பரைப் பூசகரான வேலுப்பிள்ளை சுப்பையாவும் அவரின் மனையாள் சிவக்கொழுந்தும் பூசை வழிபாடு செய்தனர் என்றும் வேலுப்பிள்ளை சுப்பையாவின் பேரனும் தற்போதைய ஆலய பரிபாலன சபையின் தலைவருமான வேலுப்பிள்ளை அருணாசலம் தெரிவிக்கின்றார்.

தற்பொழுது காணப்படும் ஆலயம் வெளிச் சுற்றப்பிரகாரத்தடன் சிறிய ஆலயமாக அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் நித்தியபூஜைகள் வழிபாடுகளுக்கு புலம்பெயர்ந்த உறவுகள் நிதி உதவி வழங்கிவருகின்றனர். ஆலயத்தின் தற்போதைய தினசரி பூசையை அச்சேழுவைச் சேர்ந்த சிவஸ்ரீ விக்னேஸ்வரக்குருக்களும் அவர்களது குடும்பத்தினரும் மேற்கொண்டுவருகின்றனர்.

ஆலயத்தின் தீர்த்தமாக வற்றாநீர் ஊற்று காணப்படுகின்றது. ஆலயத்தின் முன்றலில் சில மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வற்றா நீர் ஊற்றுக்கு இறங்குவதற்கு மேற்கு கிழக்காக பல படிகள் கட்டப்பட்டு தேவையின் நிமித்தம் படிக்கட்டுக்களை பயன்படுத்தி இறங்கி ஏறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் 20 ற்கும் மேற்பட்ட படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆலயமும் ஆலய வாசலில் அமைந்துள்ள வற்றாநீர் ஊற்றும் அத்தோடு இணைந்து நூற்றாண்டுக்கு மேற்பட்ட வளர்ச்சி இணைந்து கொண்ட மரங்கள் நிறைந்த சுற்றாடலும் ஆலயத்திச் சூழலை அழகூட்டுவனவாக இருப்பதோடு வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பல்லாயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் மையமாகவும் விளக்குவதில் அர்த்தமில்லை இல்லை.

வலி.கிழக்கில் புராதன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தனித்துவம் மிக்கதாகவும் அழகும் அமைதியும் நிறைந்த இடமாகவும் விளங்கும் நிலாவரை ஆழ் கிணறு தொடர்பாக புராண இதிகாசங்களில் இடம்பெறுவதாக கூறப்பட்ட போதிலும் அதனுடன் தொடர்பான சுலோகங்களோ பாடங்களோ இது வரை கண்டறியப்படவில்லை எனக் கூறப்படுகின்ற அதே வேளையில் வற்றாதநீர் நிலை அமைப்பதற்கு வரையறை செய்யப்பட்டு கூறப்படும் நியாயங்களும் வரைவிலக்கணமும் விஞ்ஞான ரீதியில் வேறுபட்டதாக அமைந்துள்ளன...... (முற்றும்)



எம்.ஜி.லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மலர்

# நான் தான் பெரியவன்



- ஒரு சிலந்தியின் வலை சுமார் 2000 மைல் நீளத்திற்கு வரும்.
- ஜப்பான் நாட்டு தட்டெழுத்து இயந்திரத்தில் மொத்தம் 2,863 எழுத்துக்கள் உள்ளன.
- 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பட்டாசு வெடிக்கும் உரிமை ராணுவத்தினருக்கு மட்டுமே இருந்தது.
- மிகப் பெரிய நீர்ப்பறவை அன்னம்.
- இங்கிலாந்தில் பச்சை நிற மரங்கொத்தி மரத்தைத் துளையிட்டு சாறை உறிஞ்சுகிறது.



காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. தன் வலிமையை நினைத்து அது தற்பெருமை கொண்டிருந்தது. வழக்கம் போல வேட்டையாடிவிட்டுக் குகைக்குத் திரும்பியது. அங்கேயே படுத்து ஓய்வு எடுத்தது. அப்போது கொசு ஒன்று அதன் அருகே பறந்தது அந்த கொசுவையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்தது அது.

"இறைவா! எதற்கும் அஞ்சி நடுங்கும் சின்னஞ்சிறு கொசுவாக என்னை நீ படைக்கவில்லை. எல்லோரையும் நடுங்க வைக்கும் சிங்கமாகப் படைத்து உள்ளாய். உனக்கு நன்றி" என்ற உரத்த குரலில் சொன்னது.

அப்படி அது பேசியது கொசுவின் காதில் விழுந்தது. இதனால் கோபம் கொண்ட கொசு, "சிங்கமே கொசுக்களாகிய நாங்கள் வலிமையானவர்கள். இதை அறிந்த அடக்கமாகப் பேசு!" என்றது.

இதைக்கேட்ட சிங்கம் "அற்பக் கொசுவே யாரிடம் என்ன பேச்சுப் பேசுகிறாய்? நான் ஒரு அறை விட்டால் உன் கூட்டமே அழிந்து போய்விடும். இங்கிருந்து ஓடினால் உயிர் பிழைப்பாய். இல்லையேல் உன்னை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்று கண்கள் சிவக்கக் கர்ச்சித்தது.

அதற்குக் கொசு, "சிங்கமே நம் இருவரில் யார் வலிமையானவர்? சண்டை போட்டு முடிவு செய்வோம்!" என்று வீரம் பேசியது.

"நீ என்னுடன் சண்டைக்கு வருகிறாயா? வா உன்னை ஒரு நொடிக்குள் நசுக்கிக் கொன்று விடுவேன்!" என்று கர்ச்சித்தது அது.

கொசு வேகமாகப் பறந்து வந்து சிங்கத்தின் முகத்தில் கடித்தது. உடனே அது தன் முன்னங்காலால் முகத்தில் வேகமாக அறைந்தது. கவனமாக இருந்த கொசு அதன் அறையில் இருந்து தப்பித்தது. பிறகு பறந்து அதன் உடலெங்கும் கடித்தது இப்படிக் கொசு கடித்த போதெல்லாம் தன்னை அறைந்து கொண்டது சிங்கம்.

அந்தக் கொசு சிக்கவே இல்லை. திறமையாகத் தப்பித்துக் கொண்டே இருந்தது. இதனால் சிங்கத்தின் உடலெங்கும் காயம் ஏற்பட்டுச் சோர்வு அடைந்தது. கொசுவோ மீண்டும் மீண்டும் பறந்து அதைக் கடித்தபடி இருந்தது.

வேறு வழியில்லாத சிங்கம், "கொசுவே! என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்!" என்றது.


"இனி யாரையும் எளியவர் என்றுகேலி செய்யாதே!" என்ற கொசு அங்கிருந்து பறந்து சென்றது.




செ.அகனிதா தரம் 3D
யா/இந்து ஆரம்பப் பாடசாலை



- கடல் விலங்குகளில் அதிக எடை கொண்டது உப்பு நீர் முதலை. இது 1,880 கிலோ எடை கொண்டது.
- தொடர்ந்து மூன்று நான்கு ஆண்டுகள் கூட பறக்கும் திறனுடைய பறவை குட்டிடேர்ன்.
- குரங்குகளுக்கு இரண்டு மூளைகள் உள்ளன. ஒன்று உடலையும் மற்றது வாலையும் நிர்வகிக்கிறது.
- பிகாலே என்ற மீன் பின்புறமாகவும் நீந்தும்.



இது ஒரு மர்ம பாதை. ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் செல்ல வேண்டும். செல்லுங்கள் பார்ப்போம்!



ச.தரணிகா தரம் 3C
யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



**இத்தால் சகலருக்கும் :**

ஒரு சமூகத்தினுடைய நலனை அளவிடுவதற்குப் பல சுட்டிகளை அவதானிக்க வேண்டும். அந்தச் சமூகத்தினுடைய இயக்கப்பாடு, அங்கு காணப்படுகின்ற பழக்கவழக்கங்கள், அந்த சமூகத்தில் உள்ள மதுப்பாவனையும் அது தொடர்பான பிரச்சினைகளும், தற்கொலை முயற்சிகள் மற்றும் தற்கொலைகளின் அளவு, குடும்பப் பிரச்சினைகள், விவாகரத்துக்களின் எண்ணிக்கை பெற்றோரை இழந்த, பெற்றோரால் கைவிடப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை சட்டவிரோத கர்ப்பங்கள் கருக்கலைப்பு வீதம் உடல் ஆரோக்கியச் சுட்டிகள் (பிறப்பின் போதான நிறை, தாய் சிசு மரணவீதம், சராசரி வாழ்க்கைக் காலம்) போன்ற இன்னோரன்ன காரணிகளை அவதானிப்பதன் மூலமே ஒரு சமூகத்தினுடைய நலம் தொடர்பான கணிப்புகளுக்கு வரலாம். அவ்வாறான ஒரு சுட்டியைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

அண்மைக் காலமாக எமது பிரதேசத்தில் உள்ள இளவயதினரில் வீட்டைவிட்டு வெளியேறுதல், எதிர்ப்பாலாருடன் சேர்ந்து வாழுதல், கர்ப்பந்தரித்தல் கைவிடப்படுதல், தகுதியற்ற கருக்கலைப்பு போன்ற நடவடிக்கைகள் அதிக அளவில் அவதானிக்கப்படுகிறது. வைத்தியசாலைப் பதிவுகளிலும், பொலிஸ் பதிவுகளிலும், பொது அவதானிப்பிலும் இவ்வகைப்பட்ட பிரச்சினைகள் பெருகி வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இளவயதினரில் ஏற்படுகின்ற, ஏற்படக்கூடிய இந்த வகையான நடத்தைகள் பற்றியும், அவற்றைக் கையாளுகின்ற பொழுது, வளர்ந்தவர்களும், சம்பந்தப்பட்ட பல் துறைசார் உத்தியோகத்தர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் பற்றியும் இந்தக் கட்டுரை பகிர்ந்துகொள்ள விரும்புகின்றது.

அவள் 15 வயதுடைய வளர்ந்த ஒரு பிள்ளை. அவளது முகத்தில் இன்னமும் குழந்தைத்தனமும், குறும்பும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. பெற்றோர் அரச உத்தியோகத்தர்கள். வீட்டில் ஒரேயொரு பெண் பிள்ளை. குறையொன்றுமில்லை, நன்றாகப் படிப்பாள். தேவையில்லாத 'சோலி சுரட்டுகளுக்குப்' போகமாட்டாள். திடீரென்று ஒரு நாள் காணாமல் போனாள். பின்பு 'ரெலிபோனில்' தான் இன்னுமொருவருடன் வாழ்வதாகச் சொன்னாள். வீட்டில் இடி விழுந்தது!

பெற்றோர் ஊண் உறக்கம் மறந்தனர். ஓடியாடித் திரிந்தனர். பலரின் கால்களில் விழுந்து எழும்பினர்.

இரண்டு மாதங்கள் கழித்துத் தொலைதூரப் பிரதேச மொன்றில் அவளைக் கண்டனர். அவளின் 'அவரையும்' கண்டனர். அந்த அவர் ஏற்கனவே குடித்தனம் செய்து குழந்தைகள் பெற்றவர் என்பதையும் அறிந்தனர். பின்பு வைத்தியசாலையில் தமது மகள் கருவளத்தோடு இருப்பதனையும் தெரிந்துகொண்டனர்.....

எங்களில் பல பேர் எண்ணிக் கொண்டிருப்பது போல், இவ்வாறான பிரச்சினைகள் 'ஏழை எளியவர்களுக்கும்', 'வசதிகுறைந்த குடும்பங்களுக்கும்', 'தாய் தகப்பன் ஒழுங்காக இல்லாதவர்களுக்கும்' மட்டும் ஏற்படுவன அல்ல. மேலே குறிப்பிட்ட காரணிகள் தத்தமது பங்குகளை வகித்தாலும், இவ்வாறான பிரச்சினைகள் எல்லோருக்கும் ஏற்படக் கூடியன என்பதனை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

# வீட்டு வைத்தியம்



- சூரிய வெப்பத்தால் தொல்லையா? மாங்காயை வேக வைத்து ஆறிய பிறகு அதன் விழுதை அடிப் பாதங்களில் தடவினால் சன் ஸ்ட்ரோக் அவதியிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.
- கொலஸ்டிராலைக் குறைக்க 1 கப் இளநீர், 200 கிராம் கொட்டை நீக்கிய பப்பாளிச்சாறு சேர்த்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர நல்ல பயன் தெரியும்.
- வெதுவெதுப்பான வெந்நீரில் சில வேப்பிலைகளைப் போட்டுக் குளிப்பதால் சருமத்தில் தோன்றும் எரிச்சல் அடங்கும்.
- சமைக்கும் போது விரல்களில் தீக்காயம் ஏற்பட்டால் குளிர்ச்சியான சமையல் எண்ணெயில் விரல்களை நனைக்கவும். பின்னர் அந்த இடத்தில் உப்பைத் தேய்க்கவும்.
- மணல் அல்லது ஏதாவது தூசி கண்ணில் விழுந்தால் சில துளிகள் பாலை விடவும். எரிச்சல் குறையும். தூசியை வெளியேற்றவும் உதவும்.
- கை கால்களில் வெட்டுக்காயம் ஏற்பட்டால் சிறிது கடுகெண்ணெயைச் சுட வைக்ககவும். அதனுள் வெள்ளை மெழுகுவர்த்தி ஒரு துண்டு போடவும். குளிர்ந்தவுடன் ஒரு டப்பாவில் ஊற்றி வைத்து வெட்டுப்பட்ட இடங்களில் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை தடவ வேண்டும்.
- வயிற்று வலியிருந்து விடுதலை பெற இதோ ஒரு எளிய முறை. வெந்தயத்தைத் தண்ணீர் விட்டு விழுதாக அரைக்கவும். இதை ஒரு டம்ளர் மோரில் கரைத்துக் குடிக்கவும்.
- 1/2 கப் வெந்நீரில், 1டீஸ்பூன் நெய், 1 டீஸ்பூன் சர்க்கரை சேர்த்துக் குடிப்பதால் வயிற்றில் ஏற்படும் பிடிப்பு போகும்.



- தேள், பூரான் போன்றவை கடித்தால் உடனே அமோனியாவை கடிவாயில் தடவவும். குளிர்ந்த நீர் அல்லது ஐஸ்கட்டியால் ஒத்தடம் கொடுக்கவும். உடனே நிவாரணம் கிடைக்கும். மயக்க மருந்து போன்றவை தேவையில்லை.
- முடி கொட்டுகிறதா? தேங்காய்ப்பாலுடன் சிறிது எலுமிச்சைச் சாறைக் கலந்து உச்சந் தலையில் தேய்க்கவும். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நீராடவும். ஒவ்வொரு வாரமும் இந்த முறையைப் பின்பற்றுவதால் முடி உதிர்ந்து போவது தடுக்கப்படும்.
- முட்டையின் வெள்ளைக் கருவை உடலில் பட்ட தீக்காயங்களுக்கு உடனே தடவலாம். சருமத்தில் கொப்பளங்கள் ஏற்படாது.
- வயிற்றில் அமிலம் சுரப்பதால் ஏற்படும் பிரச்சினைக்கு ஒரு டம்ளர் குளிர்ந்த பனானா மில்க் ஷேக் குடிக்கலாம். (ஒரு வாழைப் பழத்தைப் பாலுடன் சேர்த்து மிக்ஸியில் அடித்து குடிக்கலாம்) உடனடி நிவாரணம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் மாணவர்களின் பெறுபேறுகளை சமூகம் மதிப்பீடு செய்து அவர்களைக் கௌரவிக்க வேண்டும்

## ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்

அச்சுவேலி,

''தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளை உரியமுறையில் சமூகம் மதிப்பீடு செய்து மாணவர்களை கௌரவிக்க வேண்டும். பரீட்சை சித்தி மட்டப் புள்ளி பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டு புலமைப் பரிசில் தகைமை மட்டப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் மட்டுமே பாராட்டப்படுகின்றனர். இது ஏற்புடையது அல்ல. சித்தியடைந்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாகும்''.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுவாமிநாதன்.

அச்சுவேலி மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் கல்லூரி அதிபர் வே. அரசகேசரி தலைமையில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது உதவிக் கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்- தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தமது பிள்ளைகளை புலமைப் பரிசில் சித்தியடைய வேண்டும் என்பதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் எடுக்கும் அக்கறை தொடர்ந்து எடுக்கப்படவேண்டும். தரம் 5 புலமைப் பரீட்சையில் புலமை பரிசில் பெற்ற மாணவர்கள் பலர் உயர் கல்வி கற்பதற்கான அடிப்படைத் தகைமை பெறமுடியாமல் கல்விப் புலத்திலிருந்து வெளி வீசப்படுகின்றனர். புலமைப் பரிசிலை பெற்றுக் கொள்ளாதவர்களில் 35 வீதமானோர் உயர் கல்வியில் சிறந்த அடைவு மட்டத்தைப் பெற்று பிரகாசிக்கின்றனர்.

தரம்-5 புலமைப் பரிசில் மட்டும் கல்வி அடையாளத்தின் குறிகாட்டியல்ல. இதனை கருத்திற்கொண்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக கவனம் செலுத்த வேண்டும். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் அனைவரும் பாராட்டப்படவேண்டும். பரீட்சையின் சித்தி மட்டப் புள்ளி வேறு. புலமைப் பரிசில் தகைமைக்கான புள்ளி வேறு. இதனை சமூகம் கருத்திற் கொள்ளவேண்டும்.

ஆரம்பப் பரிவு மாணவர்களின் கல்வியில் புலமைப் பரிசில் பரீட்சையை மட்டும் கருத்திற்கொண்டு கற்பிக்காமல் மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் உரிய தேர்ச்சி மட்டத்தைக் கருத்திற் கொண்டு கற்பிக்க வேண்டும். ஒரு சில மாணவர்கள் புலமைப் பரிசில் பெறும் அதேவேளையில் கணிசமான மாணவர்கள் எழுத்தறிவு, கணித அறிவு இல்லாதவர்களாக வகுப்பேற்றம் செய்யப்படுகின்றனர். கனிஷ்ட, இடைநிலை வகுப்புக்களில் எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்கள் இருக்கின்றார்கள்.

இதற்குக் காரணம், ஆரம்பப் பிரிவில் எழுத்தறிவு, கணித அறிவு உரியமுறையில் ஊட்டத் தவறியமையே என்பதை ஆசிரியர்கள் கருத்தில் நிலை நிறுத்தி கற்பிக்கவேண்டும்.

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறுதல், புலமைப் பரிசில் தகுதி பெறுதல் என்பனவற்றோடு மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் தொடர்ந்து ஆர்வத்தோடு கற்று தமது எதிர்கால வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பெற்றோர் மாணவர்களில் கல்வியில் தொடர்ச்சியான கவனிப்பையும் அக்கறையையும் செலுத்தவேண்டும் எனக் கூறினார்.

# தேசிய மட்டத்தில் முதலாமிடம்

வேலணை,

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய ஆசிரியை திருமதி கஜந்தினி வரதலோஜன் கலை, கலாசார மற்றும் அலுவல்கள் அமைச்சால் நடத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கான ஆக்கத் திறன் போட்டியில் நாடகப் பிரதியாக்கத்தில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். அத்தோடு கவிதை ஆக்கப் போட்டியில் ஆறுதல் பரிசும் பெற்றுள்ளார்.

# பொங்கல் விழா

(அலுவலக நிருபர்)

சிறுவர் மகிழ்வகத்தால் கடந்த வருடத்தில் நடத்தப்பட்ட கனினிக் கற்கை நெறிக்குரிய சான்றிதழ் வழங்கும் வைபவமும் பொங்கல் விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் இராச பாதையில் அமைந்துள்ள சிறுவர் மகிழ்வகத்தில் இடம்பெறவுள்ளதாக அதன் இயக்குநர் அறிவித்துள்ளார்.

கனினிக் கற்கைநெறியை சிறுவர் மகிழ்வகத்தில் பூர்த்தி செய்த மாணவர்கள் தமது சான்றிதழ்களைத் தவறாது பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளதுடன், சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் வெள்ளதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வாருங்கள்

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் 'கிழக்கிற்கோர் கரம்' என்னும் அவசர மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொருட்களை சேகரித்து அனுப்புவதற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், கிழக்கில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள எம் உறவுகளுக்கு நீண்ட காலத்தின் பின் ஓர் இணைப்பாகவும், உதவிக்கரமாகவும் நாம் உலர் உணவுப் பொருட்களைச் சேகரித்து வழங்கத் தீர்மானித்துள்ளோம். இதற்காக நாளை முதல் இவ் வாரத்திற்குள் பொருட் சேகரிப்பில் யாழ். மாவட்டம் முழுவதும் ஈடுபடவுள்ளோம்.

எனவே, வர்த்தக நிலையங்கள், அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ,தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மத அமைப்புக்கள், பொது மக்கள் போன்றோரிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கின்றதாகவும் பணம் அல்லாது பொருள் உதவியாகாவே எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மனிதாபிமான உதவிகளைச் செய்ய விரும்புவோர் 0772363534 அல்லது 0774812791 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாக மாணவர் ஒன்றியத்தைத் தொடர்புகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கான நடமாடும் சேவை

(அலுவலக நிருபர்)

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கான நடமாடும் சேவையும் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் 600 க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் கலந்து பயன்பெற்றன. அத்துடன் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

இந்த விசேட நிகழ்வை யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்த நடமாடும் சேவையில் யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி. சுகுணாவதி தெய்வேந்திரன் மற்றும் மேலதிக கல்விப் பணிப்பாளர், யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், ஆட்பதிவுத் திணைக்களப் பதவி நிலை உத்தியோகத்தர், காணித் திணைக்களத்தின் பிரதம நில அளவையாளர், யாழ். மாநகர சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் முஸ்லிம் மக்கள் கருத்துத் தெரிவிக்கும்போது- சுயமாகவும், வியாபார நோக்கம் கருதியும் சில அமைப்புக்களின் ஏற்பாட்டிலும் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இம்முறை அனைத்து அமைப்புக்களும் ஒன்றிணைந்து 400 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோரை மீளக்குடியமர அழைத்து வந்துள்ளனர்.

# தென்மராட்சிப் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு

கொடிகாமம்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்களுக்கான கருத்தரங்கு வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகளால் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 8 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளதாக தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் கிராம சேவையாளர்களுக்கு சட்டம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டத்தரணி சாந்த அபிமன்ன சிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிபதிகள் தமது கருத்துரைகளை வழங்கினர்.



யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் தளபாடங்கள் பாடசாலையின் அதிபரிடம் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் 16 பிரதேச, 3 நகர சபைகளுக்கு பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்

அச்சுவேலி

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் மூலம் 16 பிரதேச சபைகளுக்கும் 3 நகர சபைகளுக்கும் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வாக்களிப்புக்கு 551 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. உள்ளூராட்சித் தேர்தலை உரியமுறையில் நடத்தி முடிப்பதற்கு ஏற்ற வகையில் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் முழுமையாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய மூன்று நகர சபைகளும் ஊர்காவற்றுறை, காரைநகர், நெடுந்தீவு, வேலணை, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, வடமராட்சி மேற்கு, வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை, நல்லூர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி ஆகிய 16 பிரதேச சபைகளுக்கும் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சபைக்கு 9 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 12 பேர் இடம்பெறவுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபைக்கு 9 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 15 பேர் இடம்பெறவுள்ளனர்.

காரைநகர் பிரதேச சபைக்கு 5 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 7 பேர் இடம்பெறவுள்ளனர். ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு 5 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 7 பேர் இடம்பெறவுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச சபைக்கு 9 பிரதிநிதிகள் தெரிவுசெய்யபடவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 12 பேர் இடம்பெறவுள்ளனர். வேலணை பிரதேச சபைக்கு 9 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 15 பேர் இடம்பெறவுள்ளனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு 14 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 19 பேர் இடம்பெறவுள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு 21 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 27 பேர் இடம்பெறவுள்ளனர்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு 16 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 21 பேர் இடம்பெறவுள்ளனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு 16 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 21 பேர் இடம்பெறவுள்ளனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு 21 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 27 பேர் இடம்பெறவுள்ளனர்.

வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபைக்கு 18 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 24 பேர் இடம்பெறவுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு 9 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 12 பேர் இடம்பெறவுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு 15 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 20 பேர் இடம்பெறவுள்ளனர்.

நல்லூர் பிரதேச சபைக்கு 12 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில்16 பேர் இடம்பெறவுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 9 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 12 பேர் இடம்பெறவுள்ளனர்.

கரைச்சி பிரதேச சபைக்கு 19 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 25 பேர் இடம்பெறவுள்ளனர்.

பூநகரி பிரதேச சபைக்கு 10 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். வேட்பாளர் பட்டியலில் 13 பேர் இடம்பெறவுள்ளனர்.

## நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு

கொடிகாமம்,

கடந்த காலங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு தைப் பொங்கல் தினத்தன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதென யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 58 அரச உத்தியோகத்தர்களுக்கும் 33 சாதாரண பொது மக்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

தென் மராட்சிப் பிரதேசத்தில் 14 அரச உத்தியோகத்தர்களுக்கும் 19 பொது மக்களுக்கும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வு காலை 9.30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

### பங்குச்சந்தை யாழ்ப்பாணம்

தை 12 2011

| பங்குசந்தைச் சுட்டிகள் | இன்று | நேற்று |
|---|---|---|
| அனைத்துப் பங்கு (ASPI) | 7014.85 | 6995.20 |
| மிலங்கா (MPI) | 7334.09 | 7317.77 |
| உரிமைமுதல் தகவல்கள் | | |
| வியாபாரப்புரள்வு (Rs.) | 5667.40 Mn | |
| பங்குகளின் அளவு (Nos.) | 299.05 Mn | |
| வியாபாரம் (No.) | 41075 Nos | |
| சந்தை முதல்( mkt.Cap (Rs) | 2340.57 Bn | |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | | |
| அதிகரிப்பு (Top 5 gainers) | விலை (Rs) | +% |
| இன்டோ மலே | 580.00 | 35.80 |
| வரபோர இன்வெஸ்மென்ர் | 3,000.60 | 33.96 |
| சிலோன் அன்ட் பெ(கு)றின் | 9.80 | 25.05 |
| எஸ் எம் பி லீசிங் (W15) | 1.60 | 23.08 |
| டீசல் அனட் மோட்டர் | 1,385.50 | 18.37 |
| குறைவு (Top 5 Losers) | விலை(Rs) | (-)% |
| பிறவுண்ஸ் பீச் ஹோட்டல் | 72.50 | 14.61 |
| றீப்கொம்பர் (W17) | 45.90 | 8.75 |
| புறபரி டிவலொப்மன்ர் | 48.00 | 7.69 |
| றீப்கொம்பர் (W 19) | 27.90 | 7.62 |
| றீப்கொம்பர் (w 18) | 39.50 | 7.28 |

## மகரஜோதி பெருவிழாவும் 18ஆம் படி பூஜையும்

சங்கானை,

அராலி கிழக்கு மலையாளங்காடு ஸ்ரீ பூர்ண புஷ்கலா சமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான மகரஜோதி பெருவிழாவும் 18ஆம் படி பூஜையும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

# யாழ். குடாநாட்டில் 40 இலட்சம் தென்னங்கன்றுகள் நட ஏற்பாடு

கொடிகாமம்

யாழ். குடாநாடு முழுவதும் 40 இலட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்கு தெங்கு அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இத் திட்டத்திற்கு மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் மூலம் 228 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் விவசாயிகளுக்கு உரங்களும் மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

எனவே, மானிய விலையில் உரம் தேவைப்படுவோர் தமது பிரதேசங்களிலுள்ள கிராம உத்தியோகத்தர்கள் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.



யாழ். மாநகரசபையின் வருமான மதிப்பீடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆணையாளர் மு.செ.சரவணபவ உதவி மேயர் இளங்கோ ஆகியோர் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம். (படம்:- நெடுந்தீவு நிருபர்)

# முகாமைத்துவ கற்கைநெறி பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(அலுவலக நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வணிக பீடத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவக் கற்கை நெறிகள், தொழில் நிர்வாக மாணிக் கற்கை நெறிகள் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2010ஆம் ஆண்டு வணிகமாணி, தொழில் நிர்வாக மாணி ஆகிய கற்கை நெறிகளைப் பயிலும் 1ஆம், 2ஆம், 3ஆம், 4 ஆம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கும் தொழில் நிர்வாக மாணிக் கற்கை நெறிகளைப் பயிலும் 1ஆம், 2ஆம் வருட மாணவர்களுக்கான பரீட்சைக்குமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மேற்படி பீடத்தால் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென யாழ். பல்கலைக்கழ பதிவாளர் கேட்டுள்ளார்.

அதேவேளை மீள் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் ஒரு பாட அலகுக்கான கட்டணமாக 50 ரூபாவைச் செலுத்தி பற்றுச்சீட்டை யாழ். பல்கலைக்கழக சிறாப்பரிடம் ஒப்படைத்து விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டி - அனிவத்தை இரண்டாம் இராஜசிங்க மாவத்தையின் ஐந்து குடியிருப்புக்கள் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிய கற்பாறைகள் மற்றும் மண் சரிந்து வீழ்ந்தது. மேற்படி விபத்தினால் முற்றாக சேதமடைந்துள்ள குடியிருப்புக்களையும், இராணுவத்தினரும் பொதுமக்களும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதையும், மண் மற்றும் கற்பாறைகள் பாதையில் சரிந்து வீழ்ந்துள்ளதையும் படங்களில் காணலாம். (படங்கள் - வத்துகாமம், கண்டி நிருபர்கள்)

# ஊவாவிலிருந்து குறைந்தது 500 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்லவேண்டும்

## - பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர்

பதுளை,

ஊவா மாகாணத்திலிருந்து தமிழ் மாணவர்கள் குறைந்தபட்சம் ஐந்நூறு பேரையாவது பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ் இலக்கை நோக்கியதாகவே தமிழ் அதிபர், ஆசிரியர்களின் பயணம் அமையவேண்டும் என்று பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். விஜயசந்திரன் தெரிவித்தார்.

பண்டாரவளை இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆய்வரங்கமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ் ஆய்வரங்கம் மாற்றத்திற்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் ஏற்பாட்டில் பண்டாரவளை இந்து இளைஞர் மன்ற அனுசரணையுடன் நடைபெற்றது.

இவ் ஆய்வரங்கத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். விஜேயசந்திரன் தொடர்ந்து பேசுகையில்,

அதிபர், ஆசிரியர்களிடையே ஒற்றுமை நிலவுவதுடன் அதி சிறந்த தலைமைத்துவத்துடன் அதிபர்கள் இயங்கும் நிலை ஏற்பட வேண்டும். சிறந்த தலைமைத்துவம் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் பாடசாலை நிர்வாகம் சீராகவே இடம்பெறும். கல்விச் செயற்பாடுகளும் உரிய முறையில் மேம்பாடடையும். அதிபர், ஆசிரியர்களிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, அர்ப்பணிப்பு, சமூகப் பற்று ஆகியவற்றின் மூலமே கல்வி மேம்பாடுகள் தங்கியுள்ளன.

அதிபர்கள், ஆசிரியர்கள் கூட்டுச் சேர்ந்து குறிப்பிட்ட வட்டத்திற்குள் அமைந்திருக்கும் இரண்டு அல்லது மூன்று பாடசாலைகள் இணைந்த வகையில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஆரோக்கியமானதோர் நிலை ஏற்பட வேண்டும். இந்நிலையினை உறுதிப்படுத்திக் கொள்ளும்போது உயர்கல்வியை மேம்படுத்திக்கொள்வதுடன் பல்கலைக்கழக பிரவேச அடைவு மட்டத்தையும் அதிகரித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாட்டின் பல்கலைக்கழகங்களில் மலையகம் சார் பேராசிரியர்கள் நால்வர் மட்டுமே உள்ளனர். இவர்களில் மூன்று பேர் ஓய்வுபெற்றுள்ளனர். மேலும், ஒருவர் இவ்வருட இறுதியில் ஓய்வுபெறவுள்ளார். அடுத்த கட்ட பேராசிரியர்கள் உருவாக சில வருடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. அந்நிலைதான் எமது சமூகத்தில் இருந்துவருகின்றது என்றார்.

# மொனராகலை பிரதேச சபையின் வரவு-செலவு திட்டம் நிறைவேற்றம்

பதுளை,

மொனராகலை பிரதேசசபையின் 2011 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட நிதி அறிக்கை ஐக்கிய தேசியக் கட்சி சார்பான சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆறு அதிகப்படியான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

சபையின் தலைவர் ஆர். எம். ரட்ணவீர தலைமையில் சபை மண்டபத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி அறிக்கை சமர்ப்பிக்கும் அமர்வு இடம்பெற்றது. அவ்வேளையில் சபைத் தலைவரினால் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட நிதி அறிக்கை, சபை அமர்வில் சமர்ப்பிக்கப் பட்டது.அதையடுத்து விவாதங்கள் இடம்பெற்று அன்றுமாலை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. வாக்கெடுப்பின் போது சபையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் இணைந்து சபையின் ஐ.தே.க உறுப்பினர்கள் இருவரும் வரவு-செலவுத் திட்ட நிதி அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர். இவ் அறிக்கைக்கு எதிராக சபையின் ஜே.வி.பி. உறுப்பினரொருவர் மட்டும் வாக்களித்தார்.

# வேட்பாளர்களை தெரிவுசெய்ய இ.தொ.ஐ.மு. ஏற்பாடு

(நாவலப்பிட்டி மேலதிக நிருபர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் சார்பாக போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுவதாக முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

இதேவேளை இந்த வேட்பாளர்களைத் தெரிவு செய்து கொள்வதற்காக கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் உயர்பீட முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவில் நுவரெலியா மாவட்டத்திற்கு இந்த முன்னணியின் உப தலைவர் எஸ். ராஜரட்ணம், நிதிச் செயலாளர் தர்மலிங்கம் பதுளை மாவட்டத்திற்கு உப தலைவர் சகாதேவன், உப செயலாளர் சுலோபராஜா, கண்டி மாவட்டத்திற்கு உப தலைவர் ரட்ணம் இரத்தினபுரி மாவட்டத்திற்கு அமைப்பாளர்களான வை.எம். இராஜா, கணேசன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# முன்பிள்ளை பருவ கற்கைநெறி மலையகத்தின் கல்வித்துறையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்

(நாவலப்பிட்டி மேலதிக நிருபர்)

மலையகத்தின் முன்பிள்ளைப் பருவ கற்கைநெறி கல்வித்துறை வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டி. தனராஜ் தெரிவித்தார்.

அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இலங்கைத் திறந்த பல்கலைக்கழக முன்பள்ளி கல்விச் சான்றிதழ் பாடநெறியின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடத்திட்ட இணைப்பாளர், விரிவுரையாளர் இராமதாஸ் பிரிடோ நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொண்ட இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் திறந்த பல்கலைக்கழக சமூக, விஞ்ஞான பீட தலைவர் கலாநிதி சந்திரபோஸ், சிரேஷ்ட விரிவுரையாளர் முகுந்தன், அட்டன் வலயக் கல்விப்பணிப்பாளர் எம். ரெங்கராஜ், பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவ. இராஜேந்திரன், பிரிடோ நிறுவனத் தலைவர் மைக்கல் ஜோக்கிம், வெளிக்கள இணைப்பதிகாரி எஸ்.கே. சந்திரசேகரன், கொட்டகலை ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் எஸ். சேகர் ஆகியோர் கருத்து வழங்கினர்.

# மாத்தளை மாவட்டத்தில் முதலாவது சுயேட்சைக்குழு கட்டுப்பணம் செலுத்தியது

இறத்தோட்டை,

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை பிரதேச சபைக்குப் போட்டியிட முதலாவது சுயேட்சைக் குழு கட்டுப்பணத்தைச் செலுத்தியிருப்பதாக பிரதி தேர்தல்கள் ஆணையாளர் நிஸாந்த தினிப்பிரிய ஹேரத் தெரிவித்தார்.

திருத்தி அமைக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்கான தேர்தல் இடாப்பின்படி மாத்தளை மாவட்டத்தில் 3 இலட்சத்து 19 ஆயிரத்து 419 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். பள்ளேபொல பிரதேச சபைக்கான 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 22647 வாக்காளர்களும் கலேவெல பிரதேசசபைக்கான 15 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 51462 வாக்காளர்களும் தம்புள்ள மாநகர சபையின் 15 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 14540 வாக்காளர்களும் தம்புள்ள பிரதேச சபைக்கான 14 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 31897 வாக்காளர்களும் வாக்களிக்கவுள்ளனர். மேலும் அம்பங்காக பிரதேச சபைக்கான 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 12112 வாக்காளர்களும் நாவுல பிரதேச சபைக்கான 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 22699 வாக்காளர்களும் லக்கல பிரதேச சபைக்கான 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 9388 வாக்காளர்களும் வில்கமுவ பிரதேச சபைக்கான 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 21009 வாக்காளர்களும் வாக்களிக்கவுள்ளனர்.

அத்துடன் மாத்தளை பிரதேச சபைக்கான 18 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 27023 வாக்காளர்களும், யட்டவத்தை பிரதேச சபைக்கான 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 22944 வாக்காளர்களும் உக்குவளை பிரதேச சபைக்கான 14 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 46339 வாக்காளர்களும் இறத்தோட்டை பிரதேச சபைக்கான 12 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 37359 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்ற ஆண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம்பேருக்குச் சிகிச்சை


கொடிகாமம்

சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த வருடம் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவற்றில் வெளி நோயாளர் பிரிவில் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் பேரும் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றோர், 9 ஆயிரத்து 900 பேரும் ஏனையோர் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றவர்கள் என வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சாவகச்சேரி வைத்தியசாலையில் காச நோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பிக்குமாறு தென்மராட்சி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தென்மராட்சிப் பிரதேசத்தில் வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்கள் அதிகம் வசித்து வருவதுடன் பளை, கிளிநொச்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அதிகம் வந்து செல்கின்றனர்.

தற்போது யாழ். பண்ணையில் இயங்கி வரும் மார்பு நோய் சிகிச்சை நிலையமே காச நோயாளருக்கான ஒரே ஒரு சிகிச்சை நிலையமாகத் தொழிற்படும் நிலையில் தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

எனவே சாவகச்சேரி வைத்தியசாலையில் புதிதாக இரு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் காச நோய் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




# 25 ஆவது தேசிய இளைஞர்விழாவில் தேசிய விருதினைப் பெற்றுக்கொண்டோர்

தெல்லிப்பளை

25 ஆவது சர்வதேச இளைஞர் வருடத்தை கொண்டாட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு இணைந்து ஒழுங்கு செய்திருந்தது. இவ் விருது விழாவுக்கு 2010 இல் தமிழ் பிரிவில் கிடைக்கப்பெற்ற விருதுகள் வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கிராமிய நடனம் கலப்பு பி.யப்ரானா குழுவினரும் பரதநாட்டியம், பெண் தனி -பி.யபர்னா, பரத நாட்டியம் ஆண்தனி-கே.பவன், அறிவிப்பாளர் -வி.ஜெயச்சந்திரன், பாடல் இயற்றுதல்-சுரேஸ்குமார் விஜிதா, குறுநாடகம் எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரும் அம்பாறை மாவட்டத்திலிருந்து கிராமியபாடல் தனி எஸ்.தவசீலன், புதிய ஆக்கம் எச்.கே.ஈ.நிருசிக, மிருதங்கம் -எஸ்.தவசீலன், சிறுகதை எஸ்.பாத்திமா மிஸ்கா ஆகியோரும் மன்னார் மாவட்டத்திலிருந்து இளம் பாடகர் ஜி.எவ்.சுதர்சினி, வவுனியாவில் இருந்து வயலின்-சிவதர்சினி, திருகோணமலை மாவட்டத்திலிருந்து கவிதை மகேந்திரன் தர்சனும், கம்பஹா மாவட்டத்திலிருந்து கட்டுரை -செல்வரத்தினம் விராஜ் சர்வின் ஆகியோரும் இளைஞர் தேசிய விருதினை பெற்றுக் கொண்டுள்ளனர்.

## இணைப்பாளராகத் தெரிவு

வடமராட்சி

கரவெட்டி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் சிவசுப்பிரமணியம் ஜெய்சங்கர் தொழில் சங்க மகா சம்மேளன யாழ்.மாவட்ட இணைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வரணி-கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த இவர் சிறந்த தொழிற்சங்கவாதியும், சமய, சமூக பற்றாளருமாவார்.



இலங்கை கராத்தே சம்மேளன அங்கத்தவரும் இலங்கை பாடசாலை கராத்தே சங்க அங்கத்தவருமாகிய சென்சேய் அன்றோடினேஷினால் செவிப்புலனற்றோர் சங்கத்தில் கராத்தே தேசிய நடைமுறைகள் பற்றி பயிற்சி முகாம் வலி.மேற்கு கராத்தே ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

# இராமநாதன் நுண்கலைக்கழக பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

அச்சுவேலி

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைகழகம் 2010/2011 க்கு உளச்சார்பு பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நுண்கலைமாணி நான்கு வருடப்படிப்பு கற்கை நெறிக்கு இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பு பாடநெறிகளுக்கு அநுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகள் உரிய மாதிரி விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் இம் மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் 2010 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவு செய்யவிரும்பும் பட்டப் பாடநெறிக்கு உரிய பாடத்தில் அதாவது சங்கீதம் -கர்நாடகம் அல்லது நடனம்-பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக்குறைந்த திறைமைச்சித்தி (சி) மற்றைய இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும்(எஸ்) பெற்றிருத்தல் வேண்டும்.

கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சைக்கு உள்ளடங்கிய தகுதி காண் பரீட்சைக்கு தோற்றவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0212226714 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 5 மாணவர்களுக்கு தங்கப்பதக்கம்

வட்டுக்கோட்டை

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய சைவ சமய பாடப்பரீட்சையில் ஐந்து மாணவர்கள் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர். ச.வசீகரன் (தரம்3) வலந்தரை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, பெ.கீர்த்தனா (தரம் 5) யாழ்ற்ரன் கல்லூரி, தி.சயந்தன் (தரம் 7) யாழ்ற்ரன் கல்லூரி, கா.சாந்தினி (தரம் 9) கலாநிதி ஆ.தியாகராசா மகா வித்தியாலயம், இ.கிருசா (தரம் 11) யாழ்ற்ரன் கல்லூரி.

அண்மையில் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் சிவத்திரு தி.விசுவலிங்கம், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் மேற்படி மாணவர்களுக்கு த் தங்கப் பதக்கங்களை அணிவித்து கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பட்டம் விடும் போட்டி

வடமராட்சி

தமிழ் மக்களின் விளையாட்டுக்களில் ஒன்றான பட்டம் விடும் போட்டி சுமார் 20 வருடகால இடைவெளிக்குப் பின்னர் நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் இப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து அனைவரும் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் வெற்றி பெறுவோர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் வல்வெட்டித்தறை பருத்தித்துறை கடற்கரை மைதானங்களில் ஏட்டிக்குப் போட்டியாக பட்டம் ஏற்றும் போட்டிகள் இடம்பெற்று மக்களை மகிழ்ச்சிப் படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனித்திடும் தைப்பொங்கல் திருநாள்





தமிழர் திருநாள் தைப்பொங்கல் நன்னாள். இன்று தமிழர்களால் கொண்டாடப்படுகின்ற இந்தத் தைப்பொங்கல் தினமானது மிகவும் அதிவிசேட மான சிறப்புடைய திருநாளாகும். வயலில் நெற் கதிர்கள் நன்கு விளைச்சலாகி அறுவடைக்குத் தயா ராகும் நிலையில் நெற்கதிர்கள் நன்கு உற்பத்தி செய்ய உறுதுணையாகவிருந்த உதயசூரியனுக்குப் பொங்கல் படைக்கின்ற பொன்னான நாள் இது.

'நன்றி மறப்பது நன்றன்று' என்றபடி தமிழர் நன்றி மறவாத நற்குணமுடையவர்கள். அந்த வகை யில் நெல்மணிகளின் விளைச்சலுக்கு உதவி புரிந்த சூரியபகவானுக்கு நன்றிக்கடன் செலுத்தும்முகமா கவே இந்த தைப் பொங்கல் அமைகின்றது.

மார்கழி மாதம் முடிவுற்று தைமாதம் பிறந்தவு டனே வயலில் நெல் விளைச்சலுக்காகப் பாடுபட்ட உழவர் பெருமக்கள் மிக ஆனந்தமாகத் தை மகளை வரவேற்றுப் புத்தரிசிப் பொங்கலிட்டு மகிழ்கின்ற பொன்னான பண்டிகை இந்தப் பொங்கற் பண்டிகை யாகும்.

சூரியோதயத்துக்கு முன்னதாக அதிகாலையிலே எழுந்து மங்கள மஞ்சள் நீராடி முற்றத்தைச் சாணகத் தாலே மெழுகி அரிசிமா, மஞ்சள் மா முதலியவற் றால் அழகான வண்ணக் கோலமிட்டு கும்பம் வைத் துக் குத்துவிளக்கேற்றி மாவிலை தோரணங்களால் அலங்கரித்துச் சூரியபொங்கல் குதூகலத்துடன் ஆரம்பமாகும்.

முற்றத்திலே மூன்று கல்லை வைத்து அறுகம்புல் லினாலே சாணக உருண்டையிலே பிள்ளையாரை ஆவாகனம் பண்ணி விக்கினம் தீர்க்கின்ற விநாயக வணக்கத்துடன் புதுப்பானையிலே பசுப்பாலை விட்டு தென்னம் பாளைகளாலே தீ மூட்டி புத்தரிசிப் பொங்கல் தொடங்க இல்லத்திலிருக்கின்ற அங்கத் தவர் அனைவரும் ஒருமித்த மகிழ்ச்சியான மனத்து டன் காணப்படுவர். சுமங்கலிப் பெண்கள் அரிசி யைக் கழுவி வறுத்துக் குற்றிய மஞ்சள் பயறையும் சேர்த்துப் பால் பொங்கிச் சரிந்தவுடன் பானையிலே இடுவார்கள்.

பின்பு அரிசி வெந்து நல்ல பதமாக வருகின்ற வேளை பார்த்து இனிப்புப் பதார்த்தங்களை ஒவ் வொன்றாக அடுக்கடுக்காய் போட்டு வைப்பார். சர்க் கரை சீனி, தேன், பால், கஜூக் கொட்டை, முந்திரி வற்றல், பேரீச்சம்பழம், நெய் ஏலக்காய் முதலான வற்றை அளவாகச் சேர்த்து அவியவிடுவார்கள்.

எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து பொங்கல் திரண்டு வரும் போது நல்ல கட்டித் தேங்காய் பாலை விட்டு மேலும் கொஞ்சம் பசு நெய்யும் சேர்த்து இறுக விடு வார்கள்.

இதற்கிடையில் இல்லத்திலிருக்கின்ற சின்னஞ் சிறு பாலர்கள் பொங்கற் பானை பொங்கிச் சரிகின்ற மங்களகரமான மகிழ்ச்சி நிறைந்த நல்ல வேளையி லே பட்டாசு, பூந்திரி, சக்கரவானம் முதலியவற்றை விருப்பப்படி கொளுத்தி மகிழ்ந்து குதூகலிப்பர். 'பொங்கலோ பொங்கல்' என்ற கோஷம் எழுப்பிய வண்ணம் அவர்கள் துள்ளித் துள்ளி விளையாடுவ தைக் காணும் போது மனம் இன்பத்தினாலே துள்ளும்.

இத்தனை மகிழ்ச்சி நிறைந்த இந்தத் தைப்பொங்க லானது தமிழர்தம் வாழ்வில் ஒரு முக்கிய பிரதான இடத்தை வகிக்கின்றது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற படி மனிதவாழ்வின் முக்கிய தேவையான அரிசிச் சோற்றுக்கு வகை செய்யும் சூரிய பகவானை மகிழ வைக்கும் இன் றைய 'தைப்பொங்கல் ' மிக விசேடமான மகிழ்ச்சி கரமான ஒரு பண்டிகையாகும்.

'தை மகளே! வருக எங்கள் தமிழ் மகளே வருக!!
கைமேற் பலன் தந்திடும் எம் தனிமகளே வருக!!
பொங்கலோ பொங்கலென்று போற்றிப் பணி வோமே
மங்களமாய் எல்லோரும் மகிழ்ந்து வரவேற் போமே

இனிக்கும் தமிழ் போன்று இதமாய்ப் பொங்கி வரும் பதமான தித்திக்கும் பொன்னான பொங்கலை மனவிருப்புடனே மங்களகரமாய் ஒரு சேர உட் கார்ந்து உண்டு மகிழ்கின்ற இன்றைய தைப் பொங் கல் மிகச் சிறப்பானதே.

'தமிழ் தமிழ் திரும்பத் திரும்பச் சொன்னால் அது 'அமிழ்து அமிழ்து' என்றே ஒலிக்கும். அத்தனை சிறப்பம்சம் பொருந்திய இனிய தைப்பொங்கல் திரு நாளை எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையு டனே கொண்டாடி எல்லாம் வல்ல தமிழ் கடவுள் கலியுகவரதன் கந்தனின் கருணையாலே சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று சதுர்வித புரு ஷார்த்தங்களையடைந்து இன்புற்று மிகிழ்ந்து இகபர சௌபாக்கிய நல் வாழ்வுக்கு நம்மை நாமே தயார் படுத்திக் கொள்வோமாக.

'பொங்கலோ தமிழ்ப் புத்தரிசிப் பொங்கல்!
மங்களம் நிறைந்த மகோன்னதப் பொங்கல்!!'

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

## நவீன பொங்கல் பொங்கி நாழிகையும் கடந்து விட்டன

தை மகள் வந்தாள்
தரணியெங்கும் செழிக்க
தை பிறந்தால் வழி பிறக்கும் என
சான்றோர் கூறக் கேட்டோம் இங்கே
தமிழர் தாயகத்தில் வழியும் பிறக்கவில்லை
வறுமையும் நீங்கவில்லை ஏன்
என்று கேட்டதற்கு வரட்சி
என்று கூறுகின்றார்கள் வானமும்
பொய்த்துவிட்டது நில மகளும்
ஏமாற்றி விட்டாள்..... இனியேது வாழ்வும்
வளமும் குன்றி விட்டது காரணம்
விலைவாசியும் உயர்ந்து விட்டது
மலை போல் ஏறிவிட்ட நிலையில்
தைப் பொங்கல் திருநாளை எப்படிக்
கொண்டாடுவது இது ஏழை விவசாயியின்
கவலை
போனது போகட்டும் புது வருடத்திலாவது
புதுப் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல்
பொங்கிப்படைப் போமா வென
புன்முறுவலுடன்
புது மனை சென்றால் அங்கு நவீன
பொங்கல் பொங்கப்பட்டு நாழிகையும் கடந்து
விட்டது.

கந்த.ஞானமுத்து
கைதடி மேற்கு 02

## தைப்பொங்கல்

பசுமாட்டுச் சாணி போட்டு
முற்றத்தில் மெழுகி
பக்குவமாய் மூன்று கல்லு
அடுப்புதனை மூட்டி
புதுப்பானை மாவிலையால் மாலைகட்டி
புதுநெல்லு அரிசி குற்றி சுளகாலே
புடைத்தெடுத்து பயறு
பால் சர்க்கரை சேர்த்து
பொங்கலோ பொங்கலென்று மகிழ்ந்து
பொலிவோடும் புன்னகையோடும்
பொங்கல் செய்வது அக்காலப் பண்பாடு
இதுவே தமிழ் சைவப் பண்பாடு.

அடுப்படியில் ஒரு கரையில்
அழகான மாபிள்த் தட்டிலே
அதே றைஸ் குக்கரை
அழுத்தித் துடைத்துவிட்டு
மின்சாரம் சம்சாரமாக மாறி
வேலை மினக்கேட்டை குறைக்க
பவுடர் சர்க்கரையும்
பைக்கற்றின் வறுத்தபயறும்
கயு பிளம்ஸ் கச்சானுடனும்
பால்ப்பவுடர்
உதவியோடு
பைக்கற் அரிசி
பொங்கலாகும்
இதுவே இக்காலப்
பண்பாடுமாகும்.



வி.கார்த்திகா
அல்வாயூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் உலகம்

# ஆடுகளத்தை மறுத்த ஐங்கரன்

**மேற்கத்திய** நாடுகள் அனைத்துமே கடும் பனிப்பொழிவின் காரணமாக இயல்பு வாழ்க்கையை முற்றிலும் தொலைத்துவிட்டு நிற்கிறது. இதனால் அங்கு நிலவும் இயற்கைச் சிக்கலால் தமிழ்ப்படங்களின் வெளிநாட்டு விநியோகம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பொங்களன்று வெளியாகவிருக்கும் காவலன், ஆடுகளம், சிறுத்தை, இளைஞன் ஆகிய நான்கு படங்களில் விஜய்யின் காவலன் படத்திற்கு மட்டும்தான் நல்ல வியாபாரம் நடந்திருக்கிறதாம். எந்திரன் படம் மூலம் உலகம் முழுவதும் புகழ்பெற்றதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் சன்பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிடும் ஆடுகளம் படத்தை வாங்க ஐங்கரன் நிறுவனம் மறுத்துவிட்டதாம்.

மாறாக விஜய்யின் காவலன் படத்தின் அமெரிக்க உரிமையை வாங்கி வெளியிடுகிறது ஐங்கரன் பிலிம்ஸ்.

வேறு யாராவது வாங்குவார்கள் என்று எதிர்பார்த்தார்களாம். ஆனால் யாரும் வாங்கத் தயாராக இல்லையாம். விஜய் படங்களுக்கு ஒரு வரவேற்பு எப்போதும் இருப்பதால் அவருடைய படம் மட்டும் பிஸினஸ் ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள்.

கிரகங்களின் மாற்றம் மட்டுமில்லை பருவநிலைகளின் மாற்றங்களும் பாதிக்கத்தான் செய்கின்றன.



நாகச்சைதன்யா

மலை...
மத்தியில்...
நடிகர் வி...
விஜய்க்...
இந்த வி...
ஸ்டார்...
வழங்கி...
மலை...
புலர் தமி...
வாங்கும்...
நடிகர்...
குறிப்பி...
இதற்...
க்கு தல...
ய வா...
தெரிவி...

# 'ஏ' சான்றிதழ்

**'எங்கள்** கண்ணீரை சொல்லவும் வெளிப்படுத்... யாருமில்லாதபோது யாரோ ஒருவர் பெரும் பொருட்... செய்து படமாக எடுத்திருக்கிறார். அந்தப் படத்தை... எல்லாரும் பார்க்க வழியில்லாதபடி 'ஏ' சான்றிதழ் கொடுப்பது எந்த வித... நியாயம்? என்று கோஷமிட்டவாறு சென்சார் அமைப்பை முற்றுகையிட்டி... கிறார்கள் ஐம்பதுக்கும் மேற்பட்ட திருநங்கைகள். இதனால் சென்ச... அலுவலகம் அமைந்துள்ள சாஸ்திரி பவ... சிறிது நேரம் பரபரப்புக்குள்ளானது.



தேனீர் விடுதி

# சினி பிட்ஸ்

- அஜித் நடித்த 'சிட்டிசன்' படத்தை இயக்கிய சரவண சுப்பையா 'நெல்லை சமப்வம்' படத்தில் வில்லானாக நடிக்கிறார்.
- உடலை ஸ்லிம்மாக வைக்க யோகா செய்து வந்த திரிஷா தற்போது ஷூட்டிங் காரணமாக சில மாதங்களாக யோகா செய்யவில்லையாம்.
- தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் ஹரிஸ் ஜெயராஜ் இசையில் 7 படங்கள் இந்த ஆண்டு ரிலீஸ் ஆக உள்ளது.
- சவுந்தர்யா ரஜனி தயாரிக்கும் அனிமேஷன் படத்தில் ரஜனி நடிக்கும் நேரடி காட்சிகளை கே.எஸ். ரவிக்குமார் இயக்க உள்ளார். சில காட்சிகளில் நடிக்க திரிஷாவை கேட்டுள்ளனர்.
- டி.ராஜேந்தர் இயக்கும் புதிய படத்தில் சிம்பு கௌரவ வேடத்தில் நடிக்க உள்ளார்.
- இயக்குநர்கள் ஜோடி ஜெர்ரி தங்கள் அறக்கட்டளை சார்பில் இலக்கியவாதிகளுக்கு சாரல் விருது வழங்குகின்றனர். இந்த ஆண்டு எழுத்தாளர் அசோகமித்ரனுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- மங்காத்தாவுக்கு முக்கிய நகைச்சுவை நடிகரை உள்ளே கொண்டு வரலாமே என்றாராம் அஜித். தற்போது நகைச்சுவை நடிகரைத் தேடும் முயற்சி தீவிரமாக நடந்து வருகிறது.



# இன்ப அ...

**நடிகர்** சூர்யாவுக்கு கௌரவ வேட...
தில் வெளிவந்த 'மன்மதன் அம்பு' பட...
பாலாவும் செய்திருக்கிறார் தனது 'அவ...
அந்த ஊருக்குள் வருவாரோ, அ...
அவருக்கும் விஷாலுக்கும்...
அவ்வளவு ஈசியா பே...
விஷாலின் நரம்பெல்...
விஷால் நவரசம்...
நடித்துக் காட்டுவா...
இன்ப அதிர்ச்சியி...
முன்பாக விஷா...
போவதில்லை...
அதை தெ...
சூர்யாவின்...

ஒரு...
விஷா...
பெண்...
போகி...
அடிக்...
அப்...
வில்ல...
செய்வா...
இருப்பார...
நான்...
பொறந்தது...
விஷாலின்...
எழுந்து வெ...
அப்புறமென்...
தனது இட...
கொள்வாராம்...
இப்போதே ச...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையாள சினிமா ரசிகர்கள்
தியில், பாப்புலரான தமிழ்
ர் விருது இளைய தளபதி
ய்க்கு வழங்கப்பட்டது.
த விருதை இந்தி சூப்பர்
ார் அமிதாப் பச்சன்
ங்கினார்.
லையாளத்தில் 'பாப்
தமிழ் நடிகர்' விருது
வும் முதல் தமிழ்
ர் விஜய் என்பது
ப்பிடத்தக்கது.
தற்காக தளபதி
தல தன்னுடை
வாழ்த்துக்களை
ரிவித்துள்ளார்.

டுத்தவும்
ட்செலவு
ந்தையும்
தத்தில்
டிருக்
ன்சார்
வன்



# அதிர்ச்சியில் பாலா

வடம் கொடுக்கிற எல்லாருமே, அவரை ஹீரோவாகவே காட்டுகிறார்கள். சமீபத் படத்தில் கூட சூர்யாவின் வேடம் சினிமா ஹீரோதான். இதே வேலையைதான் 'அவன் இவன்' படத்திலும். எப்படி பிதாமகன் படத்தில் சிம்ரன் நடிகையாகவே அதை போலவே இந்த படத்திலும் நடிகராக அந்த ஊருக்கு வருவாராம் சூர்யா. தும் ஒரு வாக்கு வாதம் ஏற்படுகிறது. அதில் 'நடிகன்னா உங்களுக்கெல்லாம் போச்சா? நடிச்சு பார்த்தால்தான்யா தெரியும்' என்று சூர்யா கொக்கரிக்க, பெல்லாம் விடைத்துக் கொள்கிறது.

ரசும் என்று சொல்லப்படும் ஒன்பது வகையான நடிப்பையும் மாற்றி மாற்றி டுவாராம் சூர்யாவிடம். இந்த காட்சியை ஒரே டேக்கில் விஷால் செய்து காட்ட, சியில் திக்குமுக்காடிப் போனாராம் பாலா. இந்த காட்சியை எடுக்கப் போவதற்கு விஷாலிடம், இதுதான் சீன். நான் அந்த நவரசத்தையும் உனக்கு சொல்லித்தரப் லை. அதை நீயாகதான் செய்யணும் என்றாராம்.

தொடர்ந்துதான் விஷாலின் இந்த தனி ஆவர்த்தனம். இந்த காட்சியில் வின் இமேஜ் கொஞ்சம் 'டவுன்'தான் என்கிறார்கள் யூனிட்டில்.

# பொட்டையா போச்சே

**ஒரு** அப்பா, இரண்டு அம்மாக்கள். இதில் இரண்டாவது தாய்க்கு பிறந்தவர் விஷால். மூத்தவருக்கு பிறந்தவர் ஆர்யா என்று போகிறது கதை. விஷால் பண்மை கலந்த தோற்றத்தில் நடிக்கிறார். உற்றார் உறவினர் நண்பர்கள் என்று பாகிற இடத்திலெல்லாம் கேலியையும் கிண்டலையும் அனுபவிக்கும் விஷால், டிக்கடி வீட்டின் மூலையில் குறுகுறு பார்வையோடு அமர்ந்திருப்பாராம்.

அப்படி ஒருநாள் அமர்ந்திருக்கும் போதுதான் அந்த சம்பவம் நடக்குமாம். ல்லனின் ஆட்கள் வீட்டிற்குள் புகுந்து அந்த வீட்டையே துவம்சம் ய்வார்களாம். அத்தனையையும் பார்த்துக் கொண்டு அமைதியாகவே ப்பாராம் விஷால்.

ான் பெத்த ஒரு புள்ளையும் இப்படி பொட்டையா போச்சே. அது மட்டும் ந்தது மாதிரியே ஆம்பிளையாவும் வளர்ந்திருந்தா இப்படி ஆகியிருக்குமா என்று ின் அம்மா புலம்பியவாறு மயங்கி சாய, அப்படியே வெற்றுப் பார்வையோடு வெளியே வரும் விஷால், காட்டுத்தனமாக ஒரு /பைட் செய்வாராம். மென்ன? வில்லன்களை புரட்டி எடுத்துவிட்டு அப்படியே பழைய மாதிரியே இடத்தில் போய் அதே நிலைகுத்திய பார்வையோடு அவர் உட்கார்ந்து ாராம். இந்த காட்சி தியேட்டரில் பெரும் ஆரவாரத்தை ஏற்படுத்தும் என்று தே சந்தோஷப்படுகிறது அவன் இவன் யூனிட்!

## கோடம்பாக்கம் செய்தி கேட்டீங்களா?

**செ**ல்வமான இயக்கமும், இளைய இசையும் திரும்ப சேர்ந்து படம் பண்றாங்க... பண்றாங்க... அந்த படத்துக்கு ஏற்கனவே இன்ஷியல் இசை போட்ட பாடல் ஒண்ணு பெட்டியில இருக்காம்.. இருக்காம்... இதை யூஸ் பண்ணலாம்னு இயக்கம் நினைச்சாராம். ஆனா, அது வேணாம்னு இசை சொன்னதால இயக்கமும் சரின்னு சொல்லிட்டாராம்... சொல்லிட்டாராம்...

**ம**வுன ராக நடிகரு மறுபடியும் நடிக்க வந்ததும் அவரை ஹீரோவா போட்டு படம் எடுத்து ரிலீஸ் பண்ண முடியாம இருந்த தயாரிப்புங்க குஷியானாங்க. எப்படியாவது நடிகரோட ரெண்டு படம் வந்ததுன்னா அதைக்காட்டி பெட்டில தூங்குற தங்களோட படத்தை ரிலீஸ் பண்ணலாம்னு கணக்கு போட்டாங்க... போட்டாங்க... ரிலீசான படங்கள் சரியா போகல. திரும்ப நடிகருக்கும் வாய்ப்பு வரல இதனால கணக்கு போட்டவங்க கவலையில இருக்காங்களாம்.... இருக்காங்களாம்.....




# சிம்பு எஸ்கேப்

**சீவுனா** சிக்குது. நடந்தா குத்துது. எங்க போனாலும் பின் தொடரும் இப்படிப்பட்ட பிரச்சனைகள்தான் சிம்புவின் பலமும் பலவீனமும். 'சிவனே' என்று பைக் ஓட்டிய சிம்புவை பிரச்சினையில் தள்ளி வேடிக்கை பார்க்க விட்டது விதி. வானம் படத்தின் ஷூட்டிங் மெரீனா பீச் பகுதியில் நடந்து வந்தது. சிம்பு பைக்கை ஓட்டிக் கொண்டு வேகமாக வருவது போலவும், அவரை இன்னொரு கும்பல் பின் தொடர்வது போலவும் காட்சி. ரிகர்சல் பார்க்கும் போதெல்லாம் பிரச்சினையே இல்லை.

டேக் போகும் போது திடீரென்று ஒரு பெரியவர் குறுக்கே வந்துவிட்டாராம். அவ்வளவுதான் கண்ட்ரோல் இல்லாமல் அவர் மீது வண்டியை மோதி விட்டார் சிம்பு. காத்து பலமா அடிச்சாலே கடலை பார்த்து முறைக்கிற பகுதி அது. சிம்புவை விட்டு வைப்பார்களா? விஷயத்தை முன் கூட்டியே அனுமானித்த படக்குழு, சரக்கென்று சிம்புவை அங்கிருந்த ஒரு ஆட்டோவில் ஏற்றி ஸ்பாட்டை விட்டு அவசரமாக அப்புறப்படுத்தினார்களாம். இன்னும் ஒரு வாரத்திற்கு சென்னை பக்கமே வரா தீங்க என்று ஐதராபாத்துக்கும் அனுப்பி வைத்தார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# கறுப்பு ரோஜா



பேருந்தின் ஜன்னலோரத்தில் அமர்ந்து கொண்டாள் ராணி. சூரிய வெப்பம் மேனியில் பட இதமாகவே இருந்தது. காலை நேரம் என்பதால் இதமான தென்றலும் அழகான சூழலுமாக இதமாகவே இருந்தன. பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த கொழும்பு நகரில் மனிதர்கள் பம்பரமாகவே சுழன்றார்கள். ராணி பிரபல பத்திரிகை நிறுவனத்தில் ஓவியம் மற்றும் பக்க வடிவமைப்புக்கான பணி செய்பவள். சந்தோசமான திருப்தி தரக்கூடிய வேலையாகவும் இப்பத்திரிகைத் துறை அவளுக்கு அமைந்திருந்தது.

சிறு வயது தொடக்கம் ஊடகவியலை இலக்காகவும் கனவாகவும் கொண்டு முன்னேறியவள்தான் இவள். கிராமத்தில் பிறந்திருந்தாலும் சிறிதளவேனும் கிராமத்துச் சாயல் ராணியிடம் இருக்கவில்லை. இருந்தும் நாகரிகம் எனும் பெயரில் பண்பாடுகளை இவள் ஏறி மிதிக்கவும் இல்லை. பௌர்ணமியாய் பிரகாசித்து தன் ஊரிலும் சரி வேலைத்தலத்திலும் சரி 'நல்லவள்' என்று பலராலும் மதிக்கப்படுபவள் ராணி என்கின்ற ராணி ஸ்ரீ.

இன்று காலையில் அவசரமாக வீட்டிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பு கொழும்பு நகரைப் போல இவளையும் பரபரப்பாக்கியது. அப்பா ரெங்கசாமிதான் பேசினார். "ஏம்மா ராணி... எப்பிடிம்மா இருக்கே... இன்றைக்கு நம்ம வீட்டில ஒரு விசேஷம். அதனால இன்று ஒபிஸ்ல லீவு போட்டுட்டு சீக்கிரமா வந்திடும்மா. சரியாம்மா என்றவரை இடைமறித்தாள் ராணி. "அப்பா! ஏன் இவ்வளவு அவசரமா லீவு கேட்கிற வேலையாப்பா இது...." என்று கெஞ்சினாள்.

"லீவு நீ கேட்க முடியாதுன்னா நான் கேட்கட்டுமா..." "ஐய்யோ வேண்டாம்பா... சரி நானே வந்திடுறேன்.. ஓ.கே. பாய் அப்பா.." சம்பாஷணை ஓய்ந்தது. "எதற்கு இவ்வளவு அவசரம். வேலைக்கு லீவும் போடணும்..." சிந்தனை பலமாய் ஓடி மறைந்தது. கொழும்பிலிருந்து வவுனியா போவதானால் அரைநாள் தாண்டிவிடும். அத்தோடு பரிசோதனை என்ற பெயரில் உயிரை வாங்கவென சிலர் இருக்கிறார்கள். தனி மனித சுதந்திரம் என்பது இம்மியளவு கூட இங்கில்லை. ஐந்து வருட காலமாக எத்தனை இடர்களைத் தாங்கி இவளின் பயணம் கொழும்புக்கும் வவுனியாவுக்கும் தொடர்ந்திருக்கும். என்ன செய்வது? சிலையாக மாறவேண்டுமெனில் பாறை உளியின் அடிகளைத் தாங்கித்தானே ஆகவேண்டும். சிறந்த இசை எழுப்பவேண்டுமெனில் பல அடிகளை மிருதங்கம் வாங்கியே தீர வேண்டும். ராணியும் இப்படித்தான் வேதனைகள் வரும் போது எண்ணிக் கொள்வாள்.

அப்பாவின் அழைப்பின் பின்னர், பத்திரிகை நிறுவன தலைமை ஆசிரியர் நந்தனுக்கு அறிவித்து இரண்டு நாள் லீவை போட்டுக் கொண்டு விரைவாக செயற்பட்டாள். குளித்து முடித்து வெளிர் நீல நிற சுடிதாருடன் வெளியே வந்தவளை அவளின் தோழி பாரதி, "ராணி சூப்பரா இருக்கு இந்த சுடிதார்" என சீண்டினாள். "ச்சீ போடி... நான் அழகாயில்லையா...."என வினவியபடி கலைந்துகிடந்த கூந்தலை வாரி அதே நிறத்தில் 'ஷூல்' ஒன்றைப் போட்டுக் கொண்டாள். தேவையான பொருட்களை ஒரு பயணப் பையில் திணித்துக் கொண்டு அத்தோடு பாரதிக்கும் கூறிவிட்டு பேருந்து நிலையத்திற்கு ஓட்டமும் நடையுமாய் வந்து வவுனியா பேரூந்தில் ஏறிக் கொண்டாள். மக்கள் இன்று ஏனோ அதிகளவில் இருக்கவில்லை. இருப்பினும், வேகமாய் இதயம் அடித்துக்கொண்டது. அப்பா அவசரமாய் அழைத்ததன் காரணத்தை மூளை பல கோணங்களில் சென்று விடை தேடியது. இப்படியிருக்குமோ? அப்படியிருக்குமோ என சிந்தித்தாலும் தெளிவாக விடை கிடைக்கவில்லை. இறுதியில், சரி வீட்டுக்குப் போனால் சொல்லத்தானே வேண்டும்... என மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள்.

"சோடா... சோடா... அக்கா சோடா வேணுமா..." என்றவாறு பத்து வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் ஜன்னல் கம்பிகளை தட்ட கனவுலகிலிருந்து மீண்டுவந்தாள் ராணி. சுற்றும் முற்றும் பார்த்தவள் பேருந்து வவுனியாவை அண்மித்திருப்பதை அறிந்துகொண்டாள். சிறுவனைப் பார்க்க பரிதாபமாகவும் இருந்தது. "தம்பி எனக்கு சோடா வேண்டாம்.. அந்த அப்பிள் பையில் இரண்டு தா...." என பணத்தைக் கொடுத்துவிட்டு அப்பிள் பையை பெற்றுக் கொண்டாள். பேருந்து மீண்டும் தன் பயணத்தை ஆரம்பித்தது. வேகமாக பயணிக்கத் தொடங்கியது. ராணி தன் இருக்கையிலிருந்து எழுந்து முன்னே வந்தாள். மணியை அடித்து தன் வீட்டின் முன்னால் இறங்கினாள். "வாம்மா.. வா..." என்று தாயார் மகேஸ்வரி அவளின் பயணப் பையை வாங்கிக் கொண்டு வாயிலில் இருந்தே வரவேற்றுக்கொண்டு போனாள். முற்றத்தில் பந்தடித்து பப்பியோடு விளையாடிக் கொண்டிருந்த அவளின் தம்பி அமல் "அப்பா... ராணி வந்திட்டாள்..." என்று கத்தியவாறு வீட்டினுள்ளே ஓட பப்பியும் பின்தொடர்ந்தது.

"வாம்மா... இப்போ எதுவும் வேண்டாம். முகம் கழுவி ட்ரஸ் சேன்ஞ்ச் பண்ணிட்டு வாம்மா சாப்பிடலாம்..." என்றார் ரெங்கசாமி. மகள் வாய்க்கு ருசியாக சாப்பாட்டுப் பண்டங்கள் தயாரித்திருந்த மகேஸ்வரி அவற்றை மேசையில் அடுக்கிமுடிக்க ராணியும் வர சரியாய் இருந்தது. தாயார் செய்த உணவுகளை திருப்தியாய் சாப்பிட்டு முடித்தாள். இடையிடையே தம்பிக்காரனின் சீண்டல்களோடு உணவு உண்ணும் படலம் நிறைவுற்றது. வரவேற்பறையில் நால்வரும் வந்தமர்ந்தனர். தந்தை மெதுவாக பேச்சை ஆரம்பித்தார். "ராணி நான் ஒண்ணு கேட்டால் தப்பாய் நினைக்கக் கூடாது... நீ யாரையாவது நேசிக்கிறாயா... அதாம்மா லவ் ஏதாவது..." என்று மென்று விழுங்கினார்.

"இதென்னங்க கேள்வி... ராணி நம்ம பொண்ணு. காதலிச்சா அவ நம்மகிட்ட சொல்லியிருப்பாளே..." தாயார் தன் பங்கிற்குப் பேசினார். இத்தனை நேரமாய் அமைதி காத்தவள் மௌனம் கலைந்தாள்.

"அப்பா... காதல் இதுவரை எனக்கு வரலை. அதைவிட வராது. ஏன்னா இருபத்தைந்து வருடங்களாகப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றவரை தவிக்கவிட்டு விட்டு ஓடிப்போக என்னால் முடியாது. நீங்கதான் செல்லணும் எனக்கு துணை யாரென காட்டுங்க. அவரை நான் கல்யாணம் பண்றேன்..." "ஹ..ஹ..ஹ" தந்தை வாய்விட்டு சிரித்தார். "அப்பா... இவ பொய் சொல்வாள்... ஏய் பொய்தானே..." தமக்கையைத் வெருட்டினான் அமல். "போடா புடலங்காய்..." ராணி தம்பியை திட்ட, "போடி கறுப்பி...." என்றுவிட்டு வெளியே ஓடினான் அமல். தந்தை தொடர்ந்தார்.

"ராணி உன்னை கேட்காமல் ஒரு முடிவு எடுத்திருக்கிறேன்..." என்றவாறு கடித உறையிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து நீட்டினார். "பாரும்மா" என்றார். வாங்கியவள் பிரதியை நோக்கினாள். அழகாய் சிவப்பாய் இருந்தான் அந்த இளைஞன். "ராணி... இவரைத்தான் உனக்கு சம்பந்தம் பேசி இருக்கோம். பேரு சுதன். பல்கலைக்கழக விரிவுரையாளர். இப்போ யாழ்ப்பாணத்தில் இருக்காங்க..." என அவர் தொடர்பான விபரங்களை மகளிடம் விளக்கினார் தந்தை.

"அப்பா... எல்லாம் சரி. நான் கறுப்பு. இவரோட நிறத்திற்கு தகுதியாவேனா. அமாவாசையை பௌர்ணமிக்கு ஒப்பிடலாமா..." என கூறி முடிக்க ராணியின் கண்கள் பனித்தன. தன் மகள் தாழ்வு மனப்பாங்கோடு இருக்கிறாள் என்பது தந்தைக்கு வேதனையாக இருந்தாலும் மறைத்துக்கொண்டு "என்னம்மா நீ... நீயே இப்படிப் பேசலாமா... உன் வெளித் தோற்றம் வேணுமின்னா நிறமில்லாமல் இருக்கலாம். ஆனால் மனசில நீ தங்கம். கறுப்பு என்கிறாயே நீ சொல்ற மாதிரி எல்லாருமே வெறுக்கமாட்டாங்க. சுதன் உன்னோட போட்டோ பார்த்துத்தான் முடிவு செய்தார். அவரை மாதிரித்தான் அவரோட குடும்பமும். இப்பிடியே பார்த்தால் அப்துல் கலாம் என்கிற மேதை கிடைச்சிருப்பாரா. நம்ம ஏ.ஆர். ரஹ்மான் தொடக்கம் பராக் ஒபாமா வரை கறுப்புத்தான். இப்போ கறுப்புத்தான் உலகிலேயே சிறப்பாயிருக்கு. ஒரு ஊடகத் துறைக்காரி நீயே.... ச்சே... என்னம்மா..." என நீண்ட விளக்கம் கொடுத்தார் ரெங்கசாமி.

தந்தை சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தவள் நிமிர்ந்து நோக்கினாள். "அப்பா... உங்களுக்கு உங்க பொண்ணு தங்கம். ஆனால், எல்லாரும் அப்படியே இருப்பாங்களா? இந்தக் காலத்தில அழகும் பணமும்தான் நம்ம மனித வர்க்கத்திற்கு முதல் தெரியும். ஒரு சிலர் தான் உள்ளத்தை பார்ப்பாங்க. நீங்க சொல்லுவது சரி. ஆனால்..." "என்னம்மா... ஆனால் சுதன் தன்னோட குடும்பத்தோட நாளைக்கு இங்கே உன்னைப் பார்க்க வாராங்க. அதுதான் உன்னை அவசரமாய் வரச் சொன்னேன். உன் மனசுக்கு நீ எப்போதுமே நல்லாயிருப்பேம்மா..." தந்தையின் குரல் தழுதழுத்தது. "ராணி நீ கறுப்பாயிருந்தாலும் அழகானவ... உன்னை நீயே மட்டமா பார்க்கலாமா என் செல்லம் நீதானே. கவலைப்படாதேம்மா... நாளைக்கு நிச்சயம் உன்னை சுதனுக்குப் பிடிக்கும். நீ என் மகளாச்சே..." தாய் பெருமிதமாய் கூறி முடித்தாள்.

"சரிம்மா நீ போய் ரெஸ்ட் எடு... உன் நிச்சயதார்த்த வேலைக்காக நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன்..." என்றவாறு புறப்பட்டார் தகப்பன். ராணி ஓரளவு திருப்தியுடன் எழுந்தாள். கறுப்பு இல்லாமல் வாழ யாராலும் முடியாது. தந்தை சொன்னவைகளில் நியாயம் இருப்பது தெரிந்தது. நான் என்ன வேற்றுக்கிரகவாசியா? விநோதமாய் இருக்க. எனக்கென்ன குறைச்சல். கறுப்பாயிருந்தாலும் அழகுதானே. படிச்சிருக்கிறேன். தொழில்செய்கிறேன். வேறென்ன வேண்டும். தன்னைத் தானே எடை போட்டாள் ராணி. நாளை வரும் சுதனிடம் என்ன பேசலாம். சிந்தனை ஓடியது. தன் அறைக்குள் நுழைந்தவள் மேசையில் இருந்த ரெக்கோடரில் ஏதாவது கேட்போமே என எண்ணி உயிர் கொடுத்தாள்.

"பூவைப்போலே புன்னகை காட்டு...
போகும் வழியில் இன்பம் நாட்டு...
காலம் எங்கள் தோழன் என்று கை சேர்த்து..." என இசையமைப்பாளர் இசைப்பிரியனின் இசையிலே பாடல் ஒலிக்க தன்னையே மறந்து இசையின் வசிய வலைக்குள் சங்கமித்தவாறு கட்டிலில் சாய்ந்தாள் ராணி. ஒரு கறுப்பு ரோஜா சுவரிலிருந்த படத்தில் சிரித்துக் கொண்டிருந்தது. (முற்றும்)

இரா.விசித்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்படவேண்டும்

## நல்லூர் பிரதேச செயலாளர் செந்தில்நாதன்

தெல்லிப்பளை

கலைஞனுக்கு முக்கியமானது கௌரவிப்பு ஆகும். கலைஞன் வாழும் போதே கௌரவிக்கப்படவேண்டும். இத்தகை கலாபூஷணம் பெற்ற நாதஸ்வர கலைஞன் கோதண்டபாணி பஞ்சமூர்த்தி அவர்களை கௌரவிக்கின்ற நிகழ்வினை பாராட்டுகின்றேன் என கோண்டாவில் வேத பாராயண சனசமூக நிலையத்தில் அண்மையில் கலாபூஷணம் விருது பெற்ற நாதஸ்வரக் கலைஞன் கோ.பஞ்சமூர்த்தியை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது நல்லூர் பிரதேச செயலாளர்கள் ப.செந்தில் நந்தனன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் இருந்து இம்முறை 8 கலைஞர்கள் கலாபூஷணம் விருது பெற்றிருந்தார்கள். அவர்களை அண்மையில் விழா எடுத்து கௌரவித்தோம்.

இன்றைய இந்த விழாவினை அந்தணர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், கல்வியாளர்கள் இணைந்து மண்ணின் மைந்தனுக்கு வழங்கப்பட்ட கௌரம் பாராட்டதற்குரியது. கலையை வளர்க்கும் கலைஞர்களை பிறந்து வாழும் இடமாக நல்லூர் பிரதேச செயலகம் தலைசிறந்து விளங்குகின்றது. அதற்கு வித்திட்டவர்கள் கலைஞர்கள். கலைக்கும் தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் வித்திட்டவர்கள்.

கோண்டாவில் பிறந்து வளர்ந்த பஞ்சமூர்த்தி கௌரவிக்கப்படுவது சிறப்பிற்குரியது. இவருடைய கலை ஊடாக மகுடத்தில் வைரம் பதித்தது போல் கலாபூஷணம் விருது விளங்குகின்றது. தமிழர்கள் வாழும் இடத்திலெல்லாம் சிறந்த கலைஞனாக விளங்குகின்றார்.

இவருடைய நாதஸ்வர கலை ஆர்வத்தை பல்வேறு அரங்கில் காணக்கூடியக இருந்தது. இலங்கை அரசாங்கத்தால் பல்வேறு விருதுகள் வழங்கப்படுகின்றது. இந் நாட்டில் உயர்வாக மதிக்கப்படும் விருதாக கலாபூஷணம் விருது விளங்குகின்றது. இது இறைவன் இவருக்கு அளித்த வரமாகும். இவரது புதல்வர்களும் இக்கலையில் மேலும் பிரகாசித்து வளர இறைவனை மனதார வேண்டி நிற்கின்றேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான கலைஞர்களின் நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெற்றதுடன் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர் கௌரவிப்பு

வேலணை

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் இயங்கிவரும் முன்பள்ளிகளில் ஆரம்பக் கல்வியை பெற்று 2010 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் 7 பேர் அண்மையில் நடத்தப்பட்ட நாவலர் விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அகேந்திரன் ஜந்தூரன் (162 புள்ளிகள்), விமலேந்திரன் பிரவாகரன் (153 புள்ளிகள்),

வாசுதரன் கிதுர்ஸன்(143 புள்ளிகள்) ,அருந்தவராஜா யதூஸன் (156 புள்ளிகள்),

கருணாகரன் தினுஷா (163 புள்ளிகள்), சிவானந்தன் தர்சிகா (172 புள்ளிகள்) , மகேந்திரராஜா திவ்வியா(153 புள்ளிகள்), ஆகிய மாணவர்களே விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

## பண்ணிசை

வடமராட்சி

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 01.30 மணிக்கு பண்ணிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

பிரதி வெள்ளி தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வுகள் வரிசையில் இடம்பெறும் இப் பண்ணிசைக் கச்சேரியை நல்லை திருஞானசம்பந்தர் ஆதின ஓதுவார் சி.தில்லைமணி பக்கவாத்தியங்கள் சகிதம் நிகழ்த்துவார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை இந்நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியுள்ளது.

## வெங்காய விலை அதிகரிப்பு

வேலணை

யாழ்.குடா நாட்டு சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதை தொடர்ந்து இந்திய வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டு மக்களுக்கு குறைந்த விலையில் விற்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ இந்தியா வெங்காயம் 200 ரூபாவாக கட்டப்பிராய் பகுதிகளில் விற்கப்படுகின்றது. இதே வேளை உள்ளூர் சின்ன வெங்காயம் ஒரு கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சின்ன வெங்காயத்தின் விலையை நிர்ணயம் செய்து மக்களுக்கு வழங்க வேண்டும். இதனால் பாமர மக்கள் பல நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுக் கூட்டம்

திருநெல்வேலி

தனங்களப்பு மணற்காட்டு கந்தசுவாமி ஆலயத்தின் விஷேட பொதுக் கூட்டம் எதிர் வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலயத்தின் முன்றலில் இடம் பெறவுள்ளது. இக்கூட்டத்தில் இப்பகுதி அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் து.மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

# வலி.வடக்கில் வீடுகள் அமைக்க யு.என்.எச்.சி.ஆர் திட்டம்

தெல்லிப்பளை

வலி.வடக்கு பிரதேச செயலக பிரிவில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள இளவாலை வடக்கு, வித்தகபுரம், இளவாலை வடமேற்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் இளவாலை வடமேற்கு பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டங்களை மேற்கொள்ள யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் முன்வந்துள்ளது என வலி.வடக்குப் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இளவாலை வடமேற்குப் பிரிவில் குடியமர்ந்த 150 குடும்பங்களுக்கு அரைநிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் நிதி ஒதுக்கீடுகளை செய்துள்ளது.

குடும்பம் ஒன்றிற்கு தலா ஒரு லட்சத்து பதினையாயிரம் ரூபா என்ற அடிப்படையில் நிதி வழங்கப்பட்டு வீடமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன.

பயனாளிகளை தெரிவு செய்தலும் வீடமைப்பினை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கும் கலந்துரையாடலில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெற்று பயனாளிகள் தெரிவு நிறைவு பெற்றதும் இம் மாத இறுதிக்குள் வீடமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## கணனிப் பயிற்சி நெறி

தெல்லிப்பளை

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் புதிய கணனிக் கற்கை பயிற்சி நெறி வகுப்பு யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்பு பாடசாலை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

## மாணவருக்கு இலவச கணனி பயிற்சி

ஏழாலை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வறிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறிய குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு இலவசமாக கணனிப் பயிற்சியினை வழங்குவதற்கு சமுர்த்தி அதிகார சபையின் உதவியுடன் கணனிப் பயிற்சி வலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இப்பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் சுயவிபரக் கோவையினை வழங்குமாறு சமுர்த்தி முகாமையாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

மேற்படி பயிற்சி நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கல்வியங்காடு, கோண்டாவில், கொக்குவில் ,திருநெல்வேலி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சான்றிதழ் வழங்கலும் பொங்கல் விழாவும்

சிறுவர் மகிழ்வக கற்கை நெறிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நாளை இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வு மேற்படி மகிழ்வகத்தின் கோப்பாய் இராஜவீதியில் இடம்பெறவிருப்பதால் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் தமது சான்றிதழ் பெறுதலை இன்றைய தினம் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சைவசமய அருள்நெறி மன்றத்தால் பாராட்டப்படுவோர்

வேலணை

சைவ சமய அருள்நெறி மன்றத்தின் முதலாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் பல்துறை கலந்த கலைஞர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

பாராட்டு பெற்றவர்கள் விபரத்தினை மேற்படி மன்றத்தலைவர் சோ.கி.பிரணதார்த்திவரக்குருக்கள் அறிவித்துள்ளார்.

பலதுறை விற்பன்னர் பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரசர்மா சிவானந்தசர்மா(கோப்பாய் கிழக்கு), சிறந்த சிவாச்சாரியார் விருது சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் விருத்தகிரீஸ்வரக்குருக்கள், சிறந்த அலங்கரிப்பாளர் விருது சிவத்திரு சபாவதிஜயா சோமசுந்தரம், இலக்கிய கர்தா விருது கே.வி.குணசேகரம், சமூகசேவை விருது நடராஜா சிவசுப்பிரமணியம், வில்லிசை கலைக்கான விருது கதிரவேலு சத்தியதாசன், சிற்பாச்சாரியாருக்கான விருது செல்லையா விசுவலிங்கம் ஆகியோரே பாராட்டு பெறுபவர்களாகும்.

## பொதுச்சந்தை அமைப்பு

ஏழாலை

காரைநகரில் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் பொதுச் சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மீள் எழுச்சித்திட்டத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் காரைநகர் வியாவில் கிராமத்தில் மேற்படி சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் இச் சந்தை 8 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 | 06 | 07 |
| 08 | | 09 | 10 | 11 | 12 | | 13 |
| 14 | 15 | | | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | | 23 | 24 | | |
| | 25 | 26 | 27 | | | 28 | 29 |
| 30 | 31 | 32 | | 33 | 34 | 35 | 36 |
| 37 | | 38 | 39 | 40 | 41 | | 42 |
| 43 | 44 | | 45 | 46 | | 47 | 48 |

**இடமிருந்து வலம்**

1. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வாரப்பத்திரிகைகளில் ஒன்று
5. பறவைகளின் இளையவை
9. ஓய்வூதிய எல்லை(குழம்பியுள்ளது)
14. திறவு கோல்
16. இணங்கு
20. ஒரு பூ / பாரிவள்ளல் ஞாபகம் (திரும்பியுள்ளது)
23. சுவைகளில் ஒன்று / மரம் (திரும்பியுள்ளது)
25. பெண்
28. கோயிலில் உள்ளது.
30. கடவுள்கொடுப்பது (குழம்பியுள்ளது)
33. கனிய வளங்களில் ஒன்று
38. திருநாவுக்கரசர் (திரும்பியுள்ளது)
43. சிறிய வகை மரம்
45. இது நமக்கு பகை (திரும்பி)
47. ஔவையார் பிள்ளையாருக்கு படைத்தது.

**மேலிருந்து கீழ்**

1. சைவக்கோயில்களில் ஓர் முக்கிய அறை
3. சொல் / கூற
4. இடம் பெயர் (கீழிருந்து மேல்)
5. செல்லக் குழந்தைகளின் குழப்படி
7. ஒரு நட்சத்திரம்
11. ஒரு வகை கீரை
15. இறைவனுக்கு அர்ச்சிக்கும் இலை.
22. முற்றும் துறந்தவர்
28. சுத்தமான
29. நுளம்பு இனம் பெருகும் ஒர வளர்ச்சி படிமுறை.
30. சினிமாப்பாடங்களில் வில்லன்
33. வளையல்
34. சிங்கம் (கீழிருந்து மேல்)
39. நட்பின் எதிர்ச்சொல்

**குறுக்கெழுத்து போட்டி 08க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வீ | ர | கே | ச | ரி | | ஆ | வி |
| க் | | து | ல | க் | கு | | லை |
| க | வி | | ங | க | ம் | அ | |
| ம் | யா | | கை | ல | ப | | நீ |
| | ச | ரி | | நி | ம் | ம | தி |
| வ | ர் | ச | ன் | | | ரு | |
| ய | | ப | த | வி | | தா | தி |
| து | ரு | ம் | பு | | அ | ணி | ல் |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. வி.தனபாலசிங்கம்
   நுணாவில் மேற்கு,
   சாவகச்சேரி.
2. பிரம்பபூரீ.க.சுதர்சனக்குரு
   சிவன்கோவிலடி,
   ஆவரங்கால், புத்தூர்
3. கே.அரசேஸ்வரன்
   கலைமகள் வீதி,
   நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 10 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




என் வீட்டில் சமையல் செய்வது துணி துவைப்பது வீடுகூட்டுவது எல்லாமே நான்தான் செய்வேன்! -கமலா
இதை ஏப்பிரல் -1ஆம் திகதி சொல் யாராவது நம்புவார்கள்!




"சேர் எனக்கு அவசர தேவை... மூன்று மாதத்துக்கு முன்னர் நான் கடனாகக் கொடுத்த ஐயாயிரம் ரூபாயில் ஒரு ஆயிரம் ரூபாயாவது தருவீர்களா?"
- கடன் கொடுத்த ஒருவரின் தாழ்மையான வேண்டுகோள்!




"உங்க பையன் கணக்கிலே ரொம்ப வீக் சார்!"
"என்ன சொல்றீங்க?" "23ஐயும் 37ஐயும் கூட்டினா என்ன வரும்னு கேட்டா விடைசொல்ல ஒரு 'வீக்' எடுத்துக்கிறான்!"




"சின்னதா ஒரு ஆபரேசன் பண்ண 25 ஐயாயிரம் ரூபா கேட்கிறீங்களே டாக்டர்?"
"அதை விட சின்னதா என்னால் ஆபரேசன் செய்ய முடியாதுப்பா!"




தீ என்று ஒரு படம் எடுத்தீங்களே என்ன ஆச்சு?
கையை சுட்டுடிச்சி!




ஏன் ஆபீஸிலிருந்த டீ.வி.யை மனேஜர் எடுக்கச் சொன்னார்?
தூக்கம் வராதவர்கள் டீ.வி.சீரியல் பார்த்ததும் தூங்கி விடுகிறார்களாம்!




"எனக்கு கையும் ஓடலே காலும் ஓடலே...!"
"என்ன விஷயம்?"
"என்னை ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்துக்கு தெரிவு செய்திருக்கிறார்கள்!"




"மனைவியையும் நாயையும் காணவில்லையென்று விளம்பரம் போட்டிருக்கிறாங்க!"
"அப்படியா?"
"நாயைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபா சன்மானமாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

'நல்லபேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே இந்த நாடு எனும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே....' என்ற கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் தத்துவார்த்தமான வரிகள் இவை. இன்றைய இளைஞர்கள் நாளைய சமூகத்தை வழி நடத்தும் தலைவர்களாக மிளிர வேண்டுமானால் பட்டுக்கோட்டையின் கருத்தாழம்



பொதிந்த நற்சிந்தனைகளை மனங்களில் விதைக்கின்ற பாடல் வரிகளே மனதில் பளிச்சிடுகின்றன. சமுதாயத்தின் மேன்மைக்காக சமூகத்தில் இடம்பெறும் அநீதிகளைத் தடுத்து நிறுத்தவதற்காக தனது கவி வரிகளால் சமூகத்தை சீர் திருத்திய பெருமை பட்டுக்கோட்டையே சாரும் என்றால் மிகையாகாது. இவ்விடத்தில் இத்தகைய கருத்தை ஏன் உங்கள் முன் நிறுத்த வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அதற்கும் நியாயமிருக்கிறது.

கடந்த வாரம் தேநீர்க் கடை ஒன்றிற்குச் சென்றிருந்தேன். சுமார் 5 இளைஞர்கள் உணவுச் சாலையின் கதிரைகளை ஆக்கிரமித்தபடி விதண்டாவாதம் புரிந்து கொண்டிருந்தனர். அவர்கள் கைகளில் சிகரெட்டுக்கள் தவழ்ந்து கொண்டிருந்தன. வாய்களிலிருந்து கிளம்பிய புகைகள் சுழன்று சுழன்று உணவுச் சாலையினுள்ளே கவிந்திருந்தது. உணவருந்த வரும் ஏனைய வாடிக்கையாளர்களின் நிலை பற்றி அவர்கள் கிஞ்சித்தும் அக்கறை எடுத்ததாகத் தெரியவில்லை. உணவக உரிமையாளர் கூட எந்தவித நடவடிக்கைகளையும் அவர்கள் மீது எடுக்கவில்லை. காரணம் கேட்டபோது அவர்கள் தமது நிரந்தர வாடிக்கையாளர்களாம். இத்தனைக்கும் அந்த இளைஞர்கள் பாடசாலை செல்லுகின்ற பதின்ம வயதையுடையவர்கள் என்பதே சோகம் தரும் விடயமாகும். இவர்களைத் திருத்த வேண்டியவர்கள் கூட தங்களது சுயநல நோக்கத்திற்காக பிறர் நலன்களை விடவும் தனிப்பட்ட வசதி வாய்ப்புக்களை மட்டும் முன்னிலைப்படுத்தியவர்களாகவே காரியமாற்றுகின்றனர்.

இத்தகைய பிரக்கிருதிகளினால்தான் எமது இனத்திற்கு இத்தனை அழிவுகள் போலும். தேவையில்லாத விடயங்களுக்கெல்லாம் மூக்கை நுழைப்பவர்கள் அவசியம் செய்யவேண்டிய சீர்திருத்த வேண்டிய விடயங்களையெல்லாம் தவற விட்டு விடுகின்றனர். மற்றவர்கள் குறைகளையெல்லாம் பெரிது படுத்திப் பேசும் இவர்களால் அக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு முயற்சிப்பதில்லை என்பதே யதார்த்தம்.

இது ஒரு புறம் இருக்க பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் தமது கற்றல் என்ற கடமையை மறந்து சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் சம்பவங்கள் அதிகரித்துவருவது சமூக ஆர்வலர்களைக் கவலையில் ஆழ்த்துகிறது.

தற்போது எமது பிரதேசத்தில் கஞ்சா, அபின் போன்ற போதைவஸ்துகள் தாராளமாகப் புழக்கத்தில் இருக்கின்றன. இவற்றுக்கு ஏராளமானோர் அடிமைகளாகி உள்ளனர். இதற்கு பாடசாலை மாணவர்களும் விதிவிலக்கல்ல. சிற்சில கடைகளில் பல நடிகைகளின் குறியீட்டுப் பெயர்களில் விதம் விதமான வகைகளில் கைச்சிதமாக விற்பனை செய்யப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

ஆனால், இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு சில சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்தாலும் பெரும்பாலான சம்பவங்கள் வெளித் தெரியாத சங்கதிகளாகவே இருக்கின்றன.

யாழ்.குடா நாட்டுப் பாடசாலைகளில் கல்வி பயிலும் அநேகமான மாணவர்கள் மது, புகைத்தலுக்கு அடிமையானவர்களாகவே இருக்கின்றனர். பாடசாலை நேரங்களில்க் கூட சில மாணவர்கள் உணவுச் சாலைகளுக்குச் சென்று இரகசியமான முறையில் புகைத்தல் செயற்பாடுகளை நிகழ்த்துகின்றனர். இதற்கு சில உணவக உரிமையாளர்களும் உடந்தையாக இருக்கின்றனர். அவர்கள் வருமானத்தை மட்டுமே குறியாகக் கொண்டு செயற்பட்டு வருவதால் இத்தகைய சம்பவங்களை தடுத்து நிறுத்த முன்வருவதில்லை. அத்துடன் இவர்களைத் திருத்துவதற்கு பெற்றோரோ அல்லது ஆசிரியர்களோ இது வரை அக்கறை காட்டவில்லை.

அண்மையில் யாழ்ப்பாண அரச அதிபர் கூட இளைஞர்களின் சமூக விரோத செயற்பாடுகள் குறித்து தனது அவதானத்தைச் செலுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது.

குடா நாட்டில் தற்போது கலாசார சீரழிவுகள் சமூக விரோதச் செயற்பாடுகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகவும் இரவு வேளைகளில் வீதியால் செல்லுவதற்கே அஞ்சும் அளவிற்கு இளைஞர்களின் அட்டகாசம் எல்லை மீறியுள்ளதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரின் இரவு நேர ரோந்துகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் முக்கியப்படுத்தி பிரஸ்தாபித்திருந்தமை பற்றி அறிந்திருப்பீர்கள். ஆனால் அரச அதிபரின் கருத்து பேச்சோடு மட்டும் நின்று விடாமல் செயலுருப் பெற வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

யாழ்.குடா நாட்டைப் பொறுத்த வரை மீண்டும் இருள் சூழ்ந்த வாழ்வுக்குள் மக்கள் பிரவேசித்து வருகின்றனர் என்பதை யாழ்ப்பாணத்தில் நடந்தேறும் அண்மைக்காலச் சம்பவங்கள் கட்டியம் கூறுகின்றன.

கடத்தல்கள், படுகொலைகள், களவுகள் முதலிய பல சமூக விரோதச் செயல்கள் தலைதூக்கியுள்ளன. இதனால் மக்கள் தமது வாழ்வை அச்சத்துடனே கழித்து வருகின்றனர். இச் செயற்பாடுகளில் யார் ஈடுபடுகின்றனர்? இவர்களின் பின்னணி என்பது பற்றியெல்லாம் நாம் விவாதிக்க வரவில்லை. இவற்றை தடுத்து நிறுத்த சட்டம் ஒழுங்கை சீர்படுத்த வேண்டும் என்பதே எமது தாழ்மையான கோரிக்கை.

அண்மையில் கூட ஏ-9 நெடுஞ்சாலையில் வாகனம் ஒன்றில் வந்திறங்கிய சில இளைஞர்கள் வீதியோரத்தில் நின்று அரைகுறை ஆடைகளுடன் மது போதையில் ரகளையில் ஈடுபட்டதாகவும் இதனால் அவ்வீதியூடாகப் பயணித்தவர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளானதாகவும் பத்திரிகைச் செய்தி வாயிலாக அறியக்கிடக்கின்றது.

ஏ-9 வீதி என்பது போக்குவரத்து நெருக்கடி மிகுந்த வீதி, யாழ்ப்பாணத்தையும் தென்பகுதியையும் இணைக்கின்ற நீண்ட நெடிய வீதி. அவ்வீதியூடாக பெரும் எண்ணிக்கையான மக்கள் போக்குவரத்துச் செய்யும் இடம் ஒன்றில் இப்படியான அநாகரிக முறையில் இளைஞர்கள் நடந்திருப்பது எம் இனத்தை வெட்கித் தலைகுனிய வைத்துள்ள செயலாகும்.

இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலும் மது, போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களாகவே காணப்படுகின்றனர்.

யாழ்.குடாநாடு தற்போது கலாசாரச் சீரழிவின் உச்சத்தில் உள்ளது.



**யாழ்.குடா நாட்டுப் பாடசாலைகளில் கல்வி பயிலும் அநேகமான மாணவர்கள் மது புகைத்தலுக்கு அடிமையானவர்களாகவே இருக்கின்றனர். பாடசாலை நேரங்களில் கூட சில மாணவர்கள் உணவுச் சாலைகளுக்குச் சென்று இரகசியமான முறையில் புகைத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.**


தமிழினத்தின் பெருமை பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருப்பதால் எந்தவிதப் பயனும் இல்லை. சிறுமைத்தனமான செயல்கள் குறித்தும் சிந்திக்கத் தவறியதால்தான் இத்தகைய இழிநிலைக்கு இன்று எம்மினம் தள்ளப்பட்டுள்ளது.

எமது சமூகம் இன்று குட்டிச் சுவராகப் போனதற்கு கல்விமான்களுக்கும் பங்கு உண்டு என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். கற்றவர்கள் கயவர்களாக இருக்கும் போது கண்ணியத்தை எதிர்பார்க்க முடியாது என்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அர்த்தம் மிகுந்த வாசகத்தை ஒரு தடவை இவ்விடத்தில் சிந்திப்பது பொருத்தமானதே.

ஆக, அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கும் இன்றைய இளஞ்சந்ததியை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு எல்லோரது கரங்களிலும் உண்டென்பதை யாராலும் தட்டிக்கழிக்க முடியாது. இதற்கென சட்டங்களில் இறுக்கமான நடைமுறைகளை அமுல்படுத்தி, தவறு செய்பவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தயவு தாட்சண்ணியமின்றி தண்டனை வழங்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் தாழ்மையான வேண்டுதல் ஆகும்.

**உதிஷ்டிரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டக்களப்பில் வெள்ளத்தால் நிறைந்துள்ள வீதியொன்றினூடாக வாகனமொன்று செல்வதை படத்தில் காணலாம்.

# வெள்ள அனர்த்தத்தினால் புதிய பாலங்கள் திறப்பு

காரைதீவு,

அம்பாறை மாவட்டத்தில் புதிதாக பாரியளவில் நிர்மாணிக்கப்பட்டு வந்த அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதான வீதியிலுள்ள சின்ன,பெரிய முகத்துவார பாலங்கள் வெள்ள அனர்த்த காலம் கருதி திறப்பு விழாவிற்கு முன்பதாகவே பொதுமக்களின் போக்கு வரத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளன.

மார்கா நிறுவனம் பல கோடி ரூபா செலவில் பல்லாண்டு காலங்களுக்குப் பின்பு நிர்மாணித்து வந்த இவ்விரு பாலங்களும் முடிவுறும் தறுவாயில் அடை மழை பொழிய ஆரம்பித்தது.

அத்தருணம் பால நிருமாணிப்பிற்காகப் போடப்பட்ட உபபாதைகள் வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட பொதுமக்கள் பலத்த அசௌகரியத்திற்கு மத்தியில் சாகாம மாற்றுப் பாதையைப் பாவிக்க வேண்டியிருந்தது.

இந்நிலையில் மார்க்கா நிறுவனத்தினர் இன்றைய அவசர அவசிய அனர்த்த நிலையைக் கருத்திற் கொண்டு பாலங்களை போக்குவரத்திற்காகத் திறந்துள்ளனர்.

இதனால் அக்கரைப்பற்று, பொத்துவில் பயணம் தங்குதடையின்றி நடைபெற்று வருகின்றது.

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கோருகிறது ஜம்மியத்துல் உலமா சபை

(பாலமுனை மேலதிக நிருபர்)

தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை மற்றும் பலத்த காற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண மக்களுக்கு இன, மத வேறுபாடுகளுக்கப்பால் சகல முஸ்லிம் பொதுநல அமைப்புகளும் தனவந்தர்களும் சமைத்த உணவுகள், உலருணவுகள் மற்றும் அத்தியாவசிய அவசர உதவிகளையும் வழங்குமாறு அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த பல நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையை அறிந்து அம் மக்களுக்கு உதவும் வகையில் முஸ்லிம் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் நலன்புரி நிலையங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது இயல்பு வாழ்க்கையும் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. நாளாந்த உணவுகள் வழங்கக் கூடிய தனவந்தர்கள் சமைத்த உணவுகளை அல்லது உலருணவுகளை வழங்க முடியும்.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் இம் மக்களது வாழ்வாதார தொழில் நடவடிக்கைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன.

வயல் நிலங்கள் யாவும் நீரில் மூழ்கியுள்ளன. மீனவர்களது தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளை தொடர முடியாத நிலையிலுள்ள இம் மக்களுக்கு முஸ்லிம் பொது நல அமைப்புகளும் தனவந்தர்களும் தங்களால் முடியுமான உடனடி உதவிகளை வழங்குமாறும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று உதவக் கூடியவர்கள் அவ்வாறு சென்று உதவிகளை நல்குமாறும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

# ஹெலிகொப்டர்களை தந்துதவுமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

காங்கேயனோடை,

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கான நிவாரணப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கு ஹெலிகொப்டர்களை பயன்படுத்த வேண்டியுள்ளது. அதற்காக ஹெலிகொப்டர்களை தந்துதவுமாறு பொலிஸ்மா அதிபரிடம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ள அனர்த்த நிலைமை தொடர்பாக பார்வையிடுவதற்காக பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய மட்டக்களப்புக்கு செவ்வாய்க்கிழமை மாலை விஜயம் செய்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சரின் காரியாலயத்தில் வைத்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை பொலிஸ் மா அதிபர் சந்தித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ள அனர்த்தம் தொடர்பாகவும் உடனடியாக தேவைப்படும் உதவிகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார். இதன்போதே மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கண்ட கோரிக்கையை பொலிஸ் மா அதிபரிடத்தில் விடுத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

பிரதேசங்களுக்கான போக்குவரத்தினை படகின் மூலம் நடத்த வேண்டியுள்ளது. இதற்காக இயந்திரப் படகுகள்தேவைப்படுகின்றன. அத்தியாவசிய உணவுப் பொருட்களும் தேவைப்பாடாக உள்ளது. இவைகளையும் தந்துவுமாறு அரசாங்க அதிபர் பொலிஸ் மா அதிபரிடத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து மட்டக்களப்பு மாவ்ட்டத்தில் வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களையும் பொலிஸ் மா அதிபர் சென்று பார்வையிட்டார். கிழக்கு மாகாணத்திற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எடிசன் குணதிலக மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் பொலிஸ் மா அதிபருடன் விஜயம் செய்திருந்தனர்.

# படுவான்கரை முகாம்களில் தங்கியிருக்கும் 50க்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளை வெளியேற்றவும்

## - அரியநேத்திரன் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையில் முகாம்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களை பாதுகாப்பாக வெளியேற்ற விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பின் படுவான்கரைப் பகுதிகளில் வெள்ளத்தினால் போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதனால் முகாம்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றி வைத்திய சிகிச்சை பெற வழியேற்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வெள்ள நிலைமை தொடர்பான விசேட கலந்துரையாடலின்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தற்போது படுவான்கரைப் பகுதியில் எந்தவித வைத்திய வசதியும் இல்லாத காரணத்தினால் அப்பகுதிகளில் உள்ள கர்ப்பிணிப் பெண்களை மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு கொண்டுவந்து சிகிச்சையளிக்க வேண்டும்.

அத்துடன் படுவான்கரையில் சில பகுதிகளில் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளன. அப்பகுதியில் உள்ள மக்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதற்கு பதிலளித்த மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்,

மீட்புப் பணிகளில் ஈடுபட முப்படையினரும் தயார் நிலையில் உள்ளதாகவும் தொடர்பில் விபரங்கள் தெரிவிக்கப்பட்டால் உடனடி நடவடிக்கையெடுக்கப்படும் என தெரிவித்ததுடன் அனேகமான பகுதிகளில் இருந்து மக்கள் மீட்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். அத்துடன் சிகிச்சை தேவைப்படும் கர்ப்பிணிப் பெண்களை மட்டக்களப்பு கொண்டுவர நடவடிக்கையெடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு வெள்ள அகதிகளுக்கு உதவ வேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் புஸ்பராசா வேண்டுகோள்

(காரைதீவு)

கிழக்கில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இன்றைய அவசர கால நிலைமையில் பொது நிறுவனங்களும் தனவந்தர்களும் உதவ வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சோமசுந்தரம் புஸ்பராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பேர் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு தனியே அரசாங்கமும் மாகாணசபையும் பூரணமான உதவியை, சேவையை செய்துவிட முடியாது.

நிவாரணங்கள் கொண்டுசென்று பகிர்ந்தளிக்கக்கூடிய வசதி வாய்ப்புகள், மார்க்கங்கள் சில பிரதேசங்களில் இல்லை. எனவே அவ்வப்பிரதேச பொது நல அமைப்புகளும் தனவந்தர்களும் முன்வந்துதவ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



## நடிக கலாமணி செல்வரத்தினம்

## இவரைப் பற்றி 25

**இசைநாடகம் பாடுதலால் நடித்தலும் நடித்தலால் பாடுதலும் என்றவாறு வெளிப்பட்டு நிற்பதாகும். ஈழத்தில் இசைநாடகம் முழு இரவு நாடகமாகவே முன்னைய காலங்களில் அரங்கேற்றப்பட்டது. முழு இரவு இசை நாடகத்துக்கு ஒரு காலத்தில் முதுகெலும்பாக இருந்தவர் கலாமணி செல்வம் .பெண் வேடம் ஏற்று நடித்த நடிகர்களில் மிகவும் பிரபல்யமானவர் தன் வாழ்நாளில் இசை நாடகத்துறைக்கும் அரியாலை மண்ணுக்கும் பெருமை சேர்த்த இவரைப் பற்றி சில வரிகள்......**

* பல இசைநாடகக் கலைஞர்களைத் தந்த அரியாலை மண்ணில் 1947 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி வடிவேலு-பாக்கியம் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக செல்வம் என்னும் செல்வரத்தினம் பிறந்தார்.

* இவர் தனது ஆரம்பக் கல்வியை நல்லூர் ஆனந்த வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும் கல்வி கற்றார்.



* 1959ஆம் ஆண்டு ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் 'கன்னிக் கோட்டை' என்ற நாடகத்தில் குழந்தை நட்சத்திரமாக 'சித்திரம் பேசுதடி' என்ற பாடலை சொந்தக் குரலில் பாடி நடித்து பாராட்டுக்களைப் பெற்றார்.

* அல்வாய் சின்னப்பு கணேசன் 'உழவு நாடு' என்ற நாடகத்தில் முதன் முதலாக செல்வம் பெண் பாத்திரமேற்று நடித்தார்.

* ஸ்ரீ கலைமகள் நாடக சபாவில் நடிகமணி வி.வி. வைரமுத்துவுடனும், இரத்தினத்துடனும் ஜோடியாக பல நாடகங்களில் நடித்துள்ளார்.

* இனிய குரல் வளம் மிக்க செல்வரத்தினத்தின் குரலின் இனிமையைப் பாராட்டி 1980 ஆம் ஆண்டு 'நடிககலாமணி' என்ற பட்டத்தை நெல்லியடி கிருஷ்ணாழ்வார் அரங்கில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

* நடிகமணி வைரமுத்துவுடன் ஜோடி சேர்ந்து 'சாவித்திரி', 'அரிச்சந்திரா' போன்ற புகழ்மிக்க இசை நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றார்.

* அரிச்சந்திரா மயானகாண்டம் என்ற நாடகம் ஒன்றில் வைரமுத்துவும் செல்வமுமே ரசிகர்கள் மனக் கண்ணில் அரிச்சந்திரனாகவும், சந்திரமதியாகவும் வந்து விடுவார்கள்.

* கலாமணி செல்வம் நாடகப் பாத்திரங்களுக்கேற்ப தன்னைத்தானே ஒப்பனை செய்து கொள்வதில் ஆர்வமுடையவர்.

* தனக்குத் தானே ஒப்பனை அலங்காரப் பொருட்களை ஒரு பெட்டியினுள் வைத்து எப்பொழுதும் எடுத்துச் செல்வார்.

* இனிமையான குரல்வளம் கொண்ட செல்வம் அரியாலை சரஸ்வதி ஆலயத்தில் நீண்டகாலப் பாடகராகவும் விளங்கினார்.



* தனக்கென தனியாக ஒரு நாடகக்குழுவை வைத்திராத கலாமணி செல்வரத்தினம் பல நாடகக் குழுக்களுடன் இணைந்து பல தரப்பட்ட நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றார்.

* ஒரு காலத்தில் 'சந்திரமதி என்றால் செல்வம் தான்' என்ற எண்ணத்தை நாடக ரசிகர்கள் மனதில் பதிந்து விட்டிருந்தார்.

* இசைநாடகக் கலைஞர் நல்ல குரல் வளமும், இசைஞானமும் உடையவனராக இருக்கவேண்டும். நடிககலாமணி இவ்விரண்டையும் இயற்கையாகவே பெற்றிருந்தார்.

* பெண் குரலில் பாடும் இவரின் தனித் திறமைக்கு தனிக் கவர்ச்சி உண்டு. எந்தப் பாடலையும் தனக்குரிய பாணியில் பாடி ரசிகர்களைக் கவர்ந்து வருவார்.

* காதல், சோகம் ,வெட்கம் என பெண்ணின் முக பாவங்களையும், நடையில் வெளிப்படும் நெளிவு அசைவுகளையும், தாளத்திற்கு ஏற்ப தத்ரூபமாக வெளிப்படுத்துவார்.

* காதல் காட்சிகளில் இசைக்கேற்ப நளின நடையும், மகனை இழந்த சோகக் காட்சியில் புலம்பலும், கணவனைக் கண்டதும் வெட்கமும் என அரிச்சந்திரா நாடகத்தில் பல கோணங்களில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்துவார்.

* சத்தியவானும் சாவித்திரியும் அறிமுகமாகும் காட்சியில் 'ஏனோ எனை எழுப்பலானாய் மடமனே......... ' என்ற பாடலில் மென்மையாக ஆலாபனை செய்து நடிப்பாற்றலை வெளிப்படுத்துவார்.

* சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் எமனோடு வாதாடும் காட்சியில் மிகத் திறமையாக நடித்து தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்துவார்.

* அண்ணாவிமார்கள் ஒரு நடிகனிடம் எதிர்பார்க்கும் உச்சக்கட்ட நடிப்பைவிட மிக அதிகமாகவே நடித்துக் காட்டி தனது திறமையை வெளிப்படுத்துவார்.

* கலாமணி செல்வம் சந்திரமதியாக பாத்திரமேற்று 26 கதாநாயகர்களுடன் பல்வேறு மேடைகளில் நடித்துப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

* 'உண்மையிலே பெண்தானோ'? என அவாவைத் தூண்டி ரசிகர்கள் மேடையின் பின்புறம் ஒப்பனை அறைவரை வந்து பார்க்கும் அளவுக்கு நடிப்பால் அனைவரையும் ஈர்த்துவிடுவார்.

* இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'நிர்மலா' என்ற திரைப்படத்தில் வரும் 'அரிச்சந்திரா மயான காண்டத்தில்' வைரமுத்துவுடன் இணைந்து 25 நிமிடக் காட்சியில் நடித்துள்ளார்.

* யாழ்.பல்கலைக்கழகம், இந்துப்பேரவை, அகில இலங்கை கம்பன் கழகம் போன்றவற்றால் நடிககலாமணி, கலைஞானச்சுடர், நாதமணி, செல்வமங்கை, கலைமாமணி, கலைஞானகேசரி என்ற பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

* 47 வருடங்கள் வாழ்நாள் கலைஞனான இருந்த செல்வம் ஈழத்து இசைநாடக வரலாற்றில் தனக்கென ஓர் தனித்துவமான இடத்தை ஏற்படுத்திவிட்டு 59 ஆவது வயதில் அமரரானார்.

தொகுப்பு - அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அபிவிருத்தி நோக்கி வடக்கு

தேர்தல் கொள்கை பிரகடனம், 'மஹிந்த சிந்தனை', 'வடக்கின் வசந்தம்', வரவு செலவு திட்ட ஏற்பாட்டுக்கு இணங்க அபிவிருத்தி விரைவில் இடம்பெறும் மக்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கினறர்.

முன்நோக்கிய உபாயம் அபிவிருத்திக்கு உகந்தது.

30 வருட கால யுத்தம் முடிவிற்கு வந்து அபிவிருத்தி ஆண்டாக இவ்வருடத்தினை (2011) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

'கிழக்கின் உதயம்' என்றும்

'வடக்கில் வசந்தம்' என்றும்

அழகான பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

ஆனால், வரவு - செலவு திட்டத்ததில் பாதுகாப்பு அபிவிருத்திக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தியாளர்களும் கல்விமான்களும் சட்டத்தரணிகளும் பொது நிர்வாகிகளும் வடக்கு அபிவிருத்தி குறித்தும் உட்கட்டுமான அபிவிருத்தி, வீதி மற்றும் போக்குவரத்து தொடர்பான பின்தங்கிய நிலைகுறித்து கவலையடைந்துள்ளனர்.

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு அபிவிருத்தி குறித்து செய்வதறியாது திணறுகின்றனர்.

ஏ-9 போக்குவரத்துப் பாதை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி (விதியாகும்) ஆகும்.

போக்குவரத்து என்பது அரச நிர்வாக அதிகாரிகள், வியாபாரிகள், கம்பனியாளர்கள், உற்பத்தியாளர்கள், கைத்தொழிலாளர்கள், பயணிகள் என எண்ணுக் கணக்கற்றோர் தினமும் பயணிக்கும் பெரு வீதி.

வவுனியாவிலிருந்து யாழ். வரை சொல்ல முடியாத அளவிற்கு வீதியின் வடிவம் மாறிவிட்டது. ஒவ்வொருவரும் தமது பிரயாணத்தை மேற்கொள்ளும் போது தமது உயர்ந்த எண்ணங்களை சிந்தனைகளை மனதில் சுமந்து சந்தோசத்துடன் பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

ஆனால் ஏ-9 வீதியில் பயணம் தொடங்கியவுடன் சகல எண்ணங்கள் சிந்தனைகளும் திசை மாறி யாழ்ப்பாணத்தில் வீதி தொடர்பாக கதைக்கத் தொடங்கியவர்கள் ஒவ்வொரு வார்த்தைகளை கொட்டித் தீர்த்து தப்பி பிழைத்தோம் என கூறியே பயணங்களை சென்றடைகின்றனர்.

இது வீதி அபிவிருத்தி பற்றியது. நான் இங்கு கூறுவது இரும்பிலான போக்குவரத்து பற்றியதாகும். இலங்கையின் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப் பெருமாள், 'மஹிந்த சிந்தனை' யின் கீழ் வடக்கின் வசந்தம் மலர 2010 இறுதிக்குள் கொழும்பு-காங்கேசன் துறை ரயில் போக்குவரத்து ஆரம்பித்து ஜனாதிபதியின் சிந்தனைக்கு மகுடம் சூட்டப்படுமென தெரிவித்து ஆண்டுகள் பல முடிந்து விட்டன.

**இவ் வருடத்திலாவது யாழ்.தேவி யாழப்பாணம் வருமா? ஏ-9 வீதி மக்களின் சௌகரியமான பயணத்துக்கு ஏற்றதாக மாற்றப்படுமா?**

இன்று வடக்கிற்கான தரை ரயில் போக்குவரத்து இரண்டும் வலுவிழந்துள்ளன. வடக்கு அபிவிருத்தி என்பதற்கு பதிலாக பின்னடைவே விரைவில் ஏற்படவுள்ளது.

எனவே 2011 அபிவிருத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தியது போன்று ஏ-9 வீதியும் ரயில் போக்குவரத்தும் கிடைக்கும் என நம்புகின்றோம்.

1956 ஆம் ஆண்டில் இந்நாட்டில் பல அரசியல் புரட்சிகள் இடம்பெற்றன. அந்த ஆண்டில் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையார் அமரர் டி.ஏ.ராஜபக்ஷவின் துணையுடன் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க உருவாக்கிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பல முற்போக்கு சக்திகளுடன் கூட்டிணைந்து அரசு உருவாகியது.

1956 ஏப்ரல் 23 ஆம் திகதி இந்நாட்டின் புகையிரத போக்குவரத்து துறையில் மாற்றம் கண்டது.

அன்றுதான் கொழும்பு காங்கேசன்துறைக்கான ரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டு வடக்கு - தெற்கு சமூகப் புரட்சிக்கும் ஒரு பாலமாக மட்டுமன்றி யாழ்ப்பாண மக்களின் இலகு போக்குவரத்தாக யாழ்.தேவி புகையிரதம் பெயர் பெற்றது.

1815 ஒக்டோபர் 02 ஆம் திகதி இலங்கையில் புகையிரத போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது புகையிரத சேவை கொழும்பிற்கும் அம்பேபுஸ்லாவைக்கும் இடையில் வெள்ளோட்டத்துடன் ஆரம்பமானது. எது எவ்வாறு இருப்பினும் யாழ் தேவியின் ஆரம்பம் தான் புகையிரத போக்குவரத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெரும்பான்மையின மக்கள் கூறுவருகின்றனர்.

இந் நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே கலாசார சமூகப் பிணைப்புக்கள் இறுக வளர்த்தெடுப்பதில் கொழும்புக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். தேவியின் பங்கு அளப்பரியது.

யாழ்.தேவி என்பது வெறுமனே ஒரு இரும்பு சட்டம் அல்ல. வடபகுதி மக்களின் வாழ்வில் ஒன்றாகவே இருந்தது.

இதனைவிட ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியாளர்களினால் 1981 இல் யாழ்.மாவட்ட சபை தேர்தலை குழப்பி வன்முறையை தூண்டுவதற்காக குண்டர்கள் யாழ்.தேவி மூலமாக குருநாகலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்வாறு யாழ். வந்து சேர்ந்தவர்கள் தமிழ் மக்களின் அதிகார பரவலாக்கல் உரிமையை மறுதலித்து குழப்பம் விளைவித்தார்கள். யாழ். வரலாற்றின் பெருமைக்குரியதும் ஆசியாவிலேயே பாரியதுமான யாழ்.பொது நூலகத்தை தீயிட்டு எரித்தார்கள்.

இதேபோல் 1983 இல் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட போதும் யாழ்.தேவி அன்றைய தினம் அனுராதபுரத்தில் யாழ்.தேவி ரயில் மீது கல்வீச்சு, சுடுதண்ணீர் வீச்சு போன்ற தாக்குதல்கள் இடம்பெற்றன.

இவ்வாறான சம்பவங்களினால் யாழ். தேவி ரயில் போக்குவரத்து இரு இனத்தவர்களுக்கும் கசப்புணர்வாக மாறியது.

1985.01.19ஆம் திகதியன்று யாழ். தேவி ரயில் மீதான தாக்குதல் இடம்பெற்றது.

அன்று தொடக்கம் யாழ்.தேவி சுட்டி எழுப்பிய இன நல்லுறவு படிப்படியாக சீர்குலைந்தது. தொடர்ந்து 1986.03.16 ஆம் திகதி யாழ்.தேவியின் 'தங்கை' உத்தர தேவி புகையிரதம் பரந்தன் புகையிரத நிலையகத்தில் தகர்க்கப்பட்டது. பின் 1986.03.25இல் புளியங்குளத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் வைத்து மீண்டும் யாழ்.தேவி தாக்கப்பட்டது.

1987 இல் வவுனியா - கிளிநொச்சி பிரதேசங்களுக்கு இடையிலான தண்டவாளம் சேதமாக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இதன் பின்னரும் யாழ். தேவியின் பயணம் தொடர்ந்தது. இந்நிலையில் இரு இனங்களுக்கு இடையிலும் யாழ். தேவி ரயில் போக்குவரத்து கசப்புணர்வுகளை ஏற்படுத்தி முள்ளாக மாறிவந்தது.

இந்நிலையிலும் தன்னாலான மட்டிலும் இனங்களின் நல்லெண்ணத்தை சுமந்த படி வடக்கிற்கும் தெற்கிற்குமாக அசைந்தாடியபடி கவலையுடன் பயணித்துக் கொண்டிருந்தாள் யாழ்.தேவி.

காடுகளுக்கு ஊடாகவும் குகைகளுக் கூடாகவும் ஏறிய அனைத்து இன மக்களையும் நேசமுடன் பாசத்துடன் அரவணைத்து தேசிய ஒற்றுமை எனும் தேசிய கீதம் கொண்டு பயணித்தாள் யாழ்.தேவி. இவ்வாறாக இறுதியாக 1990 இல் ஜூலை மாதம் தெற்கு பகுதி மக்களை சுமந்து கொண்டு வடக்கிற்கு பயணித்த யாழ். தேவி கோண்டாவில் புகையிரதம் அருகே தாக்குதலுக்கு உள்ளானது.

செ.ரமேஷ் (ச.நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு கடல் போக்குவரத்து

இருண்டு கிடக்கும் நெடுந்தீவு கடல் போக்குவரத்துச் சேவையின் விடிவுக்காக சுமார் 70 ஆண்டுகளாக மக்கள் காத்துக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியம். ஒரு ஆறு மைல் கடல் தூரத்தைக் கடக்க அவர்கள் பாடும் பாடு ஆசியாவில் மட்டு மல்ல உலகிலேயே இலங்கை ஒா் ஆச்சரியம்தான். இந்தப் போக்குவரத்தைச் சீராக்குவதென்பது ஒரு சின்ன விடயம்தான். இது ஒரு பெரிய விடயம் எனக் கருதி ' அண்டகாசம் ஆபுகாசம் திறந்திடும் சீசே' என மந்திரம் போட்டுக் கொண்டிருக்கறது

கொண்ட பின்னரும் தப்பித் தவறி பயணிக்க வரும் ஒரு சிலர் படகைத்தவற விட்டு துறைமுகதில் நின்றால் அதிகாரத்தில் உள்ளவர்கள் குறிப்பிட்ட துறைமுகத்திற்குப் படகைக் கொண்டுவந்து நிற்கும் எட்டுப் பத்துப்போரை ஏற்றிக் கொண்டு போங்கள் என வற்புறுத்தியிருக்கிறார்கள். இதைச் செய்ய படகுகளுக்குக் கட்டுப்படியாகாது. எண்ணெய்ச் செலவு ஏனைய செலவுகள் குறித்து அதிகாரத்தில் உள்ளவர்கள் கவனிப்பதில்லை. 'இட்ட கட்டளை தட்டிப் பேசக்கூடாது என்ற இறுமாப்பு'.

தனியார் படகும் சரி சங்கப் படகும் சரி நட்டத்தில் ஓட வேண்டும் என்பதல்ல. தினசரி மேற்கொள்ளப்படும் வழமையான சேவையிலேயே



ருக்காக நட்டத்தை ஏற்க வேண்டும் என்பதல்ல. குறிகட்டுவான் துறைமுகத்தில் பிந்தி வந்து படகுக்காக நிற்கும் பயணிகளும் வேறு படகுகளை வாடகைக்கு அமர்த்தி வரும் போது ஒருவரது பயணக் ககூலியாக ரூபா 200, ரூபா 300 என்று கொடுக்கிறார்கள். சங்கப்படகும் நான்கு

லையே.

சிந்தனையைச் செயற்படுத்தக் கூடாது என்பதில் சம்பந்தப்பட்ட திணைக்களம் உறுதியாக உள்ளதோ? அதனால் தான் அடிக்கடி பழுது ஏற்படுகின்றதோ? ஒன்றுமே புரியவில்லை.

# 70 ஆண்டுகளாக காத்திருக்கும் மக்கள்

வீதி அபிவிருத்தி அதிகார சபை.

அரச படகுச் சேவையின் பாதிப்பால் புல நோ.கூ.சங்கப் படகும் அக்கலாட்டி நிறுவனப்படகும் நெடுந்தீவு மக்களுக்கான சேவையை நிறைவேற்ற முடிந்த வரை உதவுகின்றது. இவை திறந்த படகு

பொதுவாக நட்டப்படுபவர்கள் அதிகாரத்தில் உள்ளவர்களின் கட்டளைக்காக மேலதிகமாக ஒருவர் இரண்டு பேருக்காக ஓடி நட்டப்படவேண்டுமா? சங்கம் ஏற்கெனவே பாரிய நட்டத்தில் உள்ளது. சங்





கள் மழை, வெயில் காலங்களில் பயணிக்கும் போது பல அசௌகரியங்களை எதிர் கொள்ளத்தான் வேண்டியுள்ளது.

இப்படகுகள் சேவையை முடித்துக்

கத்தைப் பொறுத்தவரை மக்கள் சேவை முக்கியம் அதற்காக வருவாய் இல்லாவிடினும் சில சேவைகளைச் செய்யத்தான் வேண்டும். அதைவிடுத்து ஒருவர் இருவ

பேரென்றாலும் ரூபா 40 உடன் ஓட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். எப்படி நியாயமாகும்?

இப்போது நெடுந்தீவு சேவையில் உள்ள ஒரேயொரு அரச படகு குமுதினி மட்டுமே. நெடுந்தீவுக் கடல் போக்குவரத்துடன் நீண்ட கால தொடர்புடையது. அதன் சேவைக்காலம் கூடுதல் என்பதால் தற்போதெல்லாம் அடிக்கடி பழுதடைகிறது. முதுமை உடல் தளர்வு ஏற்பட்டுள்ளது. இதயத்திலும் (இயந்திரத்தில்) பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு முறையும் பகுதடையும் போதும் திருத்த வேலைக்கென தாராளமாக பணம் அள்ளி வழங்கப்படுகிறது. எனினும் முழுமையான சிகிச்சையை முறைப்படி வழங்காமல் கிடைக்கும் பணத்தில் கொஞ்சம் கிள்ளித் தெளித்து திருத்த வேலைகள் இடம் பெறுவதாகப் போக்குக்காட்டி மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்கிறார்கள். வேலைகள் ஒழுங்கின்மையால் அதுவும் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு விடுகிறது குமுதினி.

நெடுந்தீவு போக்குவரத்துச் சேவையில் அரச படகிற்காக தற்போது பயணக் கட்டணம் அறவிடுவதில்லை. கடந்த சில தினங்களாக இது அமுலில் உள்ளது. ஜனாதிபதியின் சிந்தனை இது. எனினும் இந்தச் சிந்தனை செயற்டுத்த ஆரம்பித்த நாளிலிருந்து குமுதினி எத்தனை நாட்கள் சேவையில் ஈடுபட்டது. மக்களுக்கு இது எத்தனை நாள் மட்டும் பயனைக் கிடைத்தது என்ற நாட்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். ஜனாதிபதியின் சிந்தனையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தது. என்னவோ உண்மைதான். ஆனால் அது முழுமையாக மக்களுக்குக் கிடைக்கவில்

அரசாங்கப் படகு பழுதடையும் போது அதற்குப்பொறுப்பான திணைக்களமே வேறு படகுகளை வாடகைக்கு அமர்த்திச் சேவையைத் தொடர வேண்டும். இது முன்னர் இடம்பெற்றது. இது மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம் ஆனால் அப்படி எதுவும் இடம்பெற்றதாக இல்லை என்கிறார்கள். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் இது தவறானது இந்தச் சேவையின் அவசியம் நெடுந்தீவு மக்களுக்கானது. மக்களிடத்தில் இது பற்றிப் போதிய கவனமோ அக்கறையோ பெரிய அளவில் இல்லை.

எப்படியாவது அடுத்த கரையைச் சேர்ந்தால் சரி என்ற நிலை பாரிய அளவில் இருக்கிறார்கள். கண்டனங்களை எழுப்புவது கிடையாது. அதிகாரிகள் இதனைத் தமக்குச் சாதமாக்கி அசட்டையீனத்தைத் தொடர்வதுடன் முறையான திருத்த வேலைகளைச் செய்வதுமில்லை. படகு திருத்தப்பட்டு இரண்டொரு நாள் ஓடினால் படகு ஓடுதுதானே என மக்களும் ஒரு மாதிரி சமாளித்துவிட்டோம் என அதிகாரிகளும் திருப்திப்படுகிறார்கள்.

புதிய படகு வருவதாகக் கூறப்பட்டு பல வருடத் தகவல்கள் இந்த மாதம் முதல் திகதியில் நிறைவேறி விடும் போல் இருந்தது. இப்போது அதுவும் வந்து சேரவில்லை. விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரவுள்ளது. தேர்தலுக்காக இன்று வரும் நாளை வரும் என்று மீண்டும் புதிதாகப் பேசப்படலாம். கஷ்டப்பட்டுவது மக்கள் தான். நெடுந்தீவு மக்கள் தமது முக்கிய தேவையை நிறைவேற்றத் துணியாவிடில் இடக்கு மிடக்குகள் தொடரத்தான் செய்யும்.

துருந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

தமிழ் காவியங்களிலும் பாடல்களிலும் பற்பல சுவைகள் உண்டு. அவற்றுள் கணவன் மனைவிக்கிடையில் இடம்பெறும் ஊடல் பற்றியதான சுவையும் ஒன்று.

தலைவனும் தலைவியும் ஒன்றாகக் கூடுவது இன்பம் பயக்கும். கூடல் இன்பத்தை மிகுதிப்படுத்துவது ஊடல் எனும் சிறிய கோபம். ஒரு மனிதன் பசித்ததன் பின்னர் உண்பானாயின் அவ்வுணவின் சுவையோ தனி. அதுபோல ஊடல் கூடுவதனால் இன்பம் மிகுதிப்படும். இதனை திருவள்ளுவர் ஊடல் உவகை என்ற அதிகாரத்தில்

'உணவினும் உண்ட
தறவினிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது'

என்றார். சிறிது நேரம் வெய்யிலில் இருந்துவிட்டு இனிய மர நிழல் ஒன்றுக்குச் சென்று இளைப்பாறினால் மிகுந்த சுகத்தை, இன்பத்தைத் தரும். அதுபோலவே வாழ்க்கையில் காம நுகர்ச்சியில் ஈடுபடுதல் என்பது எமது மனிதனது வாழ்க்கைப் பயணத்திற்கு மிகுந்த அவசியமன்றோ. அந்த வகையில் இலக்கிய பாடல்கள் தரும் ஒரு சில சம்பவங்களைப் பற்றிப் பார்ப்போம்.

ஒரு கணவன் மாலை நேரத்தில் மகிழ்ச்சியாக அமர்ந்திருந்தான். அவனுடைய ஆசை மனைவி அருகில் சென்றாள். அப்போது கணவன் தும்மினான். தும்முவது என்பது தமிழர் பண்பாட்டில் ஒரு காத்திரமான இடத்தை வசிக்கிறது.

ஒருவர் தும்மினால் நூற்றாண்டு வாழ்க என அருகிலுள்ளவர்கள் வாழ்த்துவது உங்களுக்கு நினைவிருக்கும். சிறுவர்கள் தும்மும் போது அருகிலுள்ள பெரியவர்கள் யாரோ நினைப்பதாகக் கருதி 'நூறு' என்று வாழ்த்துவது எமது மரபு. ஆனால், இப்போது அப்படியல்ல.

சரி, அது இருக்கட்டும் கணவன் தும்மியவுடன் அருகில் இருந்த மனைவி தன் கணவனுக்கு 'நூற்றாண்டு வாழ்க' என்று இறைவனைத் துதித்தாள். பின்னர் அவள் விம்மி விம்மி அழுதாள். இதனை அவதானித்த கணவன், அன்பே ஏன் அழுகிறாய் என காரணத்தை வினாவ, அதற்கு அப் பெண் தலைவா யாராவது அன்புடையவர்கள் நினைத்தால்தானே தும்மல் வரும். உமக்கு அருகில் நான் இருக்கும் போது உம்மை நினைத்து வருந்துகின்ற வேறு பெண்களும் உளரோ? என்று கூறி அழுதாள். இதனைத் திருவள்ளுவர் தனது குறளில் அழகாகக் காட்டுகிறார்.

' வழத்தினாள் தும்மினேனாக
அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று'

தற் காலத்தில் பெண்கள் தேவையில்லாமல் கணவன் மீது சந்தேகப்பட்டு ஊடல் கொள்கின்றனர். ஆனால் அவர்களது ஊடல் முற்றி நீதி மன்றம் வரைக்கும் சென்று இறுதியில் விவகாரத்தில் அல்லவா முடிகிறது. முற்காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு இறுக்கமாகப்பட்டிருந்தது. ஆனால், தற்போது நிலைமை அப்படியல்ல. ஆண்களும் சரி பெண்களும் சரி கள்ளக் காதல் தொடர்புகளை பேணி கணவன் தன் அன்பு மனைவியையோ அல்லது மனைவி தன் அன்புக் கணவனையோ வஞ்சிப்பது பற்றி நாம் கண்கூடாக கண்டு வருகிறோம்.

மனைவி அழுவதைக் கண்ணுற்ற கணவன் பதைபதைத் தவாறு அன்புடையவளே! எனக்கு உன்னைத்தவிர எனக்கு வேறு ஒரு உறவு ஏது? வீணாக ஐயம் கொள்ளாதே என்று ஆறுதல் கூறினான்.

சிறிது நேரம் சென்ற பின்னரும் கணவனுக்கு மறுபடியும் தும்மல் வந்தது. முன்னர் தும்மியதால் தன்மீது சந்தேகப்பட்டாள். இப்போது தும்மினாலும் தேவையில்லாமல் சந்தேகப்படுவாள் என்று கருதி தும்மலை அடக்கினான். இதனைக் குறிப்பால் உணர்ந்த மனைவி தன் கணவனை நோக்கி இப்போது உங்கள் களவுத்தனம் எனக்கு விளங்கிவிட்டது. இயற்கையாகவே உங்களுக்குத் தும்மல் வருமாயின் ஏன் அடக்க வேண்டும்? இதில் ஏதோ மர்மம் இருப்பதால் தானே வந்த தும்மலை அடக்கினீர்கள்? என்று கூறி மீண்டும் ஊடல் கொள்வதாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

'தும்முச் செறுப்ப அழுதாள்
நுமருள்ளல்
எம்மை மறைத்தீரோ என்று'

மேலும், கம்பராமயணத்திலே ஓர் இடத்தில் தசரத மன்னன் ராமருடைய திருமணத்தின் பொருட்டு பரிவாரங்கள் புடைசூழ மிதிலா புரிக்குச் சென்று கொண்டிருக்கிறார். வழியில் பல அரிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. அவற்றுள் ஒரு சம்பவம். ஒரு வீரன் போர் என்ற சொல்லைக் கேட்டவுடன் அவனுடைய தோள்கள் வீரவுணர்ச்சியில் விம்மும். மலை போன்ற, திரண்டு உருண்டு புடைத்து நின்ற தோள்களை உடையவனின் தோள்களில் வீரமும், அழகும் குடியிருந்தது. அவ்வீரன் தன் மனைவியின் கூந்தலில் சூடுவதற்காக மலர்களை கொய்திருந்தான். அவ்வீரனுடைய மனைவி மிக அழகானவள். குயில் போன்ற இனிமையான குரலை உடையவள். கருங்குழலும் அரிய குணமும் படைத்தவள். அவள் மெல்ல மெல்ல அடி மேல் அடியெடுத்து பின்புறமாக வந்து கணவன் அறியா வண்ணம் கணவருடைய கண்களைத் தனது மென் கரங்களால் மூடினாள். கண்களை மூடியது யார் என அறியாத அவ்வீரன், யார்? எனக் கேட்டான். அவ்வளவுதான் அவளுக்குத் தன் கணவன் மீது கோபமும் சந்தேகமும் உண்டானது. உடனே கைகளை பின்புறமாக எடுத்துவிட்டு கோபித்து பெருமூச்சு விட்டபடி ஓரமாக நின்றாள்.

இதனைக்கண்ட கணவன் பெரும் கலக்கமுற்றவனாகி கண்ணே! ஏன் இந்தக் கோபம் நாகபாம்பு சீறுவது போல் உள்ள உனது சீற்றத்திற்கு காரணம் யாது? என வினாவ, அதற்கு அம் மாதரசியோ தங்கள் கண்களை மூடும் உரிமை என்னைத் தவிர வேறு யாருக்கு உண்டு. உங்கள் கண்களை மூடியவுடன் ஏன் என் பெயரையிட்டுத் தானே அழைத்திருக்க வேண்டும். யார் என்று கேட்ட போது வேறு யாரேனும் பெண்கள் உங்கள் மனதுக்குள் இருக்கிறார்கள் போலும். என தன் கணவன் மீது ஐயுறுகிறாள். தன் கணவன் மீது கோபம் கொண்டவளான அம் மங்கை தன் கணவனின் ஒழுக்கம் குறித்து சந்தேகமடைகிறாள். அதற்குக் கணவன் மனைவியை நோக்கி அன்பே என் மீது சந்தேகம் கொள்ளலாகுமா? நான் எந்த வித தப்பும் செய்யவில்லை. என மனைவிக்கு உறுதி கூறிய பின்னர் மனைவி சினம் ஆறினாள்.

இதனை கம்பன்,

'போரென்ன வீங்கும்
பொருப்பன்ன
பொலன் கொள்திண்டோள்
மாரன் அனையான் மலர்
கொய்திருந்தானை வந்தோர்
காரென்ன கூந்தல்
குயிலன்னவள் கண் புதைப்ப
ஆரென்னலோடும்
அனலென்ன அயிர்த்துயிர்த்தான்'

என்ற பாடல் மூலம் பெண்கள் சந்தேகம் கொண்டு தமது கணவன் மாரை ஊடல் செய்வதாக பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

எஸ். நதிபரன் B.A. (Hons)

# ஊர்ப் புதினம்



அண்மையில் பருவமழைக் காலத்தில் நாடெங்கும் மரம் நடுகை வைபவங்கள் கோலாகலமாக முன்னெடுக்கப்பட்டன.

யூன் 05 ஆம் திகதி சுற்றுச் சூழல் தினம் ஆனாலும் அக்காலம் வெப்பமான காலப்பகுதி ஆதலால் ஐப்பசி, கார்த்திகை மதங்களே மரம் நடுகைக்குப் பொருத்தமான காலம்.

பல இலட்சம் மரங்கள் நடப்பட்டுவிட்டன. ஆனால், தப்பிப் பிழைத்து வளர்ந்து பலன் தருவது சில ஆயிரம் மரங்களாகத்தான் இருக்குமெனக் கடந்த காலம் எமக்குப் பாடம் புகட்டுகிறது?

ஏன் இந்த நிலை மரம் நடுவது ஓரிரு மணிநேர வேலை. ஆனால், அவற்றைப் பராமரித்து பயன் பெறுவது பல மாத, வருட வேலை. நட்ட மரத்தை ஒரு நாளுடன் மறந்து போகும் மனிதர்கள் தாம் எம்மில் அதிகம். பருவ மழை மாறிப் பொழிகிறது. கடும் வறட்சி, வெள்ளப் பெருக்கு, கடும் வெப்பம் என இயற்கை தலைகீழாகி விட்டது என்று கதைக்கின்றோம்.

இயற்றைகயுடன் இயற்கையாகவே வாழ்ந்த வாழ்விலிருந்து மிக வேகமாகத் தூரத் தூரப் போகின்றோம். காடுகள் எம்முடன் ஒரு காலம் இருந்தது. இப்போது கொங்கிறீற் காடுகளுக்குள் வாழ ஆசைப்படுகின்றோம்.

வளர்ந்த நாடுகளைப் பார்ப்போமாயின் அங்கு மனிதர்கள் குடியிருப்புப் பிரதேசம் ஓரிடத்தில் இருக்கும். அங்கு அடுக்கு மாடிக்கட்டடங்கள் இருக்கும் அவற்றில் மனிதர்கள் செறிவாக வாழ்வார்கள். அதனால் குறித்த ஓரிடத்தில் பாடசாலை, மருத்துவமனை, பொழுதுபோக்கு சந்தை வசதிகளைச் சிறப்பாகச் செய்து கொடுப்பார்கள். மனிதர்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்துடன் இருப்பார்கள். அரசாங்கம் இவற்றில் கண்ணுங் கருத்துமாக இருப்பார்கள். ஆனால் எமது நாட்டில் காடுகள், தென்னந்தோட்டங்கள், பனை மர வளவுகள், பற்றைக் காடுகள் யாவுமே நாளாந்தம் அழிக்கப்பட்டு குடியிருப்புக்கள் முளைக்கின்றன.

தேங்காய் ஏற்றுமதி செய்த நாம் தேங்காய்களை ஆசிய நாடுகளிலிருந்து இப்போது இறக்குமதி செய்யத் தொடங்கி விட்டடோம். மரங்கள் நட்டு விழாக் கொண்டாடுவதில் நாட்டம் காட்டுகின்றோம். பின்னாளில் அவற்றின் கூடுகளைப் பிடுங்கி விறகாக்குவதிலும் ஆடு, மாடுகளை மேய விட்டு அவற்றை உணவாக்குவதிலும் ஈடுபடுகின்றாம்.

பருவ காலத்தை உறுதி செய்து எமது நல்வாழ்வை மரங்கள் உறுதி செய்கின்றன என்பதை வசதியாக மறந்து விடுகின்றறோம். அரசாங்கம் சரி, அரச சார்பற்ற நிறுவனங்களும் சரி மக்களின் அமைப்புக்களும் சரி மரங்களின் தொடர் பராமரிப்பில் அக்கறை செலுத்த வேண்டும்.

காஸ் அடுப்பில் சமைக்கின்றோம் தானே. மர வளர்ப்பில் ஏன் அக்கறை செலுத்த வேண்டுமென சிலர் நினைக்க கூடும். மரங்கள் இல்லாவிட்டால் காஸ் நெருப்பு வெக்கை போன்ற வெப்பத்தில் அல்லவா இரவும் பகலும் வாழ வேண்டும்.

எமது முன்னோர்களிடமிருந்து நல்ல பாடங்களைக் கற்றுக் கொண்டு இயற்கையுடன் இணைந்து வாழப் பழக வேண்டும்.

- சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பூமராங்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

ஆனால், தருமரத்தினத்தாரோ ஊரவர்களுடன் கதைக்கும் சந்தர்ப்பங்களில் என்ரை பிள்ளையள் வெளிநாடிலை நல்லா இருக்குதுகள் இங்கையிருக்கிறவையும் அரசாங்க உத்தியோகங்களிலை கௌரவமாக இருக்கினம் என்று கூறித்தான் சோடைபோகவில்லை என்று நினைத்து திருப்திப்படுத்திக்கொள்வார். ஆனால், உள்மனமோ வெந்துகொண்டு தான் இருந்தது.

இவ்வாறு ஒரு நாள் பகிடி பகிடியாக கந்தையாக்கிழவரோடை கதையளந்தார். கந்தையரோ ஒரு பொல்லாத பேர்வழி. எல்லாத்தையும் நேருக்கு நேர் போட்டுடைப்பார். மனிசன் போட்டுதே இப்படி ஒரு போடு. என்ன தருமரத்தினம் உன்னானைக் கேக்கிறன் உம்மடை பட்டம் பதவிக்கு, உம்மடை பிள்ளையள் எஞ்சினியர், டொக்டர் எண்டெல்லோ வந்திருக்கவேணும். ஏன் இப்படிச்சோடைபோனதுகள் என்று' அதற்குத் தருமரத்தினத்தாரோ நானே படிக்கிறது பிள்ளையள் தானே படிக்கோணும் அதுகள் விளையாடியதுக்கு நான் என்ன செய்யிறது. நானும் அதுகள் கம்பசுக்குப் போகுங்கள் என்று எத்தனை கனவோடை, ஆதங்கத்தோடை காத்திருந்தன். அது எல்லாம் இலவு காத்த கிளி போலாச்சு என்று அசடுவழி யக் கூறிச் சமாளித்தார்.

இது இவ்வாறிருக்க வல்லிபுரத்தாருடைய மகனோ மருத்துவப்படிப்பு முடிந்து வைத்தியராக நியமனம் பெற்று கொழும்பு போதனா வைத்தியசாலையில் ஒரு வருட இன்ரேண்ட சிப்பை முடித்து சொந்த ஊரில் உள்ள ஆதார வைத்தியசாலைக்கு நியமனம் பெற்றுவந்துள்ளான். இப்போது அவ் ஊரெல்லாம் வேந்தனைப்பற்றிய பேச்சாகவே இருந்தது. அவன் நோயாளிகளோடு பேசும் விதம் ஒவ்வொருவரிலையும் காட்டும் பரிவு அக்கறை நேரம் காலம் பாராது எந்நேரமும் ஸ்ரெதெஸ்கோப்பும் கையுமாக வைத்தியசாலையை வலம் வந்துகொண்டிருந்தான். அவனின் சேவையைப் புகழாத மக்களே இல்லையெனலாம். இதைவிட அவனை மாப்பிள்ளையாகப் பெரிய பெரிய மனிதர்களெல்லாம் குறிப்பாக வல்லிபுரத்தார் வீட்டை படையெடுத்த வண்ணம் இருந்தனர். கோடிக்கணக்கான சீதனம், டொனேசன் கொடுத்து வேந்தனை மாப்பிளையாக்க விரும்பினார். ஆனால் வேந்தனோ ஒரு வறிய கும்பத்திலை ஓரளவு படித்த குடும்பப்பாங்கான பெண்ணே போதும் என்று கூறிவிட்டான். வல்லிபுரத்தார் தம்பதிகளும் அதே கொள்கையுடையவர்கள் என்பதால் இதில் பிரச்சினை ஏதும் தோன்றவில்லை. அவ்வாறே அக்கிராமத்தில் வல்லிபுரத்தாரோடை தோட்டம் செய்யும் பொன்னையற்றை ஒரே மகள் அமுதாவைத் திருமணம் செய்தான். அமுதா, க.பொ.த உயர்தரம் வரை படித்துச் சித்தியெய்தியவள். அழகானவள் நல்லகுணவதி வேந்தனுக்கேற்ற மனைவிதான். இரு பக்கத்தாரும் பேசி முடிவெடுத்த அத் திருமணம் பெரிதாக நடைபெற்றது. ஊர் மக்கள் எல்லோரும் தமது வீட்டுத்திருமணம் போல சந்தோசமாகக் கலந்து சிறப்பித்தனர்.

இதைக்கண்டு தருமரத்தினருக்கு ஒரே வயிற்றெரிச்சல். அன்று என்னை மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் இழுத்து மானத்தை வாங்கியவன். இன்று ஓகோ என்று கொடிகட்டிப் பறக்கிறானே என்று ஆதங்கம். என்ன செய்வது ஊரே வல்லிபுரத்தார் பின்னால் திரண்டு நிற்குறதே.

இவ்வாறிருக்க அவ்வூர் பொதுநூலகம் அவ்வூரில் உள்ள வெளிநாட்டில் வசிப்போரின் பண உதவியால் மாடிக்கட்டடமாக கட்டி முடிக்கப்பட்டது. பெரியதொரு திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிந்தது. பிரதம விரந்தினராக வைத்தியக் கலாநிதி வேந்தன் அழைக்கப்பட்டிருந்தார். தருமரத்தினத்தாருக்கும் ஊரில் உள்ள முக்கிய பிரமுகர் என்ற வகையில் அழைப்பிதழ் வழங்கப்பட்டிருந்தது. முக்கிய பிரமுகர்கள் வரிசையில் தற்செயலாகத் தருமரத்தினதாருக்கு வல்லிவுரத்தாருக்கு அருகில் அமர வேண்டியதாயிற்று. தருமரத்தினத்தாருக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. புழுப்போல் நெழிந்தார். இடம்மாறுவதும் பண்பற்ற செயல். வல்லிபுரத்தாரை தனக்குச் சமனாக வைத்துவிட்டார்களே என மனதில் ஒரே புழுக்கம். இது இவ்வாறிருக்க வல்லிபுரத்தார் நெற்றியில் திருநூற்றுக்குறி சந்தனப்பொட்டு பட்டுவேட்டி சால்வையுடன் நிமிர்ந்த நெஞ்சும் மகனின் பெருமைகளை நெஞ்சில் சுமந்தபடி சிரித்த முகத்துடன் கலகலப்பாக அருகிலிருந்த கந்தையாக் கிழவரோடை அளவளாவிக் கொண்டிருந்தார். தருமரத்தினத்தாருக்கோ ஒருபுறம் சுவர் மறுபுறம் வல்லிபுரத்தார். வேறுவழியில்லாமல் வல்லிபுரத்தாரோடை வலியக் கதை கொடுத்தார்.

இப்ப எப்படி தோட்டம் எல்லாம் விட்டிருப்பாய் மகன் இனித் தோட்டம் செய்ய விடப் போறானே என்றார். உடனே வல்லிபுரத்தாரோ சீச்சீ நான் என்னாலை ஏலு மட்டும் என்ரை தொழிலை விடன் மகனுக்குக்கும் என்ரை குணம் கொள்கையெல்லாம் தெரியுந்தானே. அதாலை அவன் உதைப்பற்றி கதைக்கிறதில்லை. யாரையும் நம்பி யாருமில்லை. நான் தந்தையாக இருந்து அவனை ஆளாக்கிப் போட்டன். இனி அவன் தன்ரை பாட்டைப்பார்ப்பான். நான் என்னாலை ஏலு மட்டும் என்ரை தொழிலை விடன். ஏலாத காலத்திலை மகன் விடப்போறானே என்ன என்றார். உடனே தருமரத்தினத்தாருக்கும் அவருடைய மனச்சாட்சி பேச ஆரம்பித்தது.

நீ வல்லிபுரத்தார் தோட்டக்காரனாக இருந்தும் உன்ரை பிள்ளையை ஆளாக்கி ஒரு கௌரவமான நிலைக்குக் கொண்டு வந்திட்டாய். இஞ்சைபார் நான் பெரிய பட்டம் பதவியில் இருந்தும் என்ரை ஏழு பிள்ளையிலை ஒன்றைத்தன்னும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வர முடியவில்லையே. என்ன செய்யிறது? எல்லாம் தலைவிதி என்று பெருமூச்சு விட்டார். உடனே வல்லிபுரத்தாரும் விட்டுக் கொடுக்காமல் தலைவிதியை மட்டும் குறை சொல்லக்கூடாது சேர் எங்கடை மதியாலையும் நல்ல மனப்பாங்காலும் நாங்கள் நல்லது செய்தால் எங்களுக்கு நல்லது தான் விளையும். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்றும், தன் வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்று அந்த நாளையிலை பெரியவர்கள் சும்மாவே சொன்னார்கள். ஏன் இந்த அவுஸ்திரேலியப் பழங்குடிமக்கள் ஒருவகைப் பூமரங் எனும் ஆயுதத்தைப் பயன்படுத்தினார்களாம். அது ஒரு



வகை வளைதடி போன்றது. அதனைப் பயன்படுத்தி விலங்குகளை வேட்டையாடும்போது அவ்வாயுதம் அவ்விலங்கைத்தாக்கி வீழ்த்திவிட்டு எய்தவன் கைக்கே திரும்புமாம். ஆனால் கொஞ்சம் கவனயீனமாக இருந்தால் எய்தவனையே திருப்பித்தாக்குமாம். இதை நீங்கள் அறிந்திருக்கவில்லையோ என்று கூறினார். இப்போது படித்து பட்டம் பெற்ற பெரிய மனிதரான தருமரத்தினத்தார் தோட்டக்காரனான வல்லிபுரத்தாற்ரை அறிவுரையைக் கேட்க வேண்டிய சூழ்நிலை. கேட்டும் இப்ப என்ன பயன் எல்லாம் காலம் கடந்த ஞானம்.

*(முற்றும்)*

**கி.குகநாதன்**

## ஆன்மிக ஓசை

தவறு செய்யாத மனிதன் இல்லை. ஆனால் மீண்டும் மீண்டும் தவறு செய்யாது இருக்க வேண்டும்.

- சத்ய சாய்பாபா

உன்னிடத்தில் கேட்கிறவனுக்கு கொடு. உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகம்கோணாதே.

- மத்தேயு

இறையச்சம் கொண்டு வாழ்வோரை காப்பாற்றுவோம். கொடுமையாளர்களை அதிலேயே வீழ்ந்து கிடக்குமாறு விட்டுவிடுவோம்.

- திருக்குர்ஆன்

### யாழ் மக்கள் பரவசமடைய

யாழ் பாடி பரிசாகப் பெற்றுத்
தந்த யாழ்ப்பாண மிது இங்கு
யாழ் ஓசை கீத மிசைக்க
யாழ் மக்கள் பரவச மடையவும்
நல்லூர் கந்தனின் நல்லாட்சி
இங்கு
நாதமாய் ஒலித்திடவும்
நாகர் பரம்பரையில் வந்துதித்த
நல மக்கள் தான்
யாழ்ப்பாணத்தவர்
வேற்று நாட்டான் தமிழன் என்று
விதண்டாவாதம் புரியும்
...வெல ஆனந்த தேரரும்
...யன் பரம்பரையென வீராப்பு
பேசும்
ஆரியனும் வீறு கொள்வது
மடமை
யார் எப்படிக் கூறினாலும்
சுத்தமான இலங்கை
வரலாற்றை கற்றால் புரிந்திடும்
பித்தலாட்டம்
பொறுமையே கடலிலும் பெரிது
என
புரியட்டும் நமது
இனவாதிகளுக்கு

கந்த. ஞானமுத்து
கைதடி மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் விவாகரத்துப் பெறலாம்?

## சட்டமும் சமூகமும் 11




ஒரு நாள் ஒரு அரசாங்க அதிகாரி யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத்திற்குள் நுழைந்தார். அங்கிருந்த சட்டத்தரணிகளிடம் தனக்கு ஒரு குடும்பப் பிரச்சினை இருப்பதாகவும் தனக்கு மண நீக்கம் பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொண்டார். அவருக்கும் அவரது மனைவிக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் அவர் நீதிமன்றம் வந்தமைதான் விசித்திரமானது.

அவர் தனது பிரச்சினையை விவரித்தார். தனது மனைவி தனக்கொரு டிஸ்க் அன்ரனா தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை (Dish T.V) வாங்கித் தருமாறும் கேட்டதாகவும் தான் மனைவியின் விருப்பத்திற்கு அமைவாக அவ்வாறான ஏற்பாட்டைச் செய்ததாகவும் அவர் தற்போது ஒவ்வொரு 'சனல்' நிகழ்ச்சிகளையும் மாற்றி மாற்றி போட்டுப் பார்த்துக் கொண்டு இருப்பதாகவும் தனக்கு இரவு உணவாக அரை இறாத்தல் பாணும் மூன்று கதலி வாழைப்பழமும் வாங்கி வைத்து விட்டு கலைஞர், சண் டி.வி., K T.V, ஜெயா T.V என மாற்றி மாற்றி நாடகங்கள் பார்ப்பதாகவும் இதனால் தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் பெரும் துன்பமாக இருப்பதாகவும் கவலையோடு கூறினார். அயல் வீட்டுப் பெண்களும் வந்து குவிந்து நாடகம், திரைப்படம் எனப் பார்ப்பதால் தனது பிள்ளைகளது கல்வி மேம்பாடு பாதிக்கப்படுவதோடு அயல் வீட்டுப் பிள்ளைகளுக்கும் தனது பிள்ளைகளுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படுவதாகவும் சொன்னார். அவர் தனது மனைவி தனது சொல்லைக் கேட்பதில்லை என்றும் சொன்னார்.

இத்தகைய பிரச்சினைகள் அவருக்கு மட்டுமல்ல பல வீடுகளில் அடுப்பு புகைவதில்லை. பல கணவன் மனைவி உள்ளத்தில் நீறுபூத்த நெருப்பு புகைகிறது. ஒரு கணவன் தான் இப்போது வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார். வவுனியா கூமாங்குளத்தில் ஒரு குடும்பப் பெண் மதியவேளை ஏதோவொரு சனலில் 'இதயம்' என்ற நாடகத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டு இருக்க பண்டாரிக்குளம் பாடசாலை ஒன்றில் படிக்கும் அவரது பிள்ளைகள் மதிய நேர உணவுக்கு வீடு வந்தபோது சாப்பாடு இல்லாமல் அழுத காட்சியை மறக்கமுடியாது. மீள நினைவு படுத்த வேண்டியதாயிற்று. 'இதயமே' இல்லாத அரக்கியின் செயல் அது.

மேற்படி அரச அதிகாரிக்கு ஒரு விவாகரத்து வழக்கைத் தாக்கல் செய்ய வழக்கெழு காரணம் (Cause of action) எழுந்துள்ளதா?

**எவை எவை வழக்கெடு காரணங்கள்?**

1. சோர வாழ்க்கை (Adultry)
2. ஆண்மைக் குறைவு (Impotency)
3. வன்ம உறவறுப்பு (Malacious Desertion)

மேற்கூறிய மூன்று காரணிகளில் ஏதாவது ஒன்றைக் காரணம் காட்டி ஒருவர் தமக்கிடையே மண உறவை புறம் வைக்குமாறு மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் வழக்கைத் தாக்கல் செய்யலாம். அவ்வாறு வழக்கைத் தாக்கல் செய்யும்போது திருமணப் பதிவுச் சான்றிதழ் கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தம்பதிகளில் யாராவது ஒருவர் சோர வாழ்வில் ஈடுபட்டிருந்தால் அவ்வாறானவர்களையும் இணைத்து வழக்கைத் தாக்கல் செய்யலாம். அவர்களை (Co Defendant) கூட்டு எதிராளிகளாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆண்மைக் குறைவு திருமணத்திற்கு முந்தியதாக இருந்தால் வழக்குத் தாக்கல் செய்ய வழக்கெடு காரணம் உண்டு. ஆனால் திருமணத்திற்குப் பிந்தியதாக இருந்தால் (After The Marriage) அவ்வாறான ஒரு வழக்கைத் தாக்கல் செய்ய முடியாது. நீதி மன்றங்களில் வரும் வழக்குகளில் பெரும்பாலானவை வன்ம உறவறுப்பு (Malacious Desertion) அல்லது அமை நிலையான வன்ம உறவறுப்பு (Constructive Malacious Desertion) போன்ற காரணிகளை முன்வைத்தே வழக்கைத் தாக்கல் செய்கிறார்கள். இந்தக் காரணியை மையமாக வைத்து வழக்கைத் தாக்கல் செய்வது சுலபமானது என அவர்கள் கருதுகிறார்கள்.

(தொடரும்)

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
**அனுப்பவேண்டிய முகவரி**
யாழ் ஓசை
வீரகேசரி கிளைக் காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மண்டதீவு அரசினர் பொது வைத்தியசாலை மீண்டும் எப்போது திறக்கப்படும்?

யுத்த அனர்த்தங்களால் மண்டை தீவு பகுதியில் பாதிக்கப்பட்ட அரச கட்டிடங்களில் மண்டை தீவு அரசினர் பொது வைத்திய சாலையும் ஒன்றாகும். இவ் வைத்தியசாலை சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டு சிறப்பாக இயங்கிவந்தது.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதங்களுக்குள்ளாகி முற்றிலும் பாதிப்படைந்து தற்போது நீண்டகாலமாக இயங்காத மூடப்பட்ட நிலையில் இருந்து வருவது குறித்து இப்பகுதி மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, மண்டைதீவு ஆஸ்பத்திரி வீதியில் குடியிருந்த குடி மக்கள் மீளக்குடியேறாத காரணத்தால் ஆஸ்பத்திரியை வேறு இடத்தில் நிர்மாணித்து நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மண்டைதீவு மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றும் பட்சத்தில் மக்கள் மீளக் குடியேறி அன்றாட இயல்பு வாழ்க்கையை ஆரம்பிப்பார்கள். ஆனால் மக்கள் வாழ்வதற்கு தொழில் வசதிகளையும் அன்றாட தேவைகளையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இதை விடுத்து மக்கள் மீளக்குடியேறாத காரணத்தால் அபிவிருத்திப் பணிகளை முடக்குவது கவலைக்குரிய விடமாகும்.

தீவுப் பகுதிகளில் நவீன வசதிகள் கொண்ட பல கட்டிடத்தொகுதிகள் கொண்டவை இவ் வைத்திய சாலை அப்போதய கிராமசபைத் தலைவர் க.கைலாபிள்ளை கிராமத்த தலைவர் மு.நவரட்ணராஜா போன்ற சைவ பெரியார்களின் பெருமுற்சியால் இவ்வைத்தியசாலைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வந்தது. இவ் வைத்தியசாலையை 50 ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய பிரதமர் சேர்.ஜோன்.கொதலாவலை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் வைத்தியசாலையை அயல் கிராமமான அல்லைப்பிட்டி பகுதி வாழ் மக்களும் தங்கள் வைத்திய தேவைகளை மேற்படி வைத்தியசாலை ஊடாக நிறைவேற்றி வந்தனர். இதன் காரணமாக மண்டைதீவு அல்லைப்பிட்டி கடல் நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி வைத்தியசாலை இயங்காது நீண்ட காலம் இருந்து வருவதால் அல்லைப்பிட்டி வாழ் மக்கள் தங்கள் வைத்திய தேவைகளை நிறைவேற்ற யாழ்.போதனா வைத்தியசாலை, ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

இதனால் இப்பகுதி கர்ப்பிணிப் பெண்கள் சிறுவர்கள் முதியவர்கள் சொல்லெணாத் துயரங்களை அநுபவித்து வருகினறனர். ஆகவே மண்டைதீவு கிராமத்தையும் இணைக்கும் கடல் வீதியை புனரமைத்து மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையை மீண்டும் ஆரம்பித்தால் இவ் இரு கிராம மக்களின் வைத்திய தேவைகள் பூர்த்தி செய்ய முடியும்.

இதை விடுத்து மக்கள் மீளக்குடியேறாத பட்சத்தில் மண்டைதீவு அரசினர் வைத்திய சாலையை வேறு இடத்தில் ஆரம்பிக்க முயற்சிப்பதை எதிர்த்து இப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பையும் ஆட்சேபனையும் தெரிவிக்கின்றார்கள்.

ஆகவே மக்களின் அன்றாட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும்.

இவ் வைத்தியசாலை புனரமைப்பு பணிக்கு சில வருடங்களுக்கு முன்பு நிக்கொட் நிறுவனம் 90 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டபோதும் எவரும் ஒப்பந்த அடிப்படையில் புனரமைக்க முன்வராத காரணத்தால் இன்று வரை இவ வைத்திய சாலை புனரமைக்காது காணப்படுகின்றது. இதன் கட்டிட உபகரணங்கள் நாளாந்தம் இனம் தெரியாத திருடர்களால் திருடிச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி வைத்தியசாலைக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமித்து கட்டிடங்களையும் வைத்தியசாலை உபகரணங்களையும் பாதுகாத்து வர வேண்டும் அப்படி பாதுகாக்க முன்வந்தால் வைத்திய சாலை உபகரணங்களை பாதுகாக்க முடியும். என மக்கள் தெரிவிக்கின்றார்கள். ஒரு கிரமத்தில் வளர்ச்சி வைத்தியசாலையிலும் பாடசாலைகளிலும் தங்கியுள்ளது. இவைகளில் ஒன்று இயங்காத பட்சத்தில் அக் கிராமம் முன்னேற்றம் அடையாது. என புத்திஜீவிகளின் கருத்தாகும்.

**(வேலணை நிருபர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு எண் மூலம் பலனை அறிதல்

புத்தாண்டுப் பலன் அறிய பிறந்த திகதி மிகவும் முக்கியமானது. ஒருவர் 25-2-1922 இல் பிறந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர் பிறந்த திகதியைத் தவிர மற்ற மாதம், ஆண்டு இரண்டையும் விட்டுவிடுங்கள். பிறந்த திகதி 25. இதை 2 + 5 என்று கூட்டிவந்த எண் 7. இந்த ஆண்டு 1979 என வைத்துக்கொள்வோம். இதனைக் கூட்ட 1+9+7+9 =26. இதை மீண்டும் கூட்ட 2 + 6 =8 வருகிறது. இந்த 8 உடன் 7ஐக் கூட்ட வேண்டும். 8 + 7 =15. இதை மீண்டும் கூட்டினால் 1+5 =6. இந்த ஆறு தான் அவருடைய இவ்வருட எண் எனலாம். இதே போல் ஒவ்வொருவரும் தங்கள் புத்தாண்டு எண் மூலம் பலனை அறியலாம்.

1 முதல் 9 வரை உள்ள கூட்டு எண்களிற்கான பலன்களை கீழே காணவும்.

## 01

அடிக்கடி மாற்றங்கள் ஏற்படும். செய்தொழிலில் மாற்றம், இடமாற்றம், குடும்ப விவகாரங்களில் பெரிய மாற்றம், உடல் நிலையிலும் மாற்றம், எல்லா வகையிலும் மாற்றங்கள் ஏற்படும். இந்த ஆண்டில் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். எதிர்பாராத வகையில் குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். திருமணம் நடைபெறும். புத்திர பாக்கியம் உண்டாகும்.பணவரவு அதிகரிக்கும். சுப காரியங்களுக்காக பணச் செலவு ஏற்படும்.

செய்தொழிலில் சலிப்பு அல்லது வருவாய் குறைவு ஆகிய காரணங்களுக்காக புதிய தொழிலை மேற்கொள்ள வேண்டி வரும். அரசாங்கத்தில் பணிபுரிபவராக இருந்தால் பதவி மாற்றம் அல்லது வெளியூர் மாற்றம் ஏற்படும். அதுவரை செய்யாத ஒரு தொழிலை செய்ய நேரிடும்.

நெருங்கிய உறவினருக்கு உடல் நலக்குறைவு ஏற்படும். துக்ககரமான சம்பவங்கள் நிகழலாம். குடும்பத்தில் பிரிவினை ஏற்படும். ஆண்டு இறுதியில் பெரிய மனத்தாங்கல் காரணமாக சில நாட்கள் தனித்து இருக்க நேரிடலாம்.

ஆனால் ஆண்டு முடியும் சமயம் எதிர்பாராத அதிஷ்டம் ஏற்படும். ஆண்டிறுதியில் பெரிய மனத்தாங்கல் அகன்று மகிழ்ச்சி உண்டாகும். உடல் நிலையிலும் நலிவுகள் குறைந்து ஆரோக்கியம் பெருகும். புதுமனை புகவும் சந்தர்ப்பம் இருக்கிறது.

## 02

மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகலாம். இவருக்கு அல்லது குடும்பத்தின் நெருங்கிய உறவினருக்கு வயிறு சம்பந்தமான நோய்கள் வரலாம். ஆனால் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. வருவாயும் பெருகும். மன அமைதியும் இருக்கும்.

ஆண்டு தொடக்கத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு உள்ளானவர்கள் ஆண்டின் மத்தியிலேயே அவர்களின் ஆதரவினைப் பெறுவார்கள். மேல் பதவிக்கு உயரலாம். புதிய வாகனங்கள் வாங்கலாம்.

வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள இந்த எண்காரர்களுக்கு அதிக இலாபகரமாக இருக்கும் என்று கூறுவதற்கு இல்லை. பொருள்களில் தட்டுப்பாடும் அரசாங்கத்தின் கெடுபிடிகளும் வியாபாரத்தை வெகுவாக பாதிக்கும். வியாபாரத்தை மாற்றி அமைத்து கூட்டு வியாபாரமாகச் செய்தால் நல்ல பலனைத் தரும். உணர்ச்சி வசமாகக் கூடிய சம்பவங்கள் நிகழலாம். பொறுமையாக இருந்து தீர ஆலோசித்தே ஒன்றை செய்யத் தொடங்க வேண்டும். அவசரப்புத்தியால் ஆபத்து ஏற்படும்.

குடும்பத்தில் ஒரு புதிய ஜீவனின் சேர்க்கை ஏற்படும். பெண்களால் தொல்லைகள் ஏற்பட்டாலும் விரைவில் எல்லாம் சரியாகிவிடும். இந்த ஆண்டு முழுவதுமே மனம் மகிழ்ச்சியுடன் காணப்படும். சிற்சில கவலை தரும் சம்பவங்கள் நடந்தாலும் அதிகமாக மனதை வாட்டிக் கொள்ள வேண்டியதில்லை. ஆலயங்களுக்குச் சென்று வருவதன் மூலம் மன அமைதியும் செல்வப் பெருக்கும் ஏற்படும்.

## 03

முயற்சித்த காரியங்கள் அனைத்திலும் வெற்றியே கிட்டும். திருமணமாகாதவராக இருந்தால் திருமணம் நடைபெறும். வெளியூர் பிரயாணங்கள் வெற்றியை அளிக்கும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் அபிவிருத்தி காணப்படும். பழைய நண்பர்களின் தொடர்பு அற்றுப் போகலாம். புதிய நண்பர்களும் தொழில் முன்னேற்றத்திற்கு ஆதரவாக உள்ளவர்களின் சேர்க்கையும் ஏற்படும். சொத்து சம்பந்தமான சர்ச்சரவு ஏற்படலாம்.

நீதிமன்றத்தில் வழக்காடவும் சந்தர்ப்பம் இருக்கிறது. வெளியில் மன அமைதி இருந்தாலும் குடும்பத்தில் பணச் செலவுகள் அதிகரிப்பால் மனக்கவலை உண்டாகும். தவிர்க்க முடியாத வீண் செலவுகள் ஏற்படும். தம்பதிகள் இடையே மன அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

ஆண்டிறுதியில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அலட்சியமாக செய்யும் காரியங்கள் ஏமாற்றத்தையும் பணவிரயத்தையும் உண்டு பண்ணும். எச்சரிக்கையாக நடந்து கொள்வதன் மூலம் வரும் தீமையை அகற்றலாம்.

(தொடரும்...)

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [14.01.11 முதல் 20.01.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### * மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு. தொழில் நிலையில் அலைச்சல் இழுபறி நிலைகள் அதிகமிருக்கும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சிறு சிறு இழுபறி நிலை அமைந்திருக்கும். குடும்பத்தில் நல்ல சிறப்பான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * இடபம்

இடபராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் நல்ல சிறப்பான முன்னேற்றங்கள் அமையும் பலன் உண்டு. குடும்ப நிலையில் மிகவும் சிறப்பான பலாபலன் ஏற்படும்.

பண வரவு மிகவும் சிறப்பான நிலையில் அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலம் ஏற்படும். பெண்களுக்கு சிறப்பு உண்டு. மாணவர்களுக்கு நன்மையுண்டு.



### * மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சியில் சற்று மத்திமமான நிலைப்பாடுகளே அமையும்.

குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். பண வரவு சற்று சுமாரான நிலைப்பாட்டிலேயே அமையும்.

கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலன்களே ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலனே ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * கடகம்

கடகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். குடும்ப நிலையில் நல்ல முன்னேற்றமுண்டு. தொழில் நிலைகளில் அனுகூலமான பலன் அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளுக்கு உரிய பலன் கிடைக்கும். கடன்நிலைகளில் ஓரளவிற்கு நன்மை அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் கூடிய முயற்சி தேவை. குடும்பத்தில் சற்று சுமாரான மத்திம பலனே ஏற்படும். சிறு சிறு உடற் சுகயீனம், மருத்துவ செலவுகள் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலைகள் இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை இருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன் ஏற்படும். தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் மிகவும் சிறப்பான பலன் அமையும். பண வரவு திருப்திகரமான நிலையும் அமையும் பலனுண்டு. எடுக்கும் முயற்சிகளில் சிறப்பான வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் அமையும். பெண்களுக்கு வெற்றியுண்டு. மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு.



### * துலாம்

துலாராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகமிருக்கும். பண வரவு சுமாரான மத்திம நிலையிலேயே அமையும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு தேவை. பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளிலே நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அனுகூலமுண்டு. குடும்ப நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் ஏற்படும். சகோதரர் வழியில் சிறு சிறு சஞ்சல நிலையிருக்கும். கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலனுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * தனுசு

தனுராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் சிறப்பான வெற்றிகள் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றம் இருக்கும். பண வரவு மிகவும் திருப்திகரமாக அமையும். குடும்பத்தில் மகிழ்வும் நிறைவான பலன்களும் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * மகரம்

மகரராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பண வரவு சற்று மத்திமமானதாகவே இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். குடும்ப நிலையில் சிறு சிறு சஞ்சலம். பணச் செலவு இருக்கும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றம் இருக்கும். மூத்த சகோதரர் வழியில் அனுகூலமான நன்மை ஏற்படும். குடும்ப நிலையில் மகிழ்வும் நிறைவான பலனும் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன் அமையும். பெண்களுக்கு காரிய சித்தி ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * மீனம்

மீன்ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலையில் வேலைப்பளு அலைச்சல் இருக்கும். குடும்ப நிலையில் மனச் சஞ்சலம், மருத்துவ செலவு ஏற்படும். பண வரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை தொடரும். பெண்களுக்கு மனசஞ்சலம் இருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இதன் மூலம் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களை தமிழகத்திலிருந்து வந்த அன்னியர் என்ற ஆழமான கருத்து நிலையை உருவாக்கியுள்ளது. ஆனால் இக்கருத்து மீளாய்வு செய்யப்பட வேண்டியவை என்பதையே அண்மைக் கால ஆய்வுகள் கோடிட்டுகாட்டுகின்றன.

ஏனெனில் சமகால தமிழக வரலாற்று மூலங்களை ஆராய்ந்தால் அங்கு காதலையும், வீரத்தையும் போற்றிப்பாடிய சங்க இலக்கியமும், பிற வரலாற்று மூலங்களும் இலங்கையுடனான வணிக மற்றும் சமய உறவுகளைக் கூறியுள்ளன. ஆயினும் ஆறும் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கை தமிழக அரசியல் உறவு பற்றியோ அல்லது தமிழகத்திலிருந்து தனிப்பட்டவர்கள் இலங்கை மீது படையெடுத்தது பற்றியோ ஒரு இடத்தில் தானும் குறிப்பிடவில்லை. அண்மைக் காலங்களில் தமிழக அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்தோர் இக்காலத்தில் தமிழகத்தின் இயற்கையெல்லை தாண்டி அரச வம்சங்களோ அல்லது சமூகக் குழுக்களோ இலங்கை மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றுமளவுக்கு அங்கு பலமான அரச உருவாக்கம் ஏற்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர் (பூங்குன்றன் 1999). பாளி இலக்கியங்கள் கூறும் தமிழ் மன்னர்களின் பெயர்களை சமகாலத்தில் தமிழகத்தில் ஆட்சி புரிந்த சிற்றரசர்கள், குறுநிலைத் தலைவர்கள் ஆகியோரின் பெயர்களுடன் ஒப்பிடும் போது பெயரடிப்படையிலும் அதிக ஒற்றுமையிருப்பதாகக் கூற முடியாதிருக்கிறது. மாறாக இத் தமிழ்ப் பெயர்கள் சமகால இலங்கைப் பிராமிச் சாசனங்களில் வரும் பட்டம், தனிநபர் சார்ந்த பெயர்களுடன் அதிக அளவில் ஒற்றுமை கொண்டிருப்பதைக் காணலாம் (புஷ்பரட்ணம் 2000:1-30). இதனால் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்ததமிழ் மன்னர்களை இன்னொரு நாட்டிலிருந்து வந்த அன்னியராக மட்டும் பார்க்காது இலங்கையில் சிற்றரசர்களாக இருந்து ஆட்சிக்கு வந்தவர்களாகப் பார்ப்பதற்கும் இடமுண்டு. பேராசிரியர் பத்மநாதன் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த கல்லாட்டநாக, குஜ்ஜநாக, குஞ்சநாக ஆகிய மன்னர்களின் பெயர்கள் தமிழ் மொழியோடு தொடர்புடையவை எனபதற்கு பொருத்தமான ஆதாரங்களை எடுத்துக்காட்டியுள்ளார். (பத்மநாதன் 2006:33-34). ஆயினும் இவர்களைப் பாளி இலக்கியங்கள் இன்னொரு நாட்டிலி ருந்து படையெடுத்து வந்த அன்னி யர் எனக் கூறவிலை. மாறாக இவர்க ளில் பலரும் தென்னிலங்கையில் சிற்றர சர்களாக இருந்தவர்கள் என்றே கூறுகின்றன. ஆகவே இம்மன்னர்களை தென்னிலங்கையுடன் மட்டும் தொடர்பு படுத்தாது சமகாலத்தில் நாகதீபத்தில் சிற்றரசர்களாக இருந்த நாகமன்னர்களுடனும் தொடர்புபடுத்திப் பார்க்க இடமுண்டு.

தமிழக வரலாற்று ஆவணங்களில் ஆறாம் நூற்றாண்டின் பின்னரே இலங்கையுடனான அசியல் தொடர்புகள் படையெடுப்புக்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இதற்கு தொண்டை மண்ணடத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவ அரசு ஒரு பேரரசாக எழுச்சி பெற்றமை காரணமாகும். இவர்கள் ஆட்சியில் எழுச்சி பெற்ற பத்தி இயக்கமும், வணிககணங்களின் தோற்றமும் பண்ணாட்டு ரீதியாகவும் இலங்கை வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட வழி வகுத்தன. பல்ல வரைத் தொடர்ந்து பாண்டியரும், சோழ ரும் தொடர்ச்சியாக

**மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்**

இலங்கையுடன் அரசி யல், பண்பாட்டுத் தொடர்புகளை ஏற் படுத்திக் கொண்டதால் இலங்கைத் தமி ழர் வரலாற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதன் விளைவால் இங்கு வாழ்ந்த தமிழர்கள் அரசியல் பண்பாட்டு ரீதியில் பலமடைவதற்கு சாதகமான சூழ் நிலை கள் உருவாகியது. இது தொடர்பாக பேராசிரியர் இந்திரபாலா தன் கருத்தைப்

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வருமாறு கூறுகிறார் (இந்திரபாலா 2006: 233-34).

'கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் தமிழ் நாட்டில் பல்லவப் பேரரசும், பாண்டியப் பேரரசும் எழுச்சிபெற, அவற்றுக்கு அண்மையில் இருந்த வடக்கு இலங்கை, தெற்கு இலங்கையைக் காட்டிலும், கூடுதலான தமிழ்ச் செல்வாக்கிற்கு இலக்காகியது.

பல்லவ அரசில் வளர்ந்த பண்பாடு வடக்கு வழியாக இலங்கையில் பரவியது. தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த கடல் மீண்டும் ஓர் ஒற்றுமைப்படுத்தும் காரணியாகச் செயற்பட்டது. முதலில் தமிழ்நாட்டின் செல்வாக்குப் பௌத்தம் சார்ந்ததாகவும், சைவம் சார்ந்ததாகவும், தமிழ் மொழி சார்ந்ததாகவும், சமஸ்கிருதம் சார்ந்ததாகவும் அமைந்தது. பின்னர் அது பெரும்பாலும் சைவமும் தமிழும் சார்ந்ததாக மாறியது. இவ்விரண்டு காரணிகளும் வடக்கிலும் கிழக்கிலும் உருவாகிய இனக்குழுவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு பெற்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அங்கு உருப்பெற்றுக் கொண்டிருந்த இனக்குழு, பத்தாம் நூற்றாண்டளவில் உறுதி பெற்று வெளிப்பட்டது'.

பேராசிரியர் கே.எம்.டீ சில்வா பத்தி இயக்கத்தின் செல்வாக்கே இலங்கையில் இந்து, பௌத்த என்ற சமய வேறுபாடு தோன்றி தமிழரும் சிங்களவரும் தமது இனத் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாப்பதில் முனைப்பு பெற்றதுடன், அதன் விழைவால் தமிழர் வாழ்ந்த பிராந்தியங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்கு ஆதரவு வழங்கும் தளமாக மாறியதெனவும் கூறுகிறார் (Silwa 1981: 20-21). இந்த மாற்றங்கள் முதலில் ஏற்பட்டதன் தொடக்க வாயிலாக நாகதீபம் காணப்பட்டதால் இங்கிருந்த நாக அரசமரபிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த மாற்றங்களின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது நாகதீபம் அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்கு ஒரு சவாலாக மாறியதைக் காணமுடிகிறது. இதற்கு தமிழகப் படையெடுப்பாளரின் ஆதரவில் நாகதீபம் பலமடைந்ததே முக்கிய காரணமாகும். (தொடரும்)

## அபிவிருத்தி ....

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்று தான் யாழ்.தேவியின் இறுதி மூச்சு நின்ற கறுப்பு நாள். மூவின மக்களினதும் வாழ்வில் போக்குவரத்தில் கனத்த பாரங்களை சுமந்த இருண்ட நாளாக வர்ணிக்கப்பட்டது.

வடக்கின் பனந்தோப்புக்களும் தெற்கின் தென்னந்தோப்புகளும் யாழ்.தேவியின் பாசத்தின் தூது இடைநடுவே அறுந்தது. இதன் பின் இன்று வரை எமது இளம 'சமுதாயம் அறியாத போக்குவரத்து ஆக மாறிவிட்டது.

பின் ரயிலின் பிரதான எஞ்சின் கப்பல் மூலமாக கொழும்பு கொண்டு செல்லப்பட்டது. இதன் பின் வடக்கு மக்களின் பிரயாணம் என்பது பெரும் சுமையாக பெரும் இடராக மாறியது. கப்பல், விமானம் போன்றவற்றில் பயணம் செய்ய வேண்டிய நிலைக்கு யாழ்.மக்கள் தள்ளப்பட்டனர். சாதாரண வடக்கு மக்களின் வயிற்றில் அடிக்கப்பட்டு அபிவிருத்திகள் அழியத் தொடங்கின. ஆனால், யாழ். தேவி, கொழும்பு - வவுனியா வரையிலான தனது சேவையை இன்றுவரை தொடர்கின்றாள்.

இந்நிலையில், புதிதாக பதவிக்கு வந்த ஜனாதிபதி தேர்தல் பிரகடனத்தில் மஹிந்த சிந்தனை கொள்கை பிரகடனத்தில் முன்வைக்கப்பட்டதற்கு இணங்க வடக்கிற்கான யாழ்.தேவி ரயில் போக்குவரத்தும் மன்னாருக்கான போக்குவரத்தும் புகையிரத்தில் மறு மலர்ச்சியை ஏற்படுத்தும் என கூறியுள்ளார்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான சமாதான பாலமொன்றை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பில் ஜனாதிபதி கூடிய கரிசனை கொண்டு வவுனியா காங்கேசன்துறை வரையிலான ரயில் போக்குவரத்து அபிவிருத்தியினை இந்தியாவிடமும் சீனாவிடமும் வழங்கியயுள்ளதாக கூறப்படுகிறது.

மெய்யான போக்குவரத்து மறுமலர்ச்சி ஒன்று ஏற்படவேண்டுமானால் 2011 இல் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது மூவின மக்களினது பெரு விருப்பமாகும். வடக்கிற்கான ரயில் பாதை புனரமைக்கப்படுவதற்கான ஜனாதியின் எண்ணக்கருவான வடக்கின் நண்பர்கள்(உருது மிருது) எனும் செயற்திட்டம் ஆரம்பித்து வைத்து முடிவடைந்துள்ளது. வடக்கிற்கான புகையிரத் பாதை புனரமைப்பதாயின் 11 புகையிரத நிலையங்களும்17 உப புகையிரத நிலையங்களுமாக 28 புகையிரத நிலையங்கள் மீள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும். வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரை 161 கிலோ மீற்றர் தண்டவாள சிலிப்பர் கட்டைகள் தயாரிக்கப்படவேண்டும். இதனை விட புகையிரத பாலங்கள் சப்பாத்து பாலங்களும் அமைக்கப்படவேண்டும்.

இவ்வாறாக இரு தசாப்த காலமாக ரயில் போக்குவரத்து இன்றி வடக்கு - தெற்கு பாலம் சீர்குலைந்துள்ளது. ஏ-9 போக்குவரத்து முற்றாக செயலிழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மழை காலம் முடிவுக்கு வருகிறது. தை 2011 பிறந்து விட்டது. மெய்யான சமாதானம் நீடித்து நிலைக்க வேண்டும். எமது பொருளாதாரம் வளர வேண்டும். தேசிய உற்பத்தி தேசிய வருமானம் உயர வேண்டும்.

அவ்வாறான பேண்தகு அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் யாழ்.தேவி ரயில் போக்குவரத்திலும் ஏ-9 போக்குவரத்திலும் உறுதியான அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பது அனைத்து மக்களினதும் பெரும் எதிர்பார்ப்பாகும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு



தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட பிரதம விருந்தினர் பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.அ. நடராசா, பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா. இரகுநாதன், அதிபர் கே.இராமஜெயம் ஆகியோர் மாணவர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)



சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அங்கத்தவர்களுக்கு வருமானவரி பற்றி உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரி கே. இராசையா விளக்குவதையும் இறைவரி திணைக்கள உத்தியோகத்தர்கள், மன்ற நிர்வாகத்தினர்களும் வணிக அங்கத்தவர்களையும் படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி நிருபர்)



குப்பிளான் வடக்கு கிராம அபிவிருத்தி அமைப்பின் அலுவலகத் திறப்பு விழாவில் உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம். (படம்:- ஏழாலை நிருபர்)



முத்துதம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற செய்முறையூடாக அறிவோம் எனும் விஞ்ஞானக் கண்காட்சியை பார்வையிடும் ஆசிரியையும் மாணவர்களையும் படத்தில் காணலாம்.



பன்னாலை திருவெம்பாவைச் சபையினரின் சிவதவராயர் ஆலயத்தில் இடம்பெற்ற கலைநிகழ்வின் காட்சி ஒன்றை படத்தில் காணலாம்.



இரண்டு கோடி ரூபா செலவில் சமய, கலை வடிவங்களுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள கோண்டாவில் கிழக்கு, ஆசிமடம் விநாயகர் மணிமண்டபத்தினை படத்தில் காணலாம். (படம்:- யாழ்ப்பாண மேலதிக நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ச்சியை ஏற்படுத்திய ஐ.பி.எல் ஏலம்

உலகக்கிண்ண தொட்ரினை அடுத்து கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரும் விருந்தளிப்பதற்கு தயாராவுள்ளது நான்காவது ஐ.பி.எல். இருபது-20 போட்டி. மைதானத்தை ஆட்டநேரம் முழுவதும் விறுவிறுப்படையச் செய்கின்ற அதிரடியும், வேகமும் நிறைந்த இந்த ஐ.பி.எல். திருவிழா ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முதல் மே மாதம் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. . ஐ.பி.எல். அணிகளும் தங்கள் வீரர்களை தெரிவு செய்து விட்டனர்.

இம்முறை சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், டெக்கன் சார்ஜர்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ், டெல்லி டேர் டெவில்ஸ், ஆகிய அணிகளுடன் புனே வாரியர்ஸ், கொச்சி ஆகிய இரு அணிகளும் இணைந்து பத்து அண்கள் களமிறங்குகின்றன.

இந்நிலையில் இந்த நான்காவது ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்களின் ஏலம் பல அதிரடி மாற்றங்களுடன் நிகழ்ந்தேறியமை கிரிக்கெட் அரங்கில் பெரும் வியப்பினை ஏற்படுத்தியுள்ளது. யாரும் எதிர்பாராத பல மாற்றங்கள் இந்த ஏலத்தில் இடம்பெற்றன.

2008 ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் சபையினால் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) உருவாக்கப்பட்டது. இது உருவாகிய ஆண்டே அனைவர் மனதிலும் இடம்பிடித்த ஒரு போட்டியாக மாறி விட்டது. டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளை பின் தள்ளி தனக்கென்ற ஒரு இடத்தினைப்பதிவு செய்து கொண்டது. விளையாட்டு என்பது அதன் ஆட்டம் முழுவதும் விறுவிறுப்பினை அதாவது ஆடும் வீரர்களிடத்திலோ அல்லது ரசிகர்களிடத்திலோ உற்சாகத்தினை ஊட்டும் வகையில் அமையுமாயின் அது அனைவரின் வரவேற்பினைப் பெற்றதாக அமைந்து விடும்.

அந்தவகையில் அமைந்ததே இருபது ஓவர்களைக் கொண்ட இந்த ஐ.பி.எல். போட்டி. பல நாட்டு வீரர்கள் ஒரு அணியில் விளையாடும் போது அந்த ஆட்டம் சூடு பிடிக்கும் என்பது மறுப்பதற்கில்லை. அந்தவகையில் கடந்த மூன்று ஆண்டுகள் ஐ.பி.எல். போட்டியில் 8 அணிகள் விளையாடி வந்தன. இந்த அணிகளில் வீரர்கள் ஏலம் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு வீரரும் 3 ஆண்டுகள் ஒப்பந்தத்திலேயே தம் அணிகளுக்காக ஐ.பி.எல். இல் ஆடி வந்தனர்.




இந்நிலையில் இந்த ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள 4 ஆவது ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள், ஏலத்தில் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு அணியும் தமது அணியிலுள்ள 4 வீரர்களை தக்க வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கபட்ட நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் போன்ற அணிகளில் டோனி, சச்சின், ரெய்னா, ஹர்பஜன் சிங், மலிங்க, வோர்னே, ஷெவாக் போன்ற முன்னணி வீரர்கள் அவர்களின் அணிகளில் தக்கவைக்கப்பட்டனர். ஏனைய வீரர்கள் பொது ஏலத்திற்கு வந்தனர்.

கடந்த 8,9 ஆம் திகதிகளில் வீரர்களின் ஏலம் நடைபெற்றது. 10 அணிகள் பங்கேற்கவுள்ளமையினால் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய ஏலம் பல அதிரடி மாற்றங்களை நடத்தி முடித்துள்ளது.

அந்த வகையில் முதல் நாள் ஏலம் அதன் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்தியது. முதல் வீராக இந்திய அணியின் இளம் வீரரான கம்பீர் அறிவிக்கப்பட்டார். இவரை ஏலத்தில் எடுப்பதற்கு புனே, மும்பை அணிகளிடையே கடும் போட்டி நிலவியது. இநிலையில் உட்புகுந்த கொல்கத்தா அணி அதிக தொகையை கொட்டி (11.04 கோடி) அவரை தமது அணிக்கு தேர்வு செய்தது.

கடந்த முறை நடைபெற்ற ஏலத்தில் 7.5 கோடி ரூபாவே அதிக விலையில் வீரர் வாங்கப்பட் விலையாக இருந்தது. இந்த சாதனையை முறியடித்து இம்முறை கம்பீர் அதிகவிலையில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்குத் தெரிவானார். இவ்வாறு ஆரம்பமே அதிர்ச்சியளிக்க ஏனைய வீர்களிடத்திலும் போட்டி அதிகரித்தது. இந்நிலையில் 6.90 கோடிக்கு ஜயவர்தன, 9.66 கோடிக்கு யூசுப்பதான், 4.99 கோடிக்கு முத்தையா முரளிதரன் என முதல் நாள் சூடுபிடித்தது.

ஏலத்தின் இரண்டவது நாளிலும் வீரர்கள் அதிக விலையில் ஏலம் போனார்கள். இதில் கிரிக்கெட் உலகில் பிரகாசிக்காத வீரரான அவுஸ்திரேலியாவின் டானியல் கிரிஸ்ரியனை ஐதராபாத் அணி அதிக விலைகொடுத்து வாங்கியது. இவருக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைவிலை 22 இலட்சமாகும். இந்நிலையில் அவர் 4.14 கோடி ரூபாவுக்கு அவ்வணிக்காக பெறப்பட்டார்.

352 வீரர்கள் பொது ஏலப்பட்டியலில் ஈடுபட்டிருந்த நிலையில் 116 வீரகளே ஏலம் போனார்கள் . ஏனைய வீரர்கள் 10 அணிகளாலும் கைவிடப்பட்டனர். இந்த கைவிடப்பட் வீரர்களில் ஒருவராக கங்குலியும் இடம்பெற்றமை இம்முறை ஐ.பி.எல். இளம் வீரர்களுக்கு கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தி நிற்கின்ற அதேவேளை ஒரு சிறந்த வீரரை அவருடைய விளையாட்டுத் திறனை மழுங்கடிக்கும் நிகழ்வாகவும் இது அமைந்து விட்டதினை தெளிவுபடுத்தி நிற்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday January 14, 2011